தென்மொழி

நன்றே செய்வீர்!

செந்தமிழ்க்குக் காப்பளியா அரசியலைச்
சிதைத்தொழிப்பீர்; தமிழர்க் கென்றும்
சொந்தமிலாக் குலமுறையைக் கடிந்தெறிவீர்;
சோற்றுக்குத் தமிழை விற்றே
எந்தமிழ்க்கு வாழ்வளியா ஏடுகளை
எரியிடுவீர்; தமிழர் நாட்டில்
இந்திக்கு வால்பிடிப்பார் எவரெனினும்
அவர்முகத்தில் உமிழ்வீர் நன்றே!



தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

50 காசு

ஆவணி
தி.பி.1999

தென்மொழி
இலக்கிய இதழ்

திருப்பாதிரிப்புலியூர்.

சுவடி 1. ஓலை 7.

தி. பி. 1994
ஆவணித்திங்கள்.
(1963–ஆகச்டு)

●

சிறப்பாசிரியர்
புலவ, பண்டித
ஞா. தேவநேயப்
பாவாணர்

பொறுப்பாசிரியர்
பெருஞ்சித்திரன்

உறுப்பாசிரியர்
ம. இலெ. தங்கப்பா
மு. சாத்தையா
செம்பியன்

●

உரிமை, வெளியீடு
தாமரை
உலகமுதல்வி

●

அச்சகம்
மித்திரா அச்சகம்
திருப்பாதிரிப்புலியூர்.

தனியிதழ் 50 காசு.

தென்மொழி
இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கு
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாம
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

மொழியுரிமை காப்பது மொழிவெறி ஆகுமா?

நூற்பயிற்சியின்றி வாணிக நோக்கம்
ஒன்றே கருதிய ஒருவன் நூற்பதிப்பாள
ருகை விருப்பதும், மக்கள் நலங் கருதாது
தன்னலம் ஒன்றே கருதிய ஒருவன் தாளா
சிரியருகை விருப்பதும், அரசியல், பொருளி
யல், குமுகவியல் முதலியவற்றில் ஏதுங்
கருத்துக் கொள்ளாத ஒருவன் அமைச்ச
வையில் இடம்பெற்று மக்களை ஆளுதற்
முன் நிற்பதும் இந்நாட்டிலன்றி வேறெ
நாட்டிலும் காணப்பெருத நிகழ்ச்சிகளாம்
அஃதே போன்று, மொழி வரலாறு, மொ
நுணுக்கம் அறியாதவனெல்லாம் மொ
பற்றிக் கருத்தறிவிப்பதும் இந்நாட்டிற்
உரிய வியப்பான செய்தியாகும்.

இந்தியா போன்ற குடியரசு நா
களில் பேராசிரியரையும், கல்வி நூல் வ
லாரையும்விட, பொருள் வன்மையாலு
சொற்புரட்டாலும் அமைச்சராக வருவா
பலர். இன்னும் சற்று விளக்கமாகச் ச
வேண்டுமானுல் முரட்டு ஆட்களைத் து
யாகக் கொண்டு முட்டாள்கள் நாட்
யாள வாய்ப்பளிப்பதே இப்பொழுது ந
முறையில் இருந்து வரும் குடியரசு மு
யாகும். அங்ஙன் ஆட்சிக் கட்டில் ஏ
வாரும் எது எது பற்றி என்னென்ன க
தறிவிக்கலாம் என்றில்லாது அரசி
பொருளியல், கல்வித்துறை, பெ
துறை, முதலியவற்றிலெல்லாம் தாம்

விரும்பியவாறும், தம் தம் அறியாமைக் கேற்றவாறும் கண்ட வாறு பேசித்திரிவதும் பேசியவாறே துணிந்து செய்வதும் இக் குடியாட்சி நாட்டில் நடைபெற்றுவரும் பெரும்பான்மையான நிகழ்ச்சிகளாகும். இத்தகைய முன் பின் முரணான நிகழ்ச்சி களுக்கு எடுத்துக்காட்டுகளே தமிழக அமைச்சரவையின் கல்வித் திட்டங்களும், தில்லி அமைச்சரவையின் படைத் திட்டங்களும், பொருளியல் திட்டங்களும், ஆட்சி மொழித் திட்டங்களும் அவற்றைப்பற்றிய சட்டங்களுமாம். இவற்றுடன் இவ்வரசினர் ஆட்சிப் பொறுப்பேற்ற பதினைந்து ஆண்டுகளுக்குள் இந்நாட்டு அரசியல் சட்டம் பதினேழு முறைகள் திருத்தப் பெற்றிருப்பதே இவர்தம் திட்டவட்டமற்ற ஆணைமுறைக்குப் போதுமான எடுத்துக்காட்டாகும்.

இவ்வடிப்படைக் குழப்ப அரசியல் நிலைகளைப் புரிந்து கொள்வான் ஒருவன், ஆட்சி மொழித்துறையில் நம் அரசியலார் எத்தனை யெத்தனைக் குழப்பங்களை விளைவித்து வருகின்றனரென்றும், அவற்றிற்குப் பொருட்டுகள் எவையெவை என்றும் நன்கு தெளிந்துகொள்வான்.

எல்லை வெறியால் சீனர் நம் நாட்டில் அடி வைத்த இக்கட்டான வேளையிலேயே, இந் நாட்டினர்தம் ஒற்றுமையைக் குலைக்கும் ஆட்சி மொழிச் சிக்கலை ஏற்படுத்தியிருப்பதும், பொன் கட்டுப்பாட்டைக் கொணர்ந்ததும் அவற்றால் எழுந்த மனக் குழப்பங்களையும் மனக் கசப்புகளையும் அச்சீனரின் படைக் குவிப்புகளைக் காட்டியே அடக்க முற்படுவதும், அவ்வாறு அடக்கலாகாதவரைச் சட்டத்தின் வன்முறைகளால் அடக்க முனைவதும் இவ்வாட்சியினர் செய்யும் திட்ட வட்டமில்லாத முடிவுகட்குப் பெருஞ் சான்றுகளாம். தன் வலி, துணை வலி, மாற்றான் வலியுடன் காலமும் கருதாத தில்லியரின் இத்தகைய நடைமுறைகளைக் கண்களை மூடிக்கொண்டு செயல்படுத்துவதே, தமிழகம் உட்பட்ட மாநில அமைச்சரவைகளின் போக்காகவும் இருந்து வருகின்றது. தில்லியமைச்சரவையின் நெறிமுறையற்ற போக்குகளைக் கட்டுப்படுத்தவும் திசை மாற்றவும் மாநில சட்ட மன்றத்திற்கும் மாநில முதல் அமைச்சர்கட்கும் சட்டப்படி உரிமைகள் இருந்தும், பெருந்தலைவர்களின் கடைக்கண் பார்வைக்கும் கணையாழிக் குட்டுக்கும் காத்திருக்கின்றமையால் அதனைத் துணிந்து செய்யாது வாளாவிருக்க வேண்டியுள்ளது. இஃது அரசியல் முறையிலும், குமுகமுறையிலும் ஏற்பட்ட பேரிழுக்கும் பேரிழப்புமாகும்.

இம் முறைகேடான நடைமுறைகளில் ஒன்றே ஆட்சி மொழிச்சட்டமும், அதனைச் செயல்படுத்த அரசினர் கையாளும் சூழ்ச்சி வன்மைகளும் ஆகும். கடந்த கிழமை திரு. இலால்

பகதூர் சாத்திரியார் ''இந்திக்குள்ள ஆட்சி உரிமையை யாரும் தடுத்துவிட முடியாது'' என்று இந்தூரில் பேசியிருக்கின்றார். தன்னுண்மை மிக்க இப்பேச்சில் மொழியுரிமையைவிட மொழி வெறிதான் வெளிப்படுகின்றது! இந்தி தன்னளவில் இருந்து கொண்டு, 'மண்டல்களும்', 'பிரசாரக் சபாக்'களும் ஏற்படுத்தி அதன் வழி தான்வளர்ந்து போக எவரும் தடைசெய்யார். ஒவ்வொரு மொழிக்கும் உள்ள உரிமை அது. கட்குடிப்பவன் ஒருவன் அமைச்சனாக வருவான் ஆகில் அவன் கட்குடிப்பதை யும்விட்டு விடுவானானால் அந்நிகழ்ச்சி மிகவும் பாராட்டக்கூடிய தாகும். அவ்வாறின்றி அவன் புதிய மொந்தையில் பழைய கள்ளையே ஊற்றி ஊற்றிக் குடித்துக் கொண்டிருப்பானாயினும் கவலையில்லை. அதைப்பற்றிச் சிலர் கேட்டாலும் அது உடல் நலத்துக்கென்று மருத்துவரைக் கொண்டு கூறச் செய்யலாம். ஆனால் தான் குடிப்பது போன்றே நாட்டிலுள்ள மக்கள் அனை வரும் குடிக்கத்தான் வேண்டும் என்று கூறுவது அவனுக்கு எத்துணையளவு குடி வெறி தலைக்கேறியிருக்கின்றது என்பது தவிர வேறெதைக் காட்டும்? அவன் தன்னளவில் குடிப்பது குடிப்பற்று என்று வேண்டுமானாலும் சொல்லிவிடலாம். ஆனால் அவன் பிறரிடம் தான் வந்த வேலையை விட்டு விட்டுக் குடி பற்றிப் பேசிக்கொண்டு எல்லாரும் குடித்தே ஆக வேண்டும் என்று கூட்டத்திற்குக் கூட்டம் பேசி வருவது குடிவெறி யன்றி வேறென்ன? இனி அவ்வாறு பேசுவது மட்டுமன்றி ஊர் காவலர் வன்மையால் எல்லா மக்களின் வாய்களிலும் அதை ஊற்றி விழுங்கும்படி செய்வானாயின் அவன் எத்தகைய பேதையா வான்? அத்தகையவன் எல்லா வகையான மக்களும் குடி கொண்டுள்ள ஒரு நிலப்பரப்பைக் கட்டியாளத் தகுதி படைத்தவ னாவானா? இதனை நன்கு எண்ணிப் பார்க்க வேண்டுகின்றோம்.

இந்தி வெறியர்களும் அதற்கு அடிதாங்கிகளும் கண்மூடித் தனமான ஏற்பாடுகளில் ஈடுபட்டு அ ர சி ய ல் பேசவேண்டிய விடத்தும், பொருளியல் பேணவேண்டிய விடத்தும் இந்தியைப் பற்றி விளக்கமளிப்பதும் அதன் வளர்ச்சிக்கெனப் பொருள்களைக் கோடிக்கணக்காக வாரி வீசுவதையும் விட்டு, மற்றவர் அச் செயல்களால் தம் தம் மொழிகளைக் காத்தற்கு வழி வகைகளைச் செய்ய முனைவதை மொழி வெறியென்று கூறுவது அறிவுக்குப் பொருந்துமா என்று ஆய்ந்து பாருங்கள். ''இந்திக்கு ஆட்சி யேறுவதற்கு உரிமை உண்டு'' என்றால், ''என்ன உரிமை அது? எவர் தந்தது?'' என்று கேட்க, பிற மொழியாளர்க்கு உரிமையில்லையா? ஒரு நூறாண்டு தானும் ஆகாத சவலைப் பிள்ளைக்கு உரிமைபேசப் பெறும்பொழுது எல்லை அறியப்படாத காலத்தே தோன்றி, பன்னூறாயிரம் நுண்ணிய சொற்களைக் கொண்டு காலம் வென்ற நூற்றுக் கணக்கான இலக்கிய வளங் கொழுவிய விளக்குறு நூற்களைத் தோற்றி வளர்ந்து, பரந்து,

சிறந்தோங்குவதும் நுண்மை, தண்மை, முன்மை, செம்மை, பொருந்தியதும் ஆன செந்தமிழ்க்கு உரிமையில்லாமற் போய் விட்டதா? குமரி முதல் 'இமையம்' வரை கொடி நாட்டிய உரிமை இன்றில்லாது போயினும் தன் தாய் வீடான தமிழகத் துள் வீற்றிருக்கக்கூட உரிமை இல்லையா? உரிமை உண்டு இல்லை என்ற நிலை வரினல்லாமல் இதனை விளங்கிக் கொள்ளாத வர்க்கு நாம் இரங்குவதல்லாது வேறென்ன செய்யவியலும்?

''தமிழைப் பிறர் அழிக்கவிடோம்; ஆனால் இந்தி புகுத்தப் படுவதைத் தடுப்பின் அதையும் விடோம்'' என்று இங்குள்ள அமைச்சர்கள் புல்லிய குரலெடுத்துப் பேசுவது அவர்கள் தில்லி ஆட்சியினர்க்கு எவ்வளவு கடமைப் பட்டுள்ளனர் என்பதைத் தவிர வேறெதைக் காட்டும்? ''நீ அடிப்பதுபோல் அடி; நான் அணைப்பதுபோல் அணைக்கின்றேன்'' என்று கூறும் இரண்டகச் செயலாகும் இவர் செய்கை.

சட்டம் பேசி, எல்லையில் ஏற்பட்ட சீனர் தம் நெருக்கத் தைக் காட்டித், திட்டங்கள் பேசி, இக்கால் குழப்பஞ் செய்யின் சிறை, நாடு கடத்தல் என்று அச்சுறுத்தி ஒன்றிலும் சாயாத மக்கள்முன் இப்பொழுது உரிமைப் பறையெடுத்து முழக்கமிடும் சாத்திரியார்க்கு ஒன்று சொல்வோம். உரிமை என்பது ஒவ் வோர் உயிர்க்கும் இருப்பது; புல்லுக்கும் பூண்டுக்கும் காக்கைக் கும் குருவிக்கும், ஆட்டிற்கும் புலிக்கும் இருப்பது என்பதை நாங்கள் அறிவோம். உயிருடன் பிணைந்த தன்னுரிமையை மறந்து வாழ்வோன் இந்நில உலகத்துள் ஒருவனுமில்லை. அவன் பிறர் தம்மைக் கட்டுப்படுத்தி தம் உள்ளத்துக் கிளர்ந்தெழும் நல்லுணர்வுகளைப் பிறர் அழிக்க முற்படுங்கால்தான் அவர்மேல் வெகுண்டெழவும் தயங்கான் என்பதை எல்லாரும் அறிவர். உரிமைப் போர் நடத்தி வெற்றிகண்ட ஆட்சியினர்க்கு மட்டுமே அதுபற்றித் தெரியும் என்று எண்ணல் வேண்டாம். அவ்வுரி மைப் போர்க்குப் பல்லாயிரக் கணக்காக உயிர் செகுத்த தமிழ னும் உரிமை பேசக் கடமைப் பட்டவனே. ஆட்சிக் கோல் கையேந்திய தருக்கால் இந்தியைப்புகுத்த உங்கட்கு எவ்வளவு உரிமை உண்டோ, அதைவிட எந்தமிழ்த் தாய்மொழியாந் தமிழைக் கட்டிக் காக்க எங்கட்கும் உரிமை உண்டு; திறமையு முண்டு என்பதையும் தமிழர்களுக்குள்ளேயே தில்லியர்க்குத் தலைகுனிவார் உளராயின் அவர்களல்லர் தமிழர்; அவர்களை நம்பி ஒரு செயலிலும் ஈடுபடல் வேண்டாம் என்பதையும், தீங்கு செயப் பிறர் எடுத்துக் கொள்ளும் உரிமையினும், அத னின்று காத்து நிற்கும் உரிமையே நேர்மையுடையது என்றும், அதுவே வெல்லும் என்றும் கடந்தகால வரலாற்று உண்மைகளை ஆட்சியினா அடிப்படுத்திக் கூற விழைகின்றேம்.

மக்களவை

(இப்பகுதி தென்மொழியின் புகழுரைகளைப் பறைசாற்ற வேண்டும் எனும் நோக்கத்துடன் தொடங்கப்பெற்றதன்று! உண்மைத் தமிழ் நெஞ்சங்கள் எங்கெங்கு உறைகின்றன என்பதையும், அவை தென்மொழியால் எவ்வாறு கிண்டப் பெற்று உயிர்த் தெழுகின்றன என்பதையும் தூங்கும் தமிழர் கட்கும் தீங்குசெய் பகைவர்கட்கும் உணர்த்த வேண்டு வதே இதன் தலையாய நோக்கமாகும். அதுவன்றிப், பிறர் புகழுரைக்கும் மயங்கோம்! புல்லியர்தம் இகழுரைக்கும் தயங்கோம்! — ஆசிரியர்.)

அப்பழுக்கு இல்லாமல் பழுக்கும் அருட்கனி தென்மொழி!

— ஏ. வி. கண்ணன், பெங்களூர்–21.

*   *   *

துடிக்கும் உளமொடு தொடர்ந்து தெரிந்தோர்
படிக்கும் நற்றமிழ்ப் பண்புடைப் பனுவல் .....!

— துரை. கலியபெருமாள், காட்டுக்கூடலூர்.

*   *   *

இதன் வழி நல்லுணர்வு பெற்று அதன் பயனாகப் புல்லுருவிகள் எவருந் தோன்றாது, மொழியை ஒரு கண்ணாகவும் நாட்டை ஒரு கண்ணாகவும் கருதுகின்ற தன்மானத் தமிழர்கள் அடங்கிய எதிர்காலத் தமிழகத்தை விரைவாகக் காண விழைகின்றோம்.

— இளமுருகன் தாமரைமணாளன், ஆதங்குடி.

*   *   *

அழிவென்பதே இன்றித் தென்மொழி அழியாப் புகழொடு தொடர்ந்து வருமாறு காப்புச் செய்ய வேண்டுமாய் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

— இராதாகிருட்டிணன், வேலூர் வ. ஆ.

*   *   *

பாலைநிலந் தன்னிலொரு சுனையைக் கண்டேன்!
　　பன்மீன்கள் கூட்டத்திடை நிலவைக் கண்டேன்;
சோலைக்குள் சிரிக்கின்ற பூக்கள் தம்மில்
　　சொக்கும்நறு மல்லிகையின் மணத்தை உண்டேன்.
கூலிக்குக் கால்பிடிக்கும் கூட்டம் நாணக்
　　கொள்கைக்கே உயிரீயும் உளத்தன் கண்டேன்.
கால்தூக்கி வான்கோழி ஆடும் காட்டில்
　　கானமயில் வந்தாடக் கண்டேன் அம்மா!

— செல்ல. பொன்முடியான், பறம்பை.

*　　*　　*

நந்தமிழர் தம்பெருமை நாட்டுக் குணர்த்திவரும்
உந்தம் செயல்கண் டுளமகிழ்ந்தேன்-முந்துணர்வால்
என்மொழிந் தாலும் இனிதே மொழிந்திடும்
'தென்மொழி'நீ வாழ்க சிறந்து.

— தா. பகவதியப்பன் B. Sc. சென்னை 25.

*　　*　　*

அங்கை மிழற்றும் மதலைமொழி;
　　பருகக் குறையாத் தமிழ்மொழி!
திங்கள் மலரும் தென்மொழி
　　திறந்தால் நிறையும் அகவொளி!

— கணேசன், கருநாடகம்.

*　　*　　*

தமிழும் தமிழர் தரமும் தலைத்தோங்க, அனைவர் கைகளிலும் தவழ வேண்டிய உயரிய ஒப்பற்ற திங்களிதழ்!

— கு. மணிவண்ணன், கம்பார், மலேயா.

*　　*　　*

செந்தமிழ்த்தாய் சீர்குலைக்கப்பட்டிருக்கும் செல்லரித்த ஏடுகளின் நடுவில் தென்றலாய்த், தேன்பாகாய்த் தென்மொழி மலரக் கண்டு மகிழ்வுற்றதென் நெஞ்சம்! வலிவுற்ற தென் தமிழ் உணர்வு! பிறமொழி வேட்கை கொண்டலையும் பித்தர்களின் மயக்கம் தெளிவிக்கும் மாமருந்தே! தெள்ளமுதே! தென்மொழியே! தீங்கனிச் சாறே! வலிவொடும் பொலிவொடும் எழிலொடும் ஏற்றத்தொடும் வாழ்க நீ!

நெல்லை. இல. சேதுராமலிங்கம், சென்னை-2.

*　　*　　*

கொம்புத் தேனினும் குளிர்ந்த இனிமையைத் தனித்தமிழில் நல்கிச் சிறக்கும் தென்மொழியின் செம்மைசான்ற மொழிப்பணி தமிழரின் அற்றைநாள் உயர்வையும் இற்றை நாள் தாழ்வையும் சுட்டுகிறது. தென்மொழியை நவில் தொறும் அது தரும் நயம் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னைய பழந் தமிழ கத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறது. தமிழர் இழந்துவிட்ட மொழி வாழ்வை மீண்டும் பெறல் வேண்டின் தென்மொழியின் வளர்ச்சியை நொடிக்கு நொடி உயர்த்தல் வேண்டும்.

— தென்மொழிச் செல்வி, ஈப்போ, மலாயா.

* * *

அன்புடையீர்,

'பயிற்று மொழி' பற்றித் தங்கள் கருத்தினை ஆடி யிதழில் கண்டு மிக மனமுளைந்தேன். மாணவர்கள் வரவில்லை என்று காட்டினீர்களே அன்றி, ஏன் மாணவர்கள் முன்வரவில்லை என்று தாங்கள் அறிய முயலவில்லை போலும்!

பயிற்றுமொழி தமிழெடுத்துப் பயிலும் மாணவர்கட்குக் கல்வி முடிந்ததும் உடனே அரசுத்துறையில் அலுவல்கள் தரப் படும் என்று அன்றைய அமைச்சர் திரு. சுப்பிரமணியம் சொன்னார்; உறுதிமொழி தந்தார். இன்று எண்பதுக்கு மேற்பட்ட மாணவர்கள் பி.ஏ. பட்டத்துடன் இருக்கின்றனர். அவர்கட்கு அலுவல் தர இன்றைக் கல்வியமைச்சர் ஏதொன்றும் செய்தா ரிலர். முன் பயின்ற மாணவர்கள் நிலையே இவ்வாறென்றால், இனிப் பயிலும் மாணவர் நிலை சொல்லவும் கூடுமோ? மற்றும் ஓரிரு கல்லூரிகளில் மட்டும் பயிற்று மொழியாகத் தமிழை வைத்து, மாணவர்கள் முன்வருவதில்லை என்று கூறுவதெல்லாம் பித்தலாட்டம். தமிழ் பயிற்று மொழியாகப் பயிலும் மாணவர்களை ஆங்கிலம் பயிற்று மொழியாகப் பயிலும் மாணவர்கள் தாழ்வென நினைத்தல் கண்கூடு. இது அரசினர் அறிந்தே செய்யுங் கொலை யாம். குழந்தையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டும் இழிசெயலாம். அனைத்துக் கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்று மொழியாகச் செய்து, அரசுத் துறையில் ஆங்கிலம் பயிற்று மொழியாகக் கற்றோர்க்குரிய மதிப்பைத் தமிழ் பயிற்று மொழியா கக் கற்றோர்க்குந் தருதல் வேண்டும். அந் நாள் வருங்கால் தமிழ் பயில மாணவர்கள் திரண்டு வருதல் திண்ணம்!

''கல்லூரி மாணவன்'' கோவை 5.

(ஆடி யிதழ் ஆசிரியவுரையில் இக்கருத்து பல் வகையானும் வலியுறுத்தப் பெற்றிருக்கின்றது. மேலும் ஒருமுறை அதனைப் படித்துப்பார்க்க வேண்டுகின்றோம்

— ஆசிரியர்.)

வேறென்ன சொல்வது?

● திருவண்ணாமலையில் பணம் வென்றது. —தோற்றவர் பேச்சு.

○ பிறவிடங்களில் வென்றது எது?

● பொற் கொல்லர்களுக்குப் புதுவாழ்வு: உருபா 10 கோடித் திட்டம்: —செய்தி.

○ அவர்களைச் சாகடிப்பானேன்? புதுவாழ்வு தருவானேன்?

● கல்லூரிகளில் மாணவிகளாவது தமிழில் பாடம் கற்க முன்வர வேண்டும். —பக்தவத்சலம்.

○ ஏனெனில் அவர்கள் 'வேலை தாருங்கள்' என்று தொல்லை தரமாட்டார்கள்.

● புதுவை முடிவில் சென்னை அறமன்றம் தலையிடுவதா? —முதலமைச்சர் குபேர்.

○ தில்லிதான் தலையிடலாம்.

● போலி மருந்துகளை ஒழித்துக்கட்ட அரசு முயற்சி. —நடுவணரசு நலத்துறை துணையமைச்சர்.

○ ஒழிக்கப்பட வேண்டியவை மருந்துகளா?

● அமைச்சர்திரு. பூவராகன் நிலத்தில் இறங்கி ஏர் பிடித்து உழுதார். —செய்தி.

○ இதுவரை அவர் எதன்மேல் ஏறியிருந்தாரோ?

● நடைபெறவிருக்கும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஆங்கிலத்திற்குத் தமிழ் அடிமைப்பட்டுக் கிடக்கத்தான் வழிவகைகள் செய்யும். —ம. பொ. சி.

○ ஆங்கிலத்திற்குத் தமிழ் என்றும் அடிமைப் பட்டதில்லை; கடமைப் பட்டுள்ளது.

● உலகப் பெருந்தலைவர்கள் மாநாட்டிற்குத் திட்டம் எதுவும் இல்லை. —கென்னடி.

○ திட்டமெல்லாம் சிறியவர்களுக்கே.

● இடைத் தேர்தல்களில் பேராயக் கட்சி தோற்றதேன்? ஆராய்க. —அரசினர் கட்டளை.

○ இடைக்காலத்தில் மக்கள் முன்னேறி யிருக்கலாம்.

● பொறுப்பான, மேனிலை அரசுப் பணிகளில் உள்ளவர்கள் பொய் சொல்லுவர் என்று கூறமுடியாது. —பக்தவத்சலம் தேர்தல் வழக்கில் தீர்ப்பு.

○ இதற்கு வழக்கே தேவையில்லையே!

வடமொழி வரலாற்றுச் சுருக்கம்.

மொழிப் பெரும் புலவர்
ஞா. தேவநேயப்பாவாணர் எம்.ஏ.

வடமொழியென்னும் சமற்கிருதம் தேவமொழி யென்னும் படுபுரளியைப் பண்டைத் தமிழ் வேந்தர் முற்றும் நம்பியதால், தமிழுக்கும் தமிழர்க்கும் நேர்ந்துள்ள பழிப்பும் கேடும் ஏட்டி லடங்கா; எண்ணத் தொலையா. கடந்த நாலாயிரம் ஆண்டுக ளாகத் தமிழ் படிமுறையாய் மறைக்கப்பட்டு வந்திருப்பதால், வடமொழிக்கும் தென்மொழிக்குமுள்ள உறவு வகை மேனாட்டு மொழி நூல் வல்லாராலும் பிறழவுணரப்பட்டு வருகின்றது. இப் பிறழ்வுணர்ச்சிக்குக் குமரிக்கண்டமுழுக்கும், ஆரிய வருகைக்கு முற்பட்ட தமிழிலக்கியமனைத்தினழிவும், இற்றைத் தமிழரின் குமுகவியல் (சமுதாயத்) தாழ்வும், பெருந்துணை செய்கின்றன.

வடமொழியின் ஐவேறு நிலைகளாவன:–

1) திரவிட நிலை

குமரிக் கண்டத்தில் கி. மு. ஐம்பதினாயிரம் ஆண்டுகட்கு முன்பே முழு வளர்ச்சியடைந்திருந்த தமிழ், வடக்கு நோக்கிச் சென்று திரவிடமாய்த் திரிந்தது. தமிழரால் முதன் முதல் பெயர் குறித்துப் பிரித்துணரப் பெற்றதும், தமிழையடுத்து வடக்கில் வழங்கி வருவதுமான திரவிடமொழி, ஆந்திரமென்றும் தெலுங் கென்றும் சொல்லப்படும் வடுகே. வடுகு என்பது வடகு என்ப தன் திரிபாம். வடகுஎன்பது வடக்கிலுள்ளது என்றுபொருள்படு வது. ஆகவே, முதன் முதல் வடதிசையாற் பெயர்பெற்ற மொழி தெலுங்கே. வடகு என்னும் சொல் வடுகு எனத் திரிந்தது **உயிரிசைவு மாற்றம்** (Harmonic Sequence of Vowels) என் னும் திரிபாகும்.

கி. மு 1000 ஆண்டுகட்கு முன்பே தமிழினின்று பிரிந்து பேர்யதும், தென்னாட்டுத் திரவிட மொழிகட்குள் மிக வடக்கிற் பரவியதும், தென்மொழிக் குடும்பத்திற் பல்வகையிலும் தமிழுக் கடுத்தபடியாய் மதிக்கப் பெறுவதுமான தெலுங்கு, ஆரிய வருகைக்கு முற்பட்ட தொன்று தொட்டே, தமிழில் இல்லாததும்

தமிழுக்கு ஒவ்வாததுமான பல வல்லொலிகளைப்பெற்று ஆரியத் தன்மை யடைந்துள்ளது. தமிழ் வல்லொலிகள், கடுப்பொலி களும் (Voiceless Unaspirates) எடுப்பொலிகளுமாய்த் (Voiced Unaspirates) தெலுங்கில் . பல சொற்களில் திரிந் துள்ளன.

எ. டு:	தமிழ்	தெலுங்கு
	காக்கை	kaki (காக்கி)
	கும்பு	gumpu
	செய்	ceyu
	சல்லி	ஜல்லி (djalli)

இவ்வெடுத்துக் காட்டுச் சொற்களில், தமிழ்க் ககர சகர வொற்றைகள் அவற்றின் இரட்டைகள்போல் வன்மைமிக்கும், பொலிவொலியாய் மென்மை பெற்றும் தெலுங்கில் திரிந்துள் ளமை காண்க.

இனி, இங்க்க (= இன்னும்), கொஞ்ச்செமு (கொஞ்சம்), பெண்ட்டி (பெண்டு), எந்த்த (= எவ்வளவு), கும்ப்பு (கும்பு) என்னும் தெலுங்குச் சொற்களிலுள்ள, ங்க்க, ஞ்ச்ச, ண்ட்ட, ந்த்த, ம்ப்ப, என்னும் கடு வல்லின மெய்ம் மயக்கங்களைத் தமிழில் மருந்திற்குங் காண்ப தரிது.

சில வட சொற்கள் திரவிட வாயிலாய்ப் புகுந்த தென் சொற்களாயிருப்பதுடன், தெலுங்கவடிவின் திரிபாகவுமுள்ளன.

எ. டு:	தமிழ்	தெலுங்கு	வடமொழி
	ஒ, ஒக்க (வேர்)	ஒக்க, ஒக்கட்டி (ஒன்று)	ஏக்க (eka)
	சாரைத்தோலி	சாறத்தோல	சார்த்தூல (வேங்கை)

ஒத்தல் என்னும் தொழிற் பெயரின் முதனிலை யாகிய ஒ என் பதினின்று, ககர மெய்பெற்ற ஒக்க என்னும் நிகழ்கால வினை யெச்சமும் ஒக்கல் என்னும் தொழிலாகு பெயரும் தமிழில் தோன்றும். இவற்றைப்போன்றே ஒக்க (ஒரு) என்னும் தெலுங் கடியும் தோன்றியதாகும். எகர ஒகரக் குறில்கள் இந்தியிலும் அதற்கினமான வடநாட்டு மொழிகளிலும் வேத மொழியிலும் சமற்கிருதத்திலும் இல்லை. ஆதலால், ஒக்க என்பது எக்க என்று திரியின், வடநாட்டு மொழிகளில் ஏக்க என்று வழங்குவது இயல்பே. சொல்லாக்க வுயிர்த்திரிபுகளில் ஒகரம் எகரமாவதும் ஒன்று.

எ. டு:			
	சொருகு	—	செருகு
	மொன்னை	—	மென்னை

வங்க மொழியில் ஒன்றைக் குறிக்குஞ் சொல் ஒக் (ok) என்றே யிருப்பதாகக் கால்டுவெல் ஐயர் குறித்துள்ளார். அதோடு, ஒக்க ஏக்க என்னும் இரு சொற்கட்கும் அடிப்படைத் தொடர்பிருப்ப தையும் அவர் உணர்கின்றார்.

சாரை என்பது வரி அல்லது கோடு. சாரையுள்ள தோலை யுடையது வேங்கையென்னும் வரிப்புலி. அதைக் குறிக்கும் சார்த்தூல என்னும் வடசொற்கு வடமொழியில் வேரேயில்லை.

குமரிக் கண்டத்துத் தோன்றிய தென்மொழி வடக்கே செல்லச் செல்லத் திரிந்தும் வலுத்தும் வடநாட்டில் முழு ஆரியமாய் மாறியிருப்பதனாலும், தெலுங்கு பல ஆரியவியல்புகளைப் பெற்று ஆரியத்திற்கும் தமிழிற்கும் இடையில் வழங்கி வருவதனாலும், வடமொழித் தோற்றத்தின் அல்லது ஆக்கத்தின் முதல்நிலை வடுகென்னும் தெலுங்கே.

2) **மேலையாரிய நிலை**

மேலையாரிய மொழிக் குடும்பம்,

1) தியூத்தானியம் (Teutonic),
2) கெலத்தியம் (Keltic),
3) இத்தாலியம் (Italic),
4) எல்லெனியம் (Hellenic),
5) சிலாவானியம் (Slavonic),
6) இலெத்தியம் (Lettic),

என ஆறு சிறு குடும்பங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள், தியூத்தானியம்,

1) தாழ் செருமானியம் (Low German),
2) உயர் செருமானியம் (High German),
3) கோதியம் (Gothic),
4) காண்டினேவியம் (Scandinavian),

என நான்கு உட்சிறு குடும்பங்களாக வகுக்கப் பெற்றுள்ளன. அவற்றுள், தாழ் செருமானியத்தைச் சேர்ந்தவை,

(1) பிரிசியம் (Frisian), (2) இடச்சு (Dutch), (3) பிளெமியம் (Flemish), (4) பழஞ்சாகசனியம் (Old Saxon), (5) ஆங்கிலம் (English) என்னும் ஐம்மொழிகளும் அவற்றின் வகைகளுமாகும்.

மேலையாரியச் சிறுகுடும்பங்கள் ஆறனுள், ஐரோப்பாவின் மேல் கோடியிலுள்ள **தியூத்தானியம்** இயனிலை காட்டித் தமிழுக்கு நெருக்கமாகவும், அதன் கீழ்கோடியிலுள்ள **எல்லெனியம்**

(கிரேக்கம்) திரிநிலைகாட்டி வடமொழிக்கு நெருக்கமாகவும், உள்ளன. இதனால், வரலாற்றிற்கு முற்பட்ட பண்டைக் காலத்தில் நாவலந் தேயத்தினின்று வடமேற்காகப் பரவிச் சென்ற திரவிடம் ஐரோப்பாவின் வடமேல் மூலையிலுள்ள காண்டிநேவிய நிலத்தை முட்டித் திரும்பி, ஆரியமாக மாறி, தென் கிழக்காக மீண்டு வந்து பாரசீக வழியாய் இந்தியாவிற்குட் புகுந்து, முதலில் வட திரவிடத்தோடும் பின்பு தமிழொடும் கலந்துள்ள தென்பது, உய்த்துணரப்படும்.

3) இடையாரிய நிலை

இடையாரியம் என்பது பழம்பாரசீகம் (Old Persian).

4) வேத ஆரிய நிலை

எகர ஒகரக் குறில்கள் மேலையாரியத்திலுள்ளமையாலும், வேத ஆரியத்திலும் அதன் வழிப்பட்ட சமற்கிருதத்திலும் இல்லாமையாலும், அவையில்லாத இந்தியும் அதன் இன மொழிகளும் வழங்கும் வட இந்தியாவிலேயே ஆரிய வேதம் தோன்றியமை அறியப்படும். பல தென் சொற்களின் வடிவம் மேலையாரியத்தினும் வேத ஆரியத்தில் திரிந்திருப்பது பின்னதன் பின்மையைக் காட்டும்.

5) சமற்கிருத நிலை

ஆரியமொழிகளெனக் கருதப்படும் வடநாட்டு மொழிகளின் அடிப்படை தமிழாய் அல்லது திரவிடமாயிருப்பதனால், வேத மொழியிலேயே பல தென் சொற்கள் கலந்துவிட்டன. வேத ஆரியப் பிராமணர் தென்னாடு வந்து தமிழைக் கற்றபின், சமற்கிருதம் தோன்றியது. வேத மொழி வழக்கற்றுப் போனபின், அதன் இலக்கணத்தைப் பெரும்பாலும் தழுவி, அக்காலத்து வடநாட்டு மொழிகளாகிய பிராகிருதத்தினின்றும், தென்னாட்டுத் திரவிடத்தினின்றும், தமிழினின்றும், பல்லாயிரக்கணக்கான சொற்களைக் கடன் கொண்டும் இடுகுறியாகவும் கரணிய (காரண)க்குறியாகவும் புதுச் சொல் புனைந்தும், வேத ஆரியர் அமைத்துக்கொண்ட அரைச் செயற்கையான இலக்கிய நடை வழக்கே (Literary dialect) சமற்கிருதமாம். பிராகிருதம் என்பது முந்திச் செய்யப்பட்டது என்னும் பொருளது; சமற்கிருதம் (சமஸ்க்ருதம்) என்பது நன்றாகச் செய்யப்பட்டது என்னும் பொருளது. ஆகவே, இவ்விரண்டதுள் முந்தியது பிராகிருதம்; பிந்தியது சமற்கிருதம். வரலாற்றை அறியாமலும், மொழிகளின் அடிப்படையை நோக்காமலும், பிராகிருத மொழிகளில் திரிந்துள்ள ஒரு சில சமற்கிருதச் சொற்களின் வடிவைக் கொண்டு, மகன் தந்தையைப் பெற்றான் என்பதுபோல், சமற்கிருதத்

தினின்று பிராகிருதம் வந்ததென்று ஆராய்ச்சியில்லாதாரை ஏமாற்றி வருகின்றனர் வடமொழியாளர். வேத ஆரியம் வேறு; சமற்கிருதம் வேறு. இவ்வுண்மையைப் பலர் இன்னும் அறிந்திலர். இவ்விரண்டிற்கும் வேறுபாடாவன.

	வேதமொழி	சமற்கிருதம்
1)	முந்தியது.	பிந்தியது.
2)	பெரும்பாலும் செய்யுள் வடிவானது.	உரைநடையும் செய்யுளுங் கொண்டது.
3)	எழுத்தில்லாதது.	எழுத்துள்ளது.
4)	சொல்வளமில்லாதது.	சொல்வளமுள்ளது.
5)	தமிழொடு நேரடித் தொடர்பில்லாதது.	தமிழொடு நேரடித் தொடர்புள்ளது.
6)	ஏராளமான நிலைப்பாட்டு வினையெச்ச வடிவங்களும் (Subjunctiveforms) பத்து நிகழ்கால வினையெச்சங் களும் (Infinitive forms) கொண்டது.	ஒரு சில நிலைப்பாட்டு வினையெச்ச வடிவங்களும் ஒரே யொரு நிகழ்கால வினையெச்ச வகையும், வேத மொழியிலில்லாத, வட்டவழி (Periphrastic) எதிர்கால நிலையுங்கொண்டது.
7)	வேதமே யுள்ளது.	பல்துறைப்பட்ட இலக்கிய முள்ளது
8)	பெரும்பாலும் பிராமணர்க் குரியது.	நால்வகுப்பார்க்குமுரியது.
9)	அருஞ்சொற்கள் மிக்கது.	அருஞ்சொற்கள் குன்றியது.
10)	இசையொடு கூடியது.	இசையொடு கூடாதது.

வேத ஆரியத்திற்கும் சமற்கிருதத்திற்குமுள்ள வேறுபாடு, ஒருவகையில், பழைய ஆங்கில சாகசனியத்திற்கும் (Anglo-Saxon) இக்கால ஆங்கிலத்திற்குமுள்ள வேறுபாட்டை யொக்கும். ஆயின், முன்னவை யிரண்டும் வழக்கில்லாதவை; பின்னவை யிரண்டும் வழக்குள்ளவை.

வேத ஆரியம் வழக்கற்றுப் போனமைக்குக் கரணியங்கள்:

1) வேதமொழியின் அளவிறந்த இறுதிநிலை (விகுதி) வளர்ச்சி.
2) வடநாட்டு மக்களிடை வேத ஆரியரின் சின்னஞ் சிறுபான்மை.
3) பொது மக்கட்கு வேதமொழி எவ்வகையிலும் தேவையின்மை.

வேத ஆரியமும் சமற்கிருதமும் ஒருங்கே கீழையாரியம் எனப்படும். அடுத்த கட்டுரை சமற்கிருதவாக்கம் பற்றியது. *

நிறங்கள்.

நிறங்கட்கு எண்ணங்களை இயக்கும் ஆற்றல் உண்டா எனில் உண்டு என்றே கூறலாம். சில நினைவுகளைத் தோற்று விக்கவும் சிதைக்கவும் ஊக்கத்தைத் தூண்டவும் ஒடுக்கவும், அமைதியைக் குலைக்கவும் உண்டாக்கவும் நிறங்கட்கு ஆற்றல் உண்டு.

உந்து வண்டி ஓட்டுவோர், கரிய, நீல, பச்சை நிற வண்டிகளைவிட, மஞ்சளான, சிவந்த அல்லது செம்பழுப்பு நிறமான வண்டிகளைக் காண்கையில் அவற்றை முந்தவேண்டும் என்ற ஆவலால் உந்தப் பெறுகின்றனர். ஒரே இடத்தில் உள்ள சிவப்பும் நீலமுமான இரண்டு உடைகளைத் தொலைவினின்று நோக்கின் சிவந்த உடை மற்றதினும் அண்மையாகத் தோன்று கின்றது.

நிறங்களின் இத்தன்மைகளை நன்கு உணர்ந்த வாணிகர் இன்று பல்வகையாலும் மக்களைக் கவரும் வகையில், நிறங்களை அவற்றின் அழுத்த மெலித்தங்களோடு பயன்படுத்திப் பல வகையிலும் ஊதியம் பெறுகின்றனர்

செம்மை நிறம் உயிரைத் தளிர்ப்பிக்க வல்லது; மூளையினை யும், நாடி நரம்புகளையும் ஊக்கி, உணவு வேட்கையினையும் மிகுக்கின்றது.

இளஞ் சிவப்பின் வண்ணங்கள் (Shades) பலவும் விழாக் கோலம் காட்டுகின்றன.

மஞ்சள் நிறம் வலிவூட்டவல்லது. உளக்களிப்புக்கும் எல் லாம் நன்றாக அமைந்துள்ளன என்ற நிறை வுணர்வுக்கும் அடையாளமாகின்றது.

இயற்கை வண்ணமான பசுமை ஆறுதல் ஊட்டவல்லது புத்துணர்வளிப்பது; கிளர்ச்சியை அடக்குவது.

நீலம் நடுநிலையமைதியை உண்டாக்குகின்றது; முறுக்கி னைத் தளர்த்திச் சோர்வு போக்குகின்றது.

சாம்பல் நிறம் எதிலும் ஒட்டாத நிலைக்குச் சான்றாகும். உணர்ச்சிக்கு வயப்படாத நிலையை ஆக்குவிக்கின்றது.

கருஞ் சிவப்பு, மறை பொருளியல்பும் நாடகவியல்பும் வாய்ந்தது.

நிறங்களின் பொதுவியல்புகள் இவையாயினும் அவற்றின் பல்வேறு கலவை வகைகள் வேறுமாறுதல்களையும் விளைவிக்கக் கூடும்

ஒருவகை மஞ்சள் நிறம் மலிவுத் தன்மையையும் நோய் உணர்வையும் காட்டுகின்றது. அந்நிறத்தில் சிறிதே மாற்றம் விளைவித்தால் வெது வெதுப்பும், பொன்னும் கதிரொளியும் நினை

வுக்கு வருகின்றன. துணியின் இழை நெய்வு தானும் நிறத்தியல்பை மாற்றக்கூடும் ஆழ்ந்த நிறமும்கூட, முருடான இழை பெய்த துணிகளில் வறட்சியாகவும் கடுத்தமாகவும் காட்சிதரும். நுண்ணிழைத் துணியிலோ ஒளிபெற்றுப் பளபளப்பாகவும் பகட்டாகவும் துலங்கும். மற்றும் மாற்று வண்ணத்தாலும் இயைபு வண்ணத்தாலும் நிறங்களின் இயல்பு பெரிதும் மாறக்கூடும்.

சில வகைப் பச்சைவண்ண ஆடை கன்றிய சிவந்த உடற்குப் பொருத்தமாகும்.

மெல்லிய எலுமிச்சை மஞ்சள் சற்று இருண்ட உடற்கு ஒளியூட்டும். இளஞ்சிவப்புப் பொதுவாக நன்றாயினும், துலக்கமான இளஞ்சிவப்பு வெளிறிய வுடலின் வெளிற்றுத் தன்மையை மிகைப்படுத்திக் காட்டும். இத்தகைய உடலினர் சிவப்பின் பல வகைகளிலும் உடையணிந்தாற் சிறப்பர்.

குழல் நிறமும் உடல் நிறமும் மிகவும் வேறுபாடாக அமைந்த பெண்டிர் பச்சை அல்லது குங்குமச் சிவப்பு நிறம் அணியலாம்.

கருமையும் வெண்மையும் பொதுவாக எல்லார்க்கும் பொருந்துவனவே. எனினும் நரைதிரை தோன்றிய முதியோர் கருப்புடை அணிந்தால், முகத்தொளி மங்கி வறட்சி தோன்றும்.

தோலின் நிறம் ஒரே நாளில் பல மாறுதல் அடைகின்றது. காலையில் வெளிறியும் நண்பகலிற் சிவந்தும் மாலையில் மங்கியும் இரவில் மீண்டும் வெளிறியும் காணப்படும்.

நண்பகற் கேலாவுடை மாலையிலும், காலையில் ஒவ்வாவுடை மாலையிலும் பொருத்தமாதல் உண்டு. — READER'S DIGEST.

அன்பர்கட்கு:

பாவாணர் அவர்களிடம் நேரடித் தொடர்பு கொள்ள விரும்புவார், கீழ்க்கண்ட முகவரிக் கெழுதுக:

ஞா. தேவநேயப்பாவாணர்
சி. 79. ஆக்சிலியம்
கல்லூரிச் சாலை;
காட்டுப்பாடி நகர்விரிவு.
(வ. ஆ.)

சொல் விளக்கம்.

மலர்தலும் கூம்புதலும்.

பூக்கள் மலர்வது தம் முகத்தைத் திறப்பதுபோலும், அவை குவிவது அதை மூடுவது போலும் இருத்தலாலும்; பகலில் மலர்ந்து இரவில் கூம்பும் இலைகளும் மலர்களும் பெரும்பாலும், மலரும்போது மேனோக்கியும், கூம்பும்போது கீழ்நோக்கியும் இருத்தலாலும், மாந்தன் மேனோக்கிப் படுத்திருத்தல் மலர்ந்த நிலைக் கொப்பாகவும், கீழ்நோக்கிப் படுத்திருத்தல் கூம்பிய நிலைக் கொப்பாகவும், சொல்லப்படும்.

மலர்தல் = முகம் மேலாதல். மலர்த்தல் = முகத்தை மேலாக்குதல்.

மலர் — மல்லார் — மல்லா, மல்லார்த்தல் = முகம் மேலாதல். மல்லாத்துதல் = முகத்தை மேலாக்குதல்.

மல்லாந்து படுத்தல் மல்லாக்கப் படுத்தல் முதலிய வழக்குகளைக் காண்க.

கும்பு — குப்பு — குப்புறு. குப்புறுதல் = முகங் கவிழ்தல். குழந்தை குப்புற்றுக் கொண்டது, முகங் குப்புற விழுந்தான், என்று கூறுவது வழக்கு.

குவி — கவி. கவிதல் = குப்புறுதல், தலைகீழாதல்.

கவி — கவிழ். கவிழ்தல் = ,, ,,

" கவிழ்ந்து நிலஞ்சேர அட்டதை" (புறம். 77)

குடம் கூடை முதலியவை பொதுவாக வாய் மேனோக்கிய வாறு வைக்கப்படும். அவை தலைகீழாதல் கவிழ்தல் என்றும், அவற்றைத் தலைகீழாக வைத்தல் கவிழ்த்தல் என்றும், கூறப் படும்.

கவிதல் = தலைகீழான கூடைபோல் வளைதல்.

கவித்தல் = தலைகீழான கூடையைப் பிடித்தல் போல் குடை பிடித்தல்; கூடையைக் கவிழ்த்தல் போல் மகுடத்தைத் தலையிலணிதல்.

கவி — கவிகை = குடை.

கவிகண் = குடங்கையால் மறைக்கப்பட்ட கண்.
முகில் குடைபோல் வளைந்து மூடுதலும் கவிதல் எனப்படும்.

(முதல்தாய் மொழி.)
— ஞா. தே.

தமிழ் மொழிவழி அரசியல்.

(இது, கலைச் சொல்லாக்கப் புலவர் தி. கீ. இராம லிங்கனுர் கோவையில் 1958-இல் நடந்த சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டில் ஆற்றிய உரை. தேவை கருதி ஈண்டு மீண்டும் வெளியிடுகின்றேம்.
— ஆர்)

அறிவிற்சிறந்த தலைவர் அவர்களே! அன்பார்ந்த அறிவிற் பெருஞ் செல்வர்களே! என்ன ஆகுமோ என்று அஞ்சிக் கொண்டிருந்தோம். நம்முடைய மாநாட்டைப் பற்றியல்ல; தமிழ் ஆட்சிமொழி யாவதைப் பற்றி. நல்லகாலமாக இப்பொழுது நமது அரசினர் தமிழை ஆட்சிமொழி யாக்குவதென்ற முடிவுக்கு வந்து விட்டனர். அதற்கான சட்டம் வந்தாயிற்று. அதற்கான ஏற்பாடுகளை ஒருவாருகச் செய்து கொண்டிருக்கின்றனர். அப்படித் தயக்கம் நேர்ந்தபோது பலர் பேசிக் கொண்டார்கள்: தமிழிலே ஆட்சி செய்ய முடியுமா? ஆட்சி செய்வதற்குரிய சொற்கள் எல்லாம் தமிழ்மொழியில் இருக்கின்றனவா? இல்லாவிட்டால் ஆக்கிக்கொள்ளவாவது முடியுமா? என்று பலர் ஐயப் பட்டுக் கொண்டிருந்தனர். **ஓர் ஆட்சியைத் திறம்பட நடத்துவதற்கு இந்தக் காலத்திலேகூட தமிழ் மொழியில் சொற்கள் இல்லையென்று சொன்னுல் வேறு மொழியில் சொற்கள் காண முடியாது. என்றுதான் சொல்ல வேண்டும்.**

உலகத்திலே ஆட்சிமுறை இன்னதென்று தெரியாத காலத்திலே – ஏன் ஆடையே இன்னதென்று தெரியாதிருந்த காலத்திலே நம்முடைய நாட்டிலே சிறந்த முறையிலே ஆட்சி நடந்து கொண்டிருந்தது என்று வரலாறுகூற நாம் அறிகிறேம். வரலாற்றுக்கு முந்திய காலத்திலேகூட ஏறத்தாழ 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட நம்முடைய நாட்டிலே இருக்கின்ற சில அகழ் பொருள்களை ஆராய்ந்து பார்த்தவர்கள், நல்லரசுக்காலம் நிலவியிருக்க வேண்டும் என்று சொல்லுகின்றனர். நம்பத்தக்க சான்றுகள் எல்லாம்கிடைத்திருக்கின்றன. அரசு இன்றை முறையிலே அல்லாமல் பரந்த முறையிலே நடந்து கொண்டிருந்தது என்பதைப் பார்க்கின்றேம். போரை எடுத்துக் கொண்டால் நிலப் படை மட்டுமன்று, கடற்படையும் இருந்திருக்கிறது. போருக்குரிய கப்பல்களையெல்லாம் அயல் நாடுகளிலிருந்து விலைக்கு வாங்கியோ இரவல் வாங்கியோ நடத்திக் கொண்டிருந்தார்கள் என்று சொல்ல முடியாது. இங்கேயே செய்திருக்க வேண்டும். ஒரு போர்க் கப்பலைச் செய்வது என்று சொன்னுல் இந்தக் காலத்துப் போர்க் கப்பலோடு ஒத்து அதைப் பார்க்க முடியா

விட்டாலும் அக்காலத்து எழுந்த போர்க் கப்பலை எவ்வளவோ காப்போடு செய்திருக்க வேண்டும். கடலிலே சென்று போரிடுவ தற்கு மாற்றுரை வெல்வதற்குரிய சிறந்த முறையிலே போர்க் கப்பல்கள் அமைந்திருக்க வேண்டும். அந்தக் கப்பல்களை யாக்குவதற்குரிய கப்பற் கலையெல்லாம் அறிந்தவர் நம் நாட்டில் இருந்திருக்க வேண்டும். அந்தக் கலையைப் பற்றிய சொற்கள் எல்லாம் நமது மொழியிலே நூல்களிலே இருந்திருக்க வேண்டும். அதற்குரிய சிறு சிறு பகுதிகள், பெரிய பகுதிகள் அவ்வளவுக்கும் தமிழிலே பெயர் இருந்திருக்க வேண்டும்.

வான்படை அந்தக்காலத்தில் இருந்ததோ இல்லையோ, ஆனால் வானவூர்திகள் இருந்திருக்கின்றன என்று கதையிலாவது நமக்குத் தெரிகிறது. மணிமேகலையிலே படிக்கிறோம், இங்கிருந்து வானவூர்திகளிலே சென்ற செய்திகளைப் பற்றிஎல்லாம். இப்படி எல்லாம் பார்த்தால் ஒரு ஆட்சி முறையிலே என்னென்ன வேண்டுமோ அந்த வகைக்கெல்லாம் சொற்கள் தமிழிலேயே இருந்திருக்க வேண்டும் இப்பொழுது அவை நமக்குக் கிடைக்க வில்லை. கிடைக்காவிட்டாலும் ஆக்கிக்கொள்ளுகிற ஆற்றல் தமிழ் மொழிக்கு இருக்கிறது என்பதை நாம் மறுத்து விட முடியாது. அதை எத்தனையோ சான்றுகளால் இன்றைக்குக்கூடப் பார்க்கலாம். படித்தவர்களால் அதை ஆக்கிக்கொள்ள முடியாமல் இருக்கலாம். படித்தவர்கள் என்று நான் இங்குக் குறிப்பிடுவது தமிழையும் பிறமொழிகளையும் படித்துக் கெட்டுப் போன தமிழர்களை. அப்படிக் கெட்டுப்போன தமிழர்களாலே அது முடியாமல் இருக்கலாம். நல்ல தமிழர்கள் இன்றைக்குக் கூட ஆக்கிக் கொள்ளுகிறார்கள் என்பதை நான் அறிந்திருக்கிறேன்.

நண்பர் சொன்னார். ஆங்கிலத்திலே காஸ்வே என்பதற்குத் தமிழிலே என்ன சொல்லலாம் என்று திகைத்துக் கொண்டிருந்ததாக-அவர்கள் ஒரு நாட்டுப்புறப்பக்கம் செல்ல நேர்ந்ததாம் அங்கே பேசிக் கொள்ளுகிறார்கள்-இப்போது இந்த ஆற்றுக்குத் தரைப்பாலம் போட்ட பிறகு வண்டி போவதற்கே இடர்ப்பாடு இல்லை என்று. இதைக்காட்டிலும் வேறென்ன சொல்லலாம் காஸ்வேயுக்கு? நண்பர் ஒருவர் சென்னையில் என்னோடு ஓர் இரவு தங்கியிருந்தார். கொசு மிகுதியாக இருந்தது. 'ஏன் இராமலிங்கம், இங்குக் கொசு மிகுதியாக இருக்கிறதே' என்று என்னைக் கேட்டார். அதற்கு "இங்கு Underground Drainage இல்லை, அதனால்தான் இப்படி இருக்கிறது" என்று சொல்ல என் நா எழுந்தது. அதற்குள் அவரே-படிக்கத் தெரியாத-கெட்டுப் போன தமிழராகாத-அவரே சொன்னார் "இங்கே புதை சாக்கடை இல்லை போலிருக்கிறது. அதனால்தான் அப்படி" என்று சொன்னார். இந்தப் புதை சாக்கடையைக் காட்டிலும் Under-

ground Drainage க்கு வேறு என்ன தெளிவாகச் சொல்லிவிட முடியும்?

காஸ்வே அன்றைக்கு இருந்ததோ இல்லேயோ, நமக்குத் தெரியாது. இன்றைக்குச் சொல்கிறார்கள், ''காஸ்வே''க்குத் தரைப்பாலம் என்று. இப்படியே எத்தனையோ சொற்களுக்குச் சொல்லலாம். இப்படிச் சொற்களைப் புதிதாகச் செய்துகொள்ளு கின்ற ஆற்றல் இன்னமும் தமிழர்களுக்கு இருக்கிறது; தமிழ் மொழிக்கு இருக்கின்றது, என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதேபோலத் தமிழ் இலக்கியங்களிலே ஏராளமான சொற்கள் இருக்கின்றன. அவற்றிலே நல்ல தமிழ்ச் சொற்களாக இருக் கின்றவைகளை யெல்லாம் தேர்ந்தெடுத்து அமைத்துக் கொள்ள லாம். மூன்றுவகையிலே சொற்களை ஆக்கிக் கொள்வது நல்லது. ஒன்று, இலக்கியத்திலே தேர்ந்தெடுப்பது. இரண்டு, கல்வெட்டு களிலே இருக்கின்ற சொற்களைத் தேர்ந்தெடுத்து ஆக்கிக்கொள் வது. இவையில்லாமலே இயல்பாகவே நாட்டில் இன்னொன்று இருந்து கொண்டிருக்கின்றது. ஆக்கிக்கொள்வதற்கு ஏற்கனவே ஆக்கப்பெற்றுச் செலவாணியில் இருக்கின்ற சொற்கள்.

இக்காலத்தில் ஜோடி, ஜதை என்று சொல்லுகிறோம். ஜோடி, ஜதையை விட்டால் நமக்கு வேறு சொல் இருப்பதாகத் தெரியவில்லை தமிழன் ஜோடி ஜோடியாய் இருந்திருக்கிறான். ஜதை ஜதையாகப் போயிருக்கிறான் ஆணும் பெண்ணுமாக. அகம் புறம் என்றெல்லாம் படிக்கிறான். ஆனால் இங்கே ஜோடியை விட்டால்-ஜதையை விட்டால் சொல்லேக் காணோம் போலிருக்கிறதே என்று திகைப்பாயிருக்கிறது. நூலிலே பார்த் தால் ''இணையார் திருவடி'' என்று அப்படித் தலைமேல் வைக் கின்ற சொற்கள் எங்கேயாவது தனியாய் இருக்கப் பார்க்கிறோம். 'இணை என்பது புரியாதசொல். அதுநூலிலே இருக்கின்ற சொல்' வழக்கத்திலே 'ஜோடி' வந்துவிட்டது என்று சொல்லலாம். சிதம்பரத்திலே இருக்கும்போது நான் ஒருவரைப் பார்த்துக் கேட்டேன். இந்த மாடுகள் எப்படி வாங்கினீர்கள் என்று? 'என்னெங்க முன்னெல்லாம் ஓரிணை மாடு 50 உருபாவுக்கு வாங்கி விடலாம். இப்போது 250 உருபா கொடுத்து வாங்கின துங்க' என்றார். எனக்கு இந்தமாடு 250 உருபாவென்றது காதிலே விழவில்லை. இந்தஓரிணைமாடு என்றாரல்லவா? 'என்ன மாடுங்க, என்ன வாங்கினீங்க' என்று கேட்டேன். ஓரிணை மாடுங்க (One pair of bulls) என்றார். ஒரு ஜோடி மாடு என்று சொல் வோம். அதையே எழுதப்படிக்கத் தெரியாதவர், இணை என்று சொல்லுகிறார். நூலில் தான் இருக்கிறது என்பதில்லை. நாட் டிலே வழக்கத்திலே இந்தச் சொல் இருக்கிறது.

அப்படியே குடந்தையிலே நான் இருந்தபோது அங்கே இருந்த ஒருவரை அவருடன் கூடப் பிறந்தவர்களைப் பற்றிக்

கேட்டேன். 'அண்ணன் ஊரிலே இருக்கிருர்' என்று சொன்ஞர். ''என்ன செய்கிருர்'' என்றேன். 'பயிர்த் தொழில் செய்கிருர்' என்ருர். சொந்தமாகச் செய்கிருரா, அல்லது வாரத்திற்குப் பயிரிடுகிருரா' என்றேன். 'சொந்தமாகப் பயிரிட்டு இருக்கிருர்' என்ருர். 'அப்போது மாடு வேண்டுமே' என்றேன். 'அவர் ஈரிணை மாடு வைத்திருக்கிருருங்க' என்ருர். ஈரிணை மாடு வைத்திருக்கிருர் என்று அவர் நன்ருகச் சொன்ஞர் நல்ல காலமாக, இன்னும் அதைப் போன்ற ஆட்கள் நிறைய இருக்கிருர்கள் நம் நாட்டிலே.

ஏதோ நாம் சில சொற்களைப் பழகி வைத்துக்கொண்டு இந்தச் சொற்கள்தாம் தெரியும்; இந்தச் சொற்கள்தாம் புரியும்; இதுதான் தமிழ்; மற்றதெல்லாம் எளிதில் புரியாது; விளங்காது என்று நம்மையே நாம் ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம். ஆஞல் நல்ல காலமாக, நாட்டிலே அப்படி 90 பேர் இருக்கிருர்கள். இதைப் போல் ஏராளமாக நம் நாட்டிலே சொற்கள் இருக்கின்றன இப்பொழுது நாம் என்ன செய்ய வேண்டுமென்ருல் இலக்கியங்களிலிருக்கின்ற சொற்களையும் கல்வெட்டுச் சொற்களையும் இலக்கியத்திலே வல்லவர்கள் ஆழ்ந்து படித்தவர்களைக் கொண்டு திரட்ட வேண்டும். இப்படி நாட்டு வழக்கிலே இருக்கின்ற சொற்களை அங்கே இருக்கின்ற ஆசிரியர்கள் ஊர்த்தலைவர்கள் (Village Heads) தமிழாசிரியர்கள் முதலாஞேரை அங்குள்ள சொற்களை எல்லாம் திரட்டி அனுப்பும்படியாக அரசினரே ஓர் ஏற்பாடு செய்யலாம். அப்படி அவ்வப்பொழுது அனுப்பிக்கொண்டே இருக்க வேண்டும். ஒரு முகவரியைக் கொடுத்து அனுப்பச் சொல்லலாம். நிறையச் சொற்களை அனுப்புகிறவர்களுக்கு ஏதாவது பரிசுகூட கொடுக்கலாம். நாட்டிலே இருக்கிற புதுச்சொற்களைப் பந்தடை, சேத்தி, இணை இந்த வகையான சொற்களையும் திரட்டலாம். இந்த மூன்று வகையிலும் கிடைக்காத சொற்களையும், பிற நல்ல சொற்களையும் உண்டாக்கிக் கொள்வதற்குரிய ஆற்றல் தமிழ்மொழிக்கு இருக்கிறது. நல்ல தமிழுள்ளம் படைத்தவர்களை, ஆங்கிலமும் தெரிந்தவர்களை இதற்கு நாம் அழைத்துப் பயன் பெறவேண்டும்.

நான் ஈரோட்டிலே கொஞ்ச நாள் இருந்தேன். மாலையிலே அங்கே பணியாற்றுகிறவர் ஒருவர் வந்தார். இரவு நேரம்; 'சாப்பிட்டாச்சா' என்று கேட்டேன். 'சாப்பிட்டேன்' என்று சொன்ஞர். 'ஐயா என்ன சாப்பிட்டீர்கள்' என்றேன். 'நான் அரிசிச் சோறு சாப்பிட்டேன்' என்ருர். அரிசிச் சோறு என்று சொன்னவுடனே எனக்கு வியப்பாக இருந்தது. அவர் சோறு என்றதால் அரிசியை வேகவைத்ததுதான் சோறு என்று எண்ணிக் கொண்டிருந்தேன் அதுவரை அவர் ஏதோ அறியாமையிஞலே சொல்கிருர் என்றும், நான்கூட பெரிய அறிவாளி என்றும் எண்ணிக்

அவள் பெருமை!

(இளஞ்சித்திரன்)

பாவலனும் தாய்தமிழில்; பலமொழிகள் நன்கு
படித்திருக்குஞ் சிறப்பினனும்! கருத்தோடு பேசும்
நாவலனும்; அன்றி, அவன் பேச்சுக்கே ஒப்ப
நடக்கின்ற உண்மையனும்! முத்தமிழ்க்கு வாய்த்த
காவலனும்! அடிமையுற்ற தாய்நாட்டை மீட்குங்
கடமையினை வாழ்வாகக் கொண்டவனும்! நல்ல
ஏவலனும் மக்கட்கே எனைமணக்க வருவோன்!
என்னென்பேன்! என்போல்யார் பெருமையைப் பெற்
[றுரே!

தூயவனும்! தொல்தமிழர் புகழ்காக்க வென்றே
துடிக்கின்ற பான்மையனும்! பண்பாட்டைப் போற்றுந்
தாயவனும்! பழகுதற்கு மிகவினிமை யுற்ற
தன்மையனும்! நேர்மையனும்! பலகலைகள் கற்ற
சேயவனும்! நம்மக்கள் ஒற்றுமைக்கே ஊறு
செய்துவருங் குலப்பிரிவை அழிக்கமுனை பவனும்!
நாயகனும் மக்கட்கே! நாயகனும் எனக்கும்!
நங்கையென்போல் யாரிந்தப் பெருமையைப் பெற்
[றுரே!

ஆழ்ந்தவனும் மெய்யுணர்வில், மெய்யறிவில்! உள்ளம்
அமைந்தவனும்! உடற்கட்டும் வாய்ந்தவனும்! உழைப்
சூழ்ந்தவனும்! நம்நாட்டில் உலவுகின்ற பொய்மைத் [பைச்
தோய்வுடைய வினைகட்குக் கூற்றுவனும்! புகழில்
வீழ்ந்தவனும்! எளியவனும்! தன்மான உணர்வை
விளைப்பவனும் ஏமாளித் தமிழர்க்கே! என்றும்
தாழ்ந்தவனும் அன்பிற்கே! எனைமணக்க வருவோன்
தனைமணக்கும் என்போல்யார் பெருமையைப் பெற்
[றுரே!

(முன்பக்கத் தொடர்ச்சி)

கொண்டு சிரித்தபடியே 'வேறென்ன சோறிருக்கும்' என்று கேட்டேன். ஏன்? 'கம்பஞ் சோறு, சோளச் சோறு இருக்கிறதே' என்றுர். அப்போதுதான் தெரிந்தது. சோறு என்ற சொல் அரிசியிலேவேகவைத்தது மட்டுமன்று; அடிப்படையான உணவு நமக்கு எதுவோ அது சோறு. சோருன பகுதி எதுவோ அது சோறு.

—தொடரும்

அணங்குகொல்! ஆய் மயில்கொல்லோ!

இம்முதற் குறிப்புடைய பாடல் திருக்குறள் இன்பத்துப் பாலின் முதற்கண் உள்ளதாகும். இக் குறட்பாவிற்கு மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதியார், காளிங்கர், பரிமேலழகர் ஆகிய ஐவரும் உரை எழுதியுள்ளனர். இவர்களுள் மணக்குடவர், பரிப்பெருமாள், பரிமேலழகர் ஆகிய மூவரும் ஒரு போக்கில் உரை வகுத்தனர். பரிதியாரும் காளிங்கரும் ஒரு போக்கில் உரை வகுத்தனர். இவ்விரு திறனிலும் சிறப்புடையது எது என்பதை ஈண்டு ஆராய்வாம்.

அவர்கள் உரை வருமாறு:-

மணக்குடவர்:- இக் கனங்குழையையுடையாள் தெய்வங் கொல்லோ! நல்லதொரு மயில் கொல்லோ! அன்றி, மக்களுள் ளாள் கொல்லோ! எனஎன்மனம் மயங்கா நின்றவற்றுள் யாதோ? என்றவாறு.

பரிப்பெருமாள்:- இவர் உரை மணக்குடவர் உரையினின் றும் சிறிதும் வேறுபட்டதன்று.

பேராசிரியர், கு. சுந்தரமூர்த்தி.

(செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.)

பரிமேலழகர்:- இக்கனவிய குழையை உடையாள் இப் பொழிற்கண் உறைவாளோர் தெய்வ மகளோ? அன்றி ஒரு மயில் விசேடமோ? அன்றி ஒரு மானுட மாதரோ? இவளை இன்னள் என்று துணியமாட்டாது என்நெஞ்சு மயங்கா நின்றது என்றவாறு.

பரிதியார்: தெய்வ மகளோ! நடமாடும் மயிலோ! கனத்த குழையை உடைய பூமகளோ! என்றன் சிந்தையை மயக்குற்ற வள் என்றவாறு.

காளிங்கர்: இங்ஙனம் ஆரும் இல்லதோர் சிறையிடத்து நின்றும் இவ்வணி அணிந்த உருவுடையதோர் தெய்வ வடிவாங் கொல்லோ என்றும், மைக்கோலமும் வளரிளம் சாயலும் வனப் பும் உடையதோர் அழகிய மயிலாங் கொல்லோ என்றும், தக்க செல்வக் குலத்துள் பிறந்த மக்களுள் ஒருத்தி கொல்லோ என் றும் இங்ஙனம் மயக்குறும் என் நினைவு என்று தன் நெஞ்சிற்குச் சொல்லித் தளர்வுற்றான் தலைமகன் என்பது பொருள்.

மணக்குடவர், பரிப்பெருமாள், பரிமேலழகர் ஆகிய மூவரும் கனங்குழை என்பதை எழுவாயாகக் கொண்டு, இக்கனங்குழையை உடையாள் தெய்வ மகளோ! மயிலோ! அன்றி மானுடப் பெண்ணோ! எனத் தலைவன் தலைவியை ஐயுற்றான் எனப் பொருள் காணுகின்றனர். இவர்கள் மூவருக்கும் 'கனங்குழை' என்பது, ஆகுபெயர் என்பது கருத்து.

காளிங்கர், பரிதியார் ஆகிய இருவரும் இங்ஙனம் தோன்றுகின்றவள் அல்லது இங்ஙனம் தோன்றுகின்ற உரு என்பதை எழுவாயாக வரவழைத்துக் கொண்டு உரை காண்கின்றனர். இவர்கள் கருத்தின்படி இக் குறட்பாவில் எழுவாய் தோன்றாது நிற்கின்றது. கனங்குழை என்பதை எழுவாயாக்கி முன்னைய மூவரும் அதனையே முன்மொழிந்து கொண்டு உரைசெய்ய இவர்களிருவரும் அதனை மாதர் என்ற சொற்கு அடைமொழி ஆக்கி ஆற்றொழுக்காக உரை காண்கின்றனர்.

குழையையுடையாள் என முன்னே எடுத்துக்கொண்டால் பின் அணங்கோ, மயிலோ, மாதரோ என ஐயுற வேண்டுவதில்லை. ஒரு பொருளை இன்னதெனத் தெரியாத நிலையில் ஐயம் தோன்றுமேயன்றித் தெரிந்த பிறகு அதனை ஐயுறக் காரணமில்லை. ஆதலின் மணக்குடவர், பரிப்பெருமாள், பரிமேலழகர் ஆகிய மூவரும் கூறும் உரை அத்துணைச் சிறப்புடையதென்று கருதுதற்கில்லை. எனவே காளிங்கர், பரிதியார் ஆகிய இருவரும் எழுதிய உரையே இக்குறளுக்குப் பொருந்திய உரையாகக் கருதலாம்.

இப்பாடல் தலைவன் தலைவியைக் கண்ணுற்ற நிலையில் அவளது உருவமும் அவளிருக்குமிடமும் வியத்தகு நிலையை உடையதாயிருக்க அது பொழுது ஐயுற்றுக் கூறியதாகும். இத்துறையில் கோவை நூல்களில் வரும் பாடல்களுக்கும் இதற்கும் பெரிதும் வேற்றுமை உண்டு. தஞ்சை வாணன் கோவையிலும் பாண்டிக் கோவையிலும் தலைமகளைப் பல்வேறு வகையாயுள்ள அணங்குகளோடுமட்டும் ஐயுற்றுரைக்க இக்குறள் வெண்பாவில் மட்டும் அணங்கு, மயில், மாதர் ஆகிய மூவரோடும் ஒப்பிட்டு உரைக்கப்பெற்றுள்ளது. ஒரு பொருளை ஐயுற்றவனுக்கு அப்பொருளிலேயே அவனது கண்ணும் கருத்தும் மீண்டும் மீண்டும் சென்று உன்ன, முன்னைய நிலையினின்றும் சிறிது சிறிதாகத் தெரிந்து தெளியும் நிலைவருதலே இயற்கையாகும். அந்நிலையில் ஊழ்வகையால் தலைவி இருக்கும் பொழிற் கண் வந்த தலைமகன் தான் இதுவரைகண்டறியாத உருவத்தைக் காணுகின்றபொழுது 'அணங்கோ' என்றும், அவளிருக்கும் பொழிலையும் சூழலையும் நோக்கி அதனின்றும் சிறிது தெளிந்த நிலையில் மயிலோ என்றும், அவளது அடி நிலந் தோய்தலும் கண்ணிமைத்தலும் முத

லிய குறிகளைக் கண்டு இன்னும் சிறிது தெளிந்த நிலையில் 'மாதரோ?' என்றும் கூறுவதே மிகமிகச் சிறந்ததாகும்.

பாடல்களை முழுப் பொருளாகக்கண்டு சுவைத்தல் அழகு தருமாகலின் அப்பாடல்களை முழுதும் கீழே தருகின்றோம்:–

'அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு' (1081 குறள்)

'பாரணங் கோதிருப் பாற்கடல் ஈன்றபங் கேருகத்தின்
ஓரணங் கோவெற் புறையணங் கோஉயர் பாவலர்க்கு
வாரணங் கோடி தரும்தஞ்சை வாணன்தென் மாறைவையை
நீரணங் கோநெஞ்ச மேதனி யேஇங்கு நின்றவரே!
— தஞ்சை வாணன் கோவை.

'உரையுறை தீந்தமிழ் வேந்த னுசிதன்தென் னாட்டொளிசேர்
விரையுறை பூம்பொழின் மேலுறை தெய்வங்கொ லன்றிவிண்தோய்
வரையுறை தெய்வங்கொல் வானுறை தெய்வங்கொல் நீர்மணந்த
திரையுறை தெய்வங்கொ லையந் தருமித் திருநுதலே'
(பாண்டிக் கோவை)

எனவே, அகப் பொருள் துறையில் ஐயம் என்ற தலைப்பில் கூறப்பட்ட பிற கோவைப் பாடல்களிலும் திருவள்ளுவர் கூறிய இவ்வருங் குறள் சிறப்புடையது என்பதையும் இவ்வருங் குறளுக்கு ஐவர் உரைகளினும் பரிதியும், காளிங்கரும் எழுதிய உரையே சிறப்புடையது என்பதையும் தெளியலாம். *

கல்லூரி மாணவர்கட்கு!

செந்தமிழ்த் தீனி தின்னும் நந்தமிழ் மாணவர்களே,

நீங்கள் பயிலும் கல்லூரியில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயிலும் வாய்ப்புண்டா? உண்டெனின், நீங்களும் உங்களைச் சார்ந்த பிற தமிழ் மாணவர்களும் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டுள்ளீர்களா? ஆம் எனின், அதுபற்றி விளக்கியும், இல்லெனின் அதன் பொருட்டுகளைத் தெரிவித்தும் ஒரு கட்டுரை எழுதி யனுப்புக. தகுந்த கட்டுரை நிழற்படத்துடன் வெளியிடப்படுவதுடன் 'தென்மொழி' இதழும் ஓராண்டுக்கு அனுப்பப்பெறும்.

— ஆர்.

காதற் கிளர்ச்சி...!

மலைமீது படுத்திருக்கும் நீளருவி துள்ளி
மடுமீது வீழ்ந்தோடிச் சலசலத்துப் பாயும்!
அலையலையாய்ப் புரள்கின்ற மறிகடலோ நண்டு
அடியூன்றி நடைபயிலும் மணற்கரையைத் தாவும்!
மலர்விரித்த இதழ்ப்படுக்கை மீதில்ஒளி மின்னும்
மணிப்பனிநீர் தலைவைத்து விழிமூடித் தூங்கும்!
நிலவெழுந்த வேளையிலே வீட்டுக்குள் ஓடி
நெடுங்கதவத் தாழ்மூடித் தூங்குவதேன் பெண்ணே?

கொழுகொம்பில் அசைந்தாடும் பூங்கொடியைத் தொட்டுக்
குளிர்முத்தச் சுவைகொடுக்கும் இளந்தென்றல் காற்று!
வழுவில்லா நெடுநீல வான்புனலை நீந்தி
வரும்பரிதி மேற்கடலை ஒளிக்கையால் தீண்டும்!
விழுந்துருளும் புதுவெள்ளம் தலைநிமிர்ந்து நிற்கும்
விழல்புதரின் மருங்கணைந்து தரைகிடத்திச் செல்லும்!
அழகுமிழும் நிலவெழுந்த வேளையிலே என்றன்
ஆவலுக்கு வேலியிட்டுத் தூங்குவதேன் பெண்ணே?

வாவென்று வெளவாலை அழைக்கின்ற ஆலின்
வார்விழுது குளிர்மண்ணின் உடல்தொட்டுக் கோதும்!
பூவைப்போல் வாய்விரித்த பெடைநண்டோ ஆண்பால்
புதுச்சேற்று வயல்மீது நடைநடந்து காட்டும்!
தாவிவரும் கொடிமின்னல் மழைசுமந்து நிற்கும்
தண்முகிலின் உடல்குளிர உயிர்மின்னப் பின்னும்!
பாவைநிலா எழுகின்ற வேளையிலேன் ஓடிப்
பதுங்கினை நீ! நின்னணைப்பிற் கேங்கிடுவேன் பெண்ணே?

கொக்கரித்துக் குரலெழுப்பிச் சிறகணைந்த சேவல்
குலவியநற் கதகதப்பில் பெட்டையுடன் தூங்கும்!
குக்குக்குகூ எனக்கூவி ஆண்குயிலோ பெண்ணைக்
கூர்மூக்கால் உடல்குடைந்தே ஒருங்கணையச் சீண்டும்!
நக்கிநக்கிச் செந்நாவால் உடல்முற்றும் நீவி
நல்விளமை ஆமுகத்தைப் பெருங்காளை நோக்கும்!
சொக்கநிலா எழுந்துவரும் வேளையிலேன் ஓடிச்
சுரும்புவிழி மூடினை நீ! வாடிடுவேன் பெண்ணே!

இரா. பரமசிவம்.

சட்டவியல்

இழப்பீடு.

(Compensation)

வழக்கறிஞர்: "மன்றிலாடி"

பள்ளி ஆசிரியர் மக்குச் சிறுவனை நையப் புடைத்தார். தோளில் விழுந்த அடி கைமூட்டை நழுவச் செய்து ஊறு விளைத்தது; வீட்டுத் தலைவி வேலைசெய்யும் சிறுமியைத் திருடிய தாய் ஐயப்பட்டு அடித்துப், பிடித்துத் தள்ளினள். அங்கிருந்த விறகுக் குச்சி ஒன்று பொத்துக் கண் குருடாயிற்று.

பூட்டிய குதிரை வண்டியைத் தெருவில் விட்டு விட்டு வண்டிக்காரன் தேநீர்க் கடையில் நுழைந்தான். விளையாட்டுச் சிறுவன் ஒருவன் வண்டியிலேற மற்றொருவன் குதிரையை முடுக்கினன். ஏறினவன் கீழே விழுந்து மண்டை உடையப் பெற்றான். இந்நிகழ்ச்சிகளில் வேண்டுமென்றோ கருத்தின்மையாலோ தீங்கிழைக்கப்பட்டு நலங் குறைந்து செலவு மிகுந்து இழப்பு ஏற்படுகின்றது. இவ் வகைகளில் தீங்குற்றோர்க்குக் கூடிய வரை பணங்கொடுத்து நிறைவளிப்பதே இழப்பீட்டின் நோக்கம்.

இழப்புறுதல் பலவகையினவாகும். அதனால் நிகழும் உடல் உள்ளத் துன்பங்களும் பலவகைப்படும். மானக் குறைவும் தோன்றும். ஒருவன் தெருவில் செல்லுகையில் எக்காரணமு மின்றி மற்றவன் அவனைத் திட்டினாலும், அவன் கன்னத்தில் அறைந்தாலும் முதலாமவனுக்கு அச் செய்கையால் பொருள் இழப்பு ஏற்படாவிடினும், ஏற்படும் மனத்துயர்க்கும் மானக் குறைவிற்கும் திட்டியவனோ அடித்தவனோ ஈடு செய்ய வேண்டி வரும்.

ஒருவன் ஏறிச்செல்லும் ஊர்தியை நிறுத்தி அவனை அப்பால் செல்லவிடாது தடுப்பின் அஃது ஈடு கொடுக்க வேண்டிய குற்ற மாகும் ஒருவனுக்குரிய நிலத்தில் அவன் இசைவின்றி மற்றவன் நடப்பினும், மாடு கன்று வண்டி போல்வன செலுத்தினும் நிலத் துக்குரியவன் ஈட்டுத் தொகை கேட்கலாம். ஒருவன் கோயி லுக்குச் சரியான பொழுதில் கும்பிடப் போகும்பொழுது அவன் வழிபாட்டைத் தடுக்கக் கோயில் மேலாளர் கதவை அடைத்து அவனை வெளியில் நிறுத்திவிட்டால் அடைப்பவர் வழிபட வந்த வனுக்கு ஈடுதர வேண்டும்.

நகராண்மைத் தேர்தலுக்கு ஒருவன் செல்கையில் அவனை ஒருவன் ஊர்தியில் ஏறச்செய்து வெளியூரில் கொண்டுபோய் விட்டு விடுவானுனல் முன்னவனுக்குப் பின்னவன் இழப்பீடு தரல் வேண்டும். வங்கியில் போதுமான பணம் வைத்துக் கொண்டு ஒருவன் காசோலைக்குப் பணமில்லையென்று திருப்பினுல் வங்கி அவனுக்கு இழப்பீடு தரல் வேண்டும். சாப்பாட்டு விடுதியில் நுழைந்து, விற்கும் உணவையோ பருகு நீரையோ கேட்டு விடுதிக்காரர் ஒருவனுக்கு வழங்க மறுத்தால் ஏற்பட்ட மானக் குறைவிற்கு விடுதிக்காரர் இழப்பீடு தரவேண்டியிருக்கும்.

மேலே குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகளில் பண வகையில் இழப்பை அளவிடல் அரிதாகையால் பெரும்பாலும் பெயரளவில் குறைந்த தொகையே கிடைக்கும். ஆனுல் இ ழ ப் பு று வா ர் நிலைமை, உயர்வு முதலியன தொகையை அதிகப்படுத்தலாம்.

ஒப்பந்தங்களை நிறைவேற்றத் தவறின், அத்தவறுதலால் நேரும் இழப்பைக்கொண்டு இழப்பீட்டை அளவிடுவது எளிதாகும். 500 உருபா பரிசுப் போட்டியில் வெற்றிபெற ஒரு நூல் எழுதி அச்சகத்தாரிடம் குறிப்பிட்ட நாளைக்குள் முடித்துக் கொடுக்க ஒப்பந்தம் செய்து, அவர்கள் முடிக்கத் தவறி, பரிசை வேறு எவரோ அடைய நேரிடின், அப்பரிசுத் தொகை முழுமையும் இழப்பீடாகக் கிடைக்கலாம்.

ஒரு பொறிக்கூடத்தில் பணிபுரியும் பொறிவினைஞன் ஒருவன் பொறிக் கோளாற்றினுல் கைகாலை இழக்க நேரிடில் அத் தொழிலாளி எஞ்சியுள்ள வாழ்வில் ஈட்டத்தகும் ஊதியம் இழப்பீட்டைத் தீர்மானிக்க உதவும்

அடுத்த வீட்டுத் தோட்டத்திலுள்ள மாமரத்தின் கிளை நம் வீட்டுத் தோட்டத்தில் நிழல்பரப்ப, அதனுல் நம் தோட்டத்தில் உள்ள பயிர் விளையாமல் இழப்பேற்படில் நமக்கு ஈடுகிடைப்பது ஐயமே. ஆனுல் அம் மாமரத்தின் வேர் நெடுந்தொலைவு நீண்டு பருத்து அக்காரணத்தால் நம் வீட்டுச் சுவர் பிளவுபட்டு வீடு சரிந்தால் வீட்டைச் சீர்படுத்தத் தேவைப்படும் தொகை இழப்பீடாகக் கிடைக்கும்.

இழப்பைக் குறிப்பிடக் கூடுமாயினும் ஒருவர் ஏற்றுக்கொள்ளப்பெற்ற உரிமையைச் செலுத்தினுல் ஈடு கிடைக்காது.

ஒருவர் ஒரு பள்ளியை நடத்தி வாழ்க்கை நடத்தி வருகின்ருர். பொருமை பிடித்த அண்டை ஊரினர் இன்ஞெரு பள்ளியை நிறுவி முன் பள்ளியின் மாணுக்கர்களைத் தடுத்துத் தம்பள்ளியில் சேர்த்துக் கொண்டனர்

ஒருவர் சாப்பாட்டு விடுதியைப் பல நாட்களாக நடத்தி வந்தார். வேறொரு முதலாளி மற்றொரு விடுதியை அவ்விடுதிக் கருகிலேயே வைத்து முதலாமவர் தொழிலில் மண்ணைப் போட்டார்.

நம் வீட்டில் நடக்கும் ஒரு திருமணத்திற்கென்று நிறைய அழைப்புகளைப் பலர்க்கும் அனுப்பிவிட்டோம். அண்டை வீட்டுக்காரர் அதே முழுத்தத்தில் புதுமையாக மனைபுகு விழாவை வைத்து நம் விருந்தினரில் பெரும்பாலோரைச்சாப்பாட்டுக்கு அழைத்துப் போய்விட்டதனால் நாம் செய்த உணவுகள் வீணாயின.

நம் வீட்டுக்கு அண்மையில் ஒரு காலி மனை இருக்கின்றது. அண்டை வீட்டுக்காரர் எழுப்பிய கட்டடத்தால் நமக்குக் கிடைத்துவந்த காற்றும் ஒளியும் தடைபட்டன.

இவ்வெடுத்துக் காட்டுகளில் உண்மையான இழப்புகள் ஏற்பட்டுள்ளன. ஆனால் இழப்புச் செய்தவர்கள் அவரவர் உரிமைகளைச் செலுத்தியவர்களாவார்களே தவிரக் குற்றமிழைத் தவராகார். ஆகவே இழப்பீடு, தீங்கிழைக்கும் எண்ணத்துடன் நில்லாது, ஒருவர் தமக்கில்லாத உரிமையைச் செலுத்துவதும், பிறருக்குள்ள உரிமைக்குக் குறை நேருமாறு செய்வதுமான செய்கைகளைப் பொறுத்ததாகும்.

எழுதுவார் கவனிக்க!

தென்மொழிக்கு வரும் உருப்படிகளில் பாடல்களே மிகுந்துள்ளன. சிலர், பாடல்களில் எதுகைத் தொடையிலும் வட சொல்லமைத்து, மாற்றஞ்செய்ய முடியாதவாறு எழுதுகின்றனர். எழுதுவார் கட்டுரை, பாடல்களைத் தனித்தமிழில் எழுதித் தக்காரிடம் காட்டிச் செப்பஞ் செய்து அனுப்ப வேண்டுகிறோம்.

மேலும், 'தென்மொழிக்கு'க் கதை, கட்டுரை, பாடல் அனுப்புவார் ஒவ்வோர் உருப்படியிலும் தாங்களே ஒரு படி வைத்துக் கொள்ள வேண்டுகிறோம். எக்காரணத்தை முன்னிட்டும் 'தென்மொழி'க்கு அனுப்பப்படும் உருப்படிகளைத் திருப்பி யனுப்புதல் இயலாது.

திருத்தம்:

72-ஆம் பக்கத்தில் 11-ஆம் வரியில் (ரசுக்கின் கூறியுள்ள கருத்தில்) 'கொண்ட ஒருபெண் பேசிக்கொண்டிருக்கும்போது' என்றிருப்பதை 'கொண்ட ஒருவன் பேசிக் கொண்டிருக்கும் போது' என்று திருத்திப் படித்துக் கொள்க.

ஆங்கில மொழியாக்கம்

The Request.

Just as a little lizard
That travels with a cart
Perching on the wheel
I travelled all the way
With him, (my warrior-Lord)
Through many a wilderness.
So have pity on my dismal self
O maker of the urns
And make his funeral urn
Larger than the usual size.
(*PURAM 256*)

(The words of a woman on the death of her warrior-husband whom she had followed to the battle-field.)

வேண்டுகோள்.

கலஞ்செய் கோவே, கலஞ்செய் கோவே
அச்சுடைச் சாகாட் டாரம் பொருந்திய
சிறுவெண் பல்லி போலத் தன்னொடு
சுரம்பல வந்த எமக்கும் அருளி
வியன்மலர் அகன்பொழில் ஈமத் தாழி
அகலி தாக வனைமோ
நனந்தலை மூதூர்க் கலஞ்செய் கோவே.
(புறம் 256)

ஆங்கில ஆக்கம்: ம. இலெ. தங்கப்பா.

தமிழ் மொழியின் சொல்வளம்.

குற்ற வகைகள்.

அரில் : பொருள்கள் ஒழுங்கின்றி மயங்கிக் கிடக்கும் குற்றம்.
அழுக்கு : உடம்பிலும் உடையிலும் படியும் தீநாற்ற மாசு.
ஆசு : சக்கையும் மக்கும்வைத்து ஒட்டியதுபோன்ற குற்றம்.
இழுக்கு : ஒழுக்கக் கேடு.
ஏதம் : உறுப்பறை, உயிர்க்கேடு.
கசடு : மண்டி போன்ற குற்றம்.
கரிசு : பாவம் (Sin)
கரில் : கொடுமை.
களங்கம் : கருத்தொளிப்பு.
கறை : வாழை, நுங்கு முதலியவற்றின் சாற்றுலுண்டாகும் சாயம்.
குற்றம் : சட்டத்திற்கு மாறுன செயல் (Fault, Guilt)
குறை : தேவை அல்லது ஊனம்.
தப்பு அல்லது தப்பிதம் : சரியில்லாதது (Wrongness)
தவறு : ஒரு கடமையைச் செய்யாக் குற்றம் (Failure)
தீங்கு : இன்னல் (Harm)
தீமை : நன்மையல்லாதது (Evil)
துகள் : புழுதி போன்ற குற்றம்.
நவை : மக்கல் போன்ற குற்றம்.
பழுது : பழமையாய் வந்த கெடுதல்.
பிழை : ஒன்றிற்கு இன்னொன்றைச் சொல்லும் அல்லது கொள்ளும் குற்றம் (Mistake)
புகர் : புள்ளி போன்ற குற்றம்.
புரை : துளை போன்ற குற்றம்.
போக்கு : சேதம் அல்லது கழிவு.
மயல் : மயக்கத்திற் கிடமான குற்றம்.
மறு : மேனியிலுள்ள கரும்புள்ளி. (Mole) போன்ற குற்றம்.
மாசு : பொருள்களின் மேற் படியும் சிறு தூசி.
மை : கருமை.
வழு : இலக்கண நெறியினின்று விலகும் குற்றம் (Error)
வழுவாய்: 'பாவம்'
வடு : தழும்பு போன்ற குற்றம்.
வசை : பழிப்பாகிய குற்றம்

— ஞா. தே.

ம. இலெ. தங்கப்பா.

மருத்துவத் தொண்டர்

ஆல்பர்ட் சுவைட்சர்.

தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரே உண்மைத் தொண்டர் ஆவர். தொண்டுக்கு விலை கேட்பார்—மறைமுகமாக வேணுங் கைம்மாறு கருதுவார்—எத்தகு செயற்கருஞ் செயல்களை மேற்கொள்ளினும் உண்மையில் வாணிகரே அல்லால் தொண்டராகார். வாணிக மனம் படைத்தவரே தம்மை அழித்துக்கொண்டு தொண்டு புரிதல் இயலாதென்றும், இயல்வதாயினும் நிலைத்த பயன் தராதென்றும் பலபடப்பேசிச்செயலின்றிக் கழிவர். ஆனால் உலகின் தொண்டர் பெருமக்கள் வரலாற்றைச் சற்றே நோக்குவோமாயினும் அத் தொண்டர் அனைவருமே, தம்மை, (அஃதாதல் தம் உலகியல் நலங்களை) அழித்துக் கொண்டே தொண்டு புரிந்தவராக இருத்தல் கண்கூடு. அவர்கள் உண்மையில் தம்மை அழித்துக் கொண்டனராவென்றால் இல்லவே இல்லை. அவ்வாறழித்திருப்பராயின் அவர்களைப்பற்றி நாம் இன்று எவ்வாறு பேச முடியும்? அத்தகு பெருந் தொண்டருள் ஒருவரே வறியார் பிணி நீக்கும் வண்பெருந் தகையராய்த் தாம் விரும்பாவிடினும் உலகப் புகழ்க்கிலக்காகித் தள்ளா முதுமையிலும் தம் பணியிற் சிறிதும் குன்றாமல் நிற்கும் **ஆல்பர்ட் சுவைட்சர்** ஆவர்.

அடவியும் இருளுஞ் செறிந்து, வெய்யோனின் தெறுகதிர் வெம்மைக்கு நேர் இலக்காகி, வன் விலங்குகளும் நச்சுப் பூச்சிகளும் மலிந்து கிடக்கும் ஒரு நிலப்பகுதியே ஆப்பிரிக்கப் பெருநிலத்தின் நடுப்பகுதி; அங்கு வறுமையொடும், நீங்கா நோயோடும் போராடிப் போராடி, இயல்பாக வாய்ந்த தம் உள நலத்தினைப் பேணி வளர்க்கவும், வாய்ப்பிலாது வாழும் கருநிற மாந்தர் பலர். ஆங்குக் கிறித்தவ சமயத்தையும், தம் நாகரிகத்தையும் அம்மக்கள்பால் திணிப்பதே தம் பணியெனச் சிலர் கருதிக் கொண்டிருப்பவும், நூற்றுக்கணக்கான கற்கள் சுற்றுப் புறத்தில்

ஒரு மருத்துவரேனுமில்லாமல், "ஆப்பிரிக்கா தன் மக்களையே அடித்துண்கிறது" என அம்மக்கள் புலம்பவும், அப்புலம்பலை மாற்ற எழுந்தாற்போல் அக்காட்டின்நடுவே வெண்முகம்காட்டி நிமிர்ந்து, பற்பல மருத்துவரும் செவிலியரும் தந்நலந் துறந்து பணிபுரிய ஆயிரக்கணக்கான ஆப்பிரிக்க மக்களின் உடல்நலம் ஓம்பி ஒரு மருத்துவ மனை நின்று நிலவுகின்றதென்றால் அப்பெருமை **ஆல்பர்ட்** சுவைட்சரையே சாரும்.

ஆல்பர்ட் சுவைட்சர் ஐரோப்பாக் கண்டத்தில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், அக்கால் செருமனிக்குரிமையாயிருந்த அல்சாசு (Alsace) மாநிலத்தில் கன்சுபாக் (Guns-bach) எனுஞ் சிற்றூரில் பிறந்தார். தந்தை ஒரு கிறித்தவ சமய குரவர். ஆல்பர்ட்டுக்கு ஓர் இளவலும் மூன்று தங்கையருமிருந்தனர். மகிழ்வான குடும்பம்; குழந்தைகள் நல்வாழ்வும் மகிழ்வும் பெறவேண்டுமென்று பெற்றோர் கண்ணுங் கருத்துமாயிருந்தனர். இளையோர் ஆடலும் பாடலுமாய் வாழ்ந்து வந்தனர்; அத்தகைய இனிய வாழ்வில் ஆல்பர்ட் அமிழ்ந்து போயிருக்கமுடியும் ஆனால் இளமை நிகழ்ச்சியொன்று அத்தகைய வாழ்வினின்று அவரை விடுவித்தது.

பள்ளியில் அவரை வலுச் சண்டைக்கிழுத்தான் ஒரு மாணவன். தான் ஆல்பர்ட்டை வென்றுவிடுவதாகவும் பெருமை பேசினான். ஆனால் ஆல்பர்ட் சண்டையில் அவனைக் கீழே தள்ளி மார்பில் அமர்ந்துகொண்டு "இப்போது என்ன சொல்கிறாய்?" என்று கேட்க, அச்சிறுவன், "சரிதானடா! உன் தந்தை சமயகுரவர்; நீங்கள் பெருங்குடி மக்கள். உனக்குப் பசி என்றால் என்ன என்றே தெரியாது. நானும் உன்னைப்போல் கிழமைக்கிருமுறை கறிச்சாறு (Soup) உண்பேனாயின் உன்னை விட வலிவுபெற்று உன்னைக் கீழே தள்ளியிருப்பேன்" என்றான். இச்சொற்களைக்கேட்ட ஆல்பர்ட்டின் மனம் துணுக்கென்றது. வாய் திறவாமல் எழுந்து வீடு வந்தார். அன்றிரவு அவர்முன் வைக்கப் பெற்றிருந்தது கறிச்சாறு! மனம் உணவிற் செல்லவில்லை. அவ்வேழைச் சிறுவனின் சொற்கள் செவியில் ஒலித்துக்கொண்டேயிருந்தன. பசியில்லை என்று எழுந்து தம் அறைக்குச் சென்ற ஆல்பர்ட் அன்றிரவே தமக்குள் ஓர் உறுதி பூண்டார். "இனித் தன்னைச் சுற்றியுள்ள ஏழை மாணவரைவிட எவ்வகையினும் தான் வேறுபட்டவனாகக் காட்சியளிப்பதில்லை. அவர்களினும் தான் உயர்ந்தவன் என்ற உணர்ச்சி எனைத்தானும் அவர்கட்கு ஏற்படுமாறு தான் நடந்து கொள்வதில்லை" என்பதே அது.

இவ்வுறுதி ஆல்பர்ட்டுக்குப் பல இடர்களைக் கொண்டுவந்தது. அவரைப் புரிந்துகொள்ளாத பெற்றோர் தம் மகன் இவ்

வாறு மதிப்புக் குறைவாக நடந்து கொள்கின்றனே, என வருந்தினர். அவரைக் கடிந்தனர். ஒரு முறை ஒரு புதிய குப்பாயத்தினை அவருக்களிப்ப, அவர் மற்ற ஏழை மாணவர்க்கில்லாத இவ்வுடை எனக்கேன் என்று அதனை வெறுத்தொதுக்கினர். தந்தை கடிந்தார்; அது தொடங்கித் தந்தைக்கும் அவருக்கும் மனவேறுபாடு மிகுந்தது. எனினும் ஆல்பர்ட் இறுதிவரை தம் மனவுறுதியைக் கைவிட்டாரில்லை. இளமையிலேயே அவருள்ளத்தில் அருளுணர்வு நிரம்பி வழிந்தது. பிறவுயிர்களின் துன்பத்தை அவரால் தாங்கமுடியாது. விலங்கும் புள்ளும் கூண்டுகளில் அடைக்கப்படுவதை அவர் வெறுத்தார். அவை துன்புறக் காணில் அவர் மனம் அனற்படு மெழுகாகும். அன்புச் சமயமாகிய கிறித்தவத்தைப் பின்பற்றும் தம் தந்தை இறைவனை நோக்கித் தொழும்போது, மாந்த உயிர்கட்காக மட்டுமே வேண்டுவதையும், பிறவுயிர்களைப் பொருட்படுத்தா தொழிவதையும் கண்டு, அவர் மனம் வருந்தியிருக்கின்றார். ''இறைவனே! அனைத்துயிர்களையும் ஒக்கக் காத்தருள்வாயாக. அவற்றுக்கு அமைதியும் நல் வாழ்வும் அளிப்பாயாக''என்று அவர் பின்னர்த் தனியாக வேண்டிக் கொள்வாராம்.

பள்ளிப் பாடங்களில் சுவைட்சர் சிறந்தாரில்லை. வகுப்பிலிருக்கும்போதும் உள்ளம் வேறெதையோ நாடியிருக்கும். எனினும் பெற்றோர் வருந்தாவாறு மிகமுயன்று தேர்வுகளில் வெற்றியே கண்டு வந்தார். படிப்பாற் சிறக்காவிடினும், அன்பாலும், அருளுணர்வாலும், களங்கமில்லா நகையுள்ளத்தாலும் அனைவர் உள்ளத்தையும் கவர்ந்து பள்ளியில் மதிப்புக்குரியவராகவே திகழ்ந்தார். பள்ளி வாழ்க்கை முடிந்து கல்லூரி வாழ்க்கை தொடங்கியது. தமக்குப் பிடித்த வரலாற்றுப் பாடத்தை எடுத்துப் பயின்றார் கல்லூரியில் பயிலும்போதே படைப் பயிற்சியினையும் முடித்துக்கொண்டார். இசையறிவும் அவருக்கிருந்தது.

சுவைட்சர் இருபதாம் அகவை எய்தினர். கல்லூரிப் படிப்பு முடியுந்தறுவாயிலிருந்தது. இனி என்ன செய்வது? கல்லூரி ஆசிரியர் ஆவதா? தந்தையைப்போல் சமயத்துறையில் புகுவதா? அல்லது, தம் உள்ளமும், உணர்வும் ஒன்றிக் கிடக்கும் இசைக் கலையை நாடுவதா? அனைத்துக்கும் நல்வாய்ப்புகளிருந்தன.

ஆனால் சுவைட்சர் சிலகாலம் கல்லூரிப் பேராசிரியராகவும் அதே போது, சமய குரவராகவும் பணியாற்றினர். இசைத்திறனையும் வளர்த்துக்கொண்டார். நூல்கள் பல எழுதினர். பல வாழ்நாட்களை அவ்வொன்பதாண்டுகட்குள் வாழ்ந்து முடித்தார் எனலாம் இவ்வாறு, முப்பதாம் அகவையை எய்தினர். இனித்

தொண்டுக்கே தான் உரியன் என உணர்ந்தார். அக்காலத்தே சில தொண்டர் குழாங்கள் ஏழைக் குழந்தைகள் நலத்துக்கும், விடுதலைபெற்ற குற்றவாளிகள், இரவலர், வேலையற்றூர் நலத்துக்கும் பாடுபட்டு வந்தன. அக் குழாங்களில் சுவைட்சரும் சேர்ந்து பணியாற்றத் தொடங்கினூர். அப்போதுதான் அன்னூர் தம் மனத்துக்குகந்த ஒரு மங்கை நல்லாளுடன் தொடர்பு ஏற்பட்டது. பின்னர் அம்மங்கையே சுவைட்சரின் மனைவியானூர்.

இப்பணிகளெல்லாம் சுவைட்சருக்கு மனநிறைவளித்தில. குழுக்கள், நிறுவனங்கள் செய்ய வேண்டிய வேலைகளே அவை. தாமாகவே நின்று முழு உளத்தையும், உணர்வையும் செலுத்தி ஆற்றும் தனிப் பெருந்தொண்டினையே அவர் விழைந்தார். அவ் விழைவுக்கும் விரைவில் இடங்கிடைத்தது. தற்செயலாக இதழொன்றைப் புரட்டி வருகையில் ஆப்பிரிக்க நடு நாடுகளில், (காங்கோ, பிரெஞ்சு, ஈக்வதோரியல் ஆப்பிரிக்கா) கருநிற மாந்தர்தம் வறுமையினையும் பிணியினையும், அவை போக்கும் மருத்துவப்பணியின் இன்றியமையாமையையும் பற்றிப் படிக்க நேர்ந்தது. அப்போதே அவர் முடிவு உருவாயிற்று. அப்பெரும்பணியினையே தம் வாழ்க்கைப் பணியாக மேற்கொள்வது என உறுதி பூண்டார்.

மருத்துவப் பணியா? ஆல்பர்ட் சுவைட்சருக்கா? அதுவும் இருண்ட ஆப்பிரிக்காவின் நடுவிலா? தாயகத்திலேயே தாமிருந்தால் மருத்துவராகவோ, பேராசிரியராகவோ, இசை வல்லுநராகவோ, நூலாசிரியராகவோ புகழ் பெற்றுச் சிறக்க எத்தனை எத்தனை வாய்ப்புகள்! இத்தனை நாட்கள் கழித்து, மருத்துவக் கல்வியைக் கற்று .. நோய்கட்கிருப்பிடமான ஆப்பிரிக்காவின் காடுகளில் தம்மைப் புதைத்துக் கொள்வதா?.. இது வெறிச்செயலன்றி வேறென்ன? நண்பர்கள் இவ்வாறு கருதினர். சிலர், "ஆப்பிரிக்காவிற்குச் செல்வதே தான் உன் முடிவு என்றூலும் கூட, மருத்துவராகவா செல்லவேண்டும்? இப்போது சமய குரவராக இருக்கின்றூயே .. அவ்வாறே அங்குச் செல்லலாகாதா?" என்றனர். சுவைட்சர் புன்னகை புரிந்தார். "அம் மக்கட்கு இப்போது தேவை ஒரு மருத்துவரே...மற்றும் நான் வாய்மொழியால் தொண்டு புரிய விரும்பவில்லை. செயலாற்றவே விழைகின்றேன். துன்பால் துடித்துக் கொண்டிருக்கும் அம் மக்களிடம் சென்று அன்பின் வழி அமைந்த சமயத்தைச் சொற்பொழிவுகளால் புகட்டிக் கொண்டிருப்பதைவிட அதனை வாழ்ந்து காட்டுவதன்றே பயன் தருவதாகும்! என்றூர். அவர் முடிவை நண்பர்களால் மாற்ற முடியவில்லை. ஐந்தாண்டுகள் மருத்துவக் கல்வி பயின்றூர். கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது .. உழைத்தார். தேறினூர். மற்றூராண்டு நேரடிப் பயிற்சி பெற்றூர். அது போழ்தே, ஆப்பிரிக்காவில் தம் மருத்துவ

மனையை நிலைநாட்டுதற்கு வேண்டிய பொருளையும் திரட்டத் தொடங்கினார். ஆர்வங்காட்டிய நண்பர்பால் தண்டியும், தம் இசைத்திறன் காட்டியும் பொருளீட்டினார். மனைவியாரும் செவி லியர்க்குரிய பயிற்சியை முடித்துக் கொண்டார். பிரெஞ்சு ஈக்வ தோரியல் ஆப்பிரிக்காவில், இலாம்பரீன் (Lambarene) எனு மிடத்தில் பாரிசு சமயப் பரப்பு கழகத்தினரே அப்போது பணி யாற்றி வந்தனர். அவர்களை அணுகினார். இலாம்பரீனில் அவர்க்கு வீடும், மருத்துவ மனை கட்டிக்கொள்ள ஒப்புதலும் அளித்தனர் ..அதுவும் எளிதில் கிடைக்கவில்லை. தங்கள் கழ கத்தில் சேராத ஒருவரை எப்படித் தங்கள் நிலையத்திலிருந்து பணிபுரியவிடுவது என்று, நெடுநாள் நீட்டித்த பின்னரே இவ் வொப்புதலும் கிடைத்தது! என்னே இச்சமய மாந்தர்தம் உள்ளங்கள்!

தேவைப் பொருட்களையும் மருந்துகளையும் கொண்ட பெரும் மூட்டை முடிச்சுகளோடு சுவைட்சரும், அவர்தம் மனைவியாரும் 1913 ஆம் ஆண்டு ஆப்பிரிக்காவுக்குக் கப்பலேறினர். ஆப்பி ரிக்கக் கரையில் கப்பல் விட்டிறங்கினர். ஓகோவ் ஆற்றில் படகுகளின் வழியாக இரவு பகலாக மூன்று நாட்கள், அடர்ந்த காடுகளின் நடுவில், கொடிய வெப்பத்தையும் நச்சுப்பூச்சிகளின் தொல்லையையும் தாங்கிக்கொண்டு செலவு மேற்கொண்டனர். இறுதியாக இலாம்பரீன் எனும் அச்சிற்றூரை அடைந்தனர்.

இவர் வருஞ் செய்தி முன்னரே அங்குள்ள மக்கட்கு எட்டி யிருந்தது மூட்டைகளைக் கரையேற்று முன்னரே பிணியாளிகள் வந்து குழுமலாயினர். யாராலும் கருதப்பெறாமல் அடவி நடுவில் அங்கொருவர் இங்கொருவராய்ப் பரந்து வாழும் அவர்கள் அனைவரும் அங்குக் கூடினர். எத்தனை எத்தனை முதியர்கள்! பெண்டிர்கள்! சிறுவர்கள்! குழந்தைகள்! அவர்கட்குத் தாம் எத் தனை எத்தனை நோய்கள்! துன்பங்கள்!... நம்பிக்கையோடு அனைவர் முகமும் அவர்மேல் மொய்த்தன!

மூட்டை முடிச்சுகளை வைப்பதற்கும் இடமில்லை. சிறிது நாட்கள் திறந்த வெளியிலேயே நோயாளிகளைப்பார்த்து வந்தார் ஆனால், வெயிலின் கொடுமையும், திடுமென வீழும் மழையும் பெருந்தடையாக விருந்தன. வெயில் வந்தால் நிழலில் ஒதுங்க வேண்டும். மழை வந்தால் மறைவிடம் தேடி ஓட வேண்டும். நோயாளிகளோ ஒரு துன்ப உலகமாகவே அவர்முன் வந்து குவிந்தனர். ஒரு தனி மாந்தன் என்ன செய்ய முடியும்? மனைவி, வீட்டைப் பார்ப்பதா? பயிற்சியிலாப் பணியாளர்களை மேய்ப் பதா? .. கணவனுக்குத் துணை புரிவதா? எனினும் அவரே சுவைட்சருக்கு வலிவும் ஆறுதலும் ஊட்டினார்.

விரைவில் அருகிலிருந்த ஒரு பழங் கோழிக் கூடத்தைத் தூய்மை செய்து, மருத்துவ மனையாக்கினர். தம் மொழி யறியா மக்களிடையே பணிபுரிவதுதான் எத்துணைக்கடிது! பிரெஞ்சு மொழியறிந்த ஓர் ஆப்பிரிக்க ஆசிரிய இளைஞனை வேலைக்கமர்த்தியும் அவன் நெடு நாள் வாராது காலந்தாழ்த்தினான்.

ஒருநாள் அங்கு வந்த நோயாளிகள் நடுவில் சுவைட்சர் ஓர் இளைஞனைக் கண்டார். சோசப் எனும் அவன் பிரெஞ்சு மொழி பேசத் தெரிந்தவன். கூர்த்த அறிவினன். அவனைச் சுவைட்சர் துணையாளராய் அமர்த்திக் கொண்டார். கல்வியறிவும், வெளி உலகப் பழக்கமும் இல்லாத குழந்தையர் போன்ற அம்மாந்தரிடையே அவர் பழகி அவர்களின் நோயினை அறிந்து மருந்துகள் வழங்குவதில் சோசப் அவர்க்குப் பெருந்துணையாக விருந்தான். அவ்வாறிருந்தும் பல தொல்லைகள் நேர்ந்தன. கொடுக்கும் மருந்தைச் சரியாகப் பயன்படுத்தாமல் ஒரே வேளையில் அருந்தி விடுவாரும், உண்ணும் மருந்தை மேற்பூசுவாரும், மேற்பூச்சுக் களிம்பை உள்விழுங்குவாருமாய்ச் சுவைட்சரின் பொறுமைக்கு எல்லைகண்டனர். பயனறியாமலேயே பொருட்களைத் திருடிக்கொண்டு போய்விடுவார் பலர்; சொன்ன வேலையைச் செய்யாது ஏமாற்றுவார் பலர்; இவர்களின் தன்மையையும் இவர்களை நடத்தும் முறையினையும் எடுத்துக்கூறி, அவர்க்குப் பல்லாற்றானும் துணையாகவிருந்தான் சோசப்.

பகலெல்லாம் இடையறா உழைப்பு .. நூற்றுக் கணக்கான மக்கட்கு மருந்து வழங்கல் வேண்டும் மருத்துவ மனைக்கு நல்ல கட்டிடம் வேறு எழுப்பியாக வேண்டும். இத்தனைத் தொல்லைகளையும் சுவைட்சரின் அருளுள்ளம் தாங்கிக் கொண்டது. உடன் எடுத்து வந்திருந்த துருத்திசைப் பெட்டி (Piano) மூலையில் தூங்கியது. எனினும் ஒருநாள் மாலை களைத்துவந்த சுவைட்சர் அதனை மீட்டத் தொடங்கினார். துயரோடு துயராய்ப் பிணியாளர்பால் ஊடாடிச் சோர்ந்த அவ்வுள்ளம் இசையின்பத்தில் துன்பமெல்லாம் மறந்து மெய்ம்மறந்து திளைத்தது. அன்று தொட்டு சுவைட்சருக்கு மாலைதோறும் இசையே புத்துயிரூட்டும் மருந்தாகப் பயன்பட்டது.

கட்டிட வேலையும் சிறிது சிறிதாக முன்னேறியது. நோயாளிகட்குத் தங்கும் அறைகளும், மருந்து வழங்கும் அறைகளும் கட்டப்பெற்றன. ஆப்பிரிக்க மக்களே இவ்வேலைகளைச் செய்தனர் என்றாலும், சுவைட்சரின் மேற்பார்வையில்லாமல் சிறிதும் வேலை நடவாது. ஒரு சிறிது சுவைட்சரின் பார்வை வேறு புறம் திரும்பினால் போதும். வேலையாட்கள் வேலையை விட்டு விட்டுக் காடுகளுட் சென்று சிரித்துக் கும்மாளமிடத் தொடங்கி விடுவர். அவர்களை மீண்டும் அழைத்துக் கொண்டு வரல் வேண்டும்.

நூற்றுக் கணக்கான கற்கள் தொலைவினின்று நோயாளிகள் வந்துகொண்டே யிருந்தனர். சாம்பிய உடலினர்; கூம்பிய முகத்தினர்; குழி விழுந்த கண்ணினர்; நோயாலும் பசியாலும் அரித்துண்ணப் பெற்றோர்; நொந்தவர், நைந்தவர், நலிந்தவர் எத்தனை எத்தனை! சுவைட்சரின் நகைமுகமும் நல்லன்பும் சோர்வடையாப் பெரும்பணியும் அவர்களிடையே புது மலர்ச்சியை ஏற்படுத்தின. அவரை மருத்துவராக அவர்கள் கருதவில்லை. மந்திரவாணர்(Magician) என்று பொருள்படும் ஒகாந்தா என்ற சொல்லால் அவரை அன்புடன் குறித்தனர். ஒன்பது திங்களில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மக்கட்கு மருத்துவ உதவி அளித்ததாகச் சுவைட்சர் குறிப்பிட்டுள்ளார். எனினும் தேவை வரவர மிகுந்து கொண்டே யிருந்தது. உழைப்பும் மிகுதியாயிற்று. சலிப்படையத்தகு நேரங்கள் எத்தனையோ வந்தன. சுவைட்சர் சலிப்படைந்தாரில்லை.

நன்மைப் பணி புரிவதில் உலகப் பொது மாந்தரிடம்தான் எத்துணை மெதுப்போக்கு! மடி, புறக்கணிப்பு! ஆனால் தீமையில் தான் எத்துணை சுறுசுறுப்பு! விரைவு! 1914-ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் எழுந்த உலகப்போரின் விளைவு ஆயிரக்கணக்கான கற்கள் தொலைவு கடந்து நடுக்காட்டில் கிடந்த இலாம்பரீன் எனுஞ் சிற்றூரை விரைந்து சென்று தாக்கும் என்று யாரும் கருதியிருக்க முடியாது. தம் மருத்துவப் பணிக்குப் பிற வெள்ளை மாந்தரிடமிருந்து தடைகள் மட்டும் விரைவில் வந்தன. அவர் பணி புரிந்த பகுதி பிரெஞ்சு நாட்டினர் ஆட்சியிலிருந்தது. அவரோ அப்பொழுது செருமனிக் குரியதான அல்சாசு மாநிலத்தினர்.

ஒரு நாள் பிரெஞ்சுப் போர் மறவர் சிலர் வந்து அவரிடம் போர்ச் செய்தியைக் கூறி அவரது வீட்டிலேயே மனைவியாரோடு காவற் சிறைப்படுத்தினர். எங்கும் செல்லக்கூடாதென்றும் கட்டளையிட்டனர். வன்கண் பல விளைத்தனர். சுவைட்சரும் துணைவியாரும் தமக்காக வருந்தினரில்லை. நோயால் நாடோறும் செத்துக் கொண்டிருக்கும் மக்கட்குச் செய்யவேண்டிய உயிர்ப்பணி தடைப்பட்டமையே அவர்கட்குப் பெருந்துயர் விளைத்தது!

வீட்டுள் அடைக்கப் பெற்ற சுவைட்சர் வாளாவிருந்தாரிலர். நெடு நாட்களாக அவர் உள்ளத்துட் குமைந்த எண்ணங்களைத் திரட்டி வாழ்க்கையின் பொருள்தான் யாது? (The meaning of life) என்ற நூலை எழுதத் தொடங்கினர். அந்நூலில் அவர் உள்ளத் துடிப்புகள் தெளிவாகத் தெரிகின்றன. ''கவிழ்ந்த மரக்கலம் போல் உலகம் அமிழ்ந்து கொண்டிருக்கின்றது. புதியதொரு மரக்கலத்தை முன்னையதினுஞ் சிறந்த

தொன்றைச் சமைத்தல் வேண்டும். அமிழும் மக்களை அதில் ஏற்றிக் காக்க வேண்டும்! அதற்கு நான் என் பங்கினைச் செய் தாக வேண்டும்'' என்று அதிற்குறிப்பிட்டுள்ளார். இயற்கையின் போராட்டம் அவரைச் சூழ்ந்திருந்தது. விலங்கும் புள்ளும் நிலைத்திணையும் தத்தம் உயிர்களைக் காப்பதில் காட்டிய போராட் டம் அவருள்ளத்தில் ஆழப் பதிந்திருந்தது. ஒருவரை ஒருவர் அழித்துத்தாளு உயிர் வாழவேண்டும் என்றெண்ணினர்; முடிவு பிறந்தது. ''அனைத் துயிர்களும் உயர்ந்தவையே; அவற்றை நாம் மதித்தல் வேண்டும்; உயிர்களை மதிக்கும் ஒருவன் ஒரு போதும் பொறுப்பற்று எவ்வுயிரையும் கொல்லான். அது மாந்த ருயினும், மாவாயினும், புழுவாயினும், புள்ளாயினும், பூச்சியா யினும், மலராயினும், இலையாயினும் யாவும் அவனுக்கு ஒன்றே! உலகம் இவ்வாறுதான் இருக்கும்-அதனைத் திருத்த முயல்வது வீண் என்று கூறி வாளாவிருக்கும் பெருமக்கள் சுவைட்சரின் வாழ்வையும் நூலையும் நினைவு கூர வேண்டுகின்றோம்!

துயர் விட்டபாடில்லை. பிரெஞ்சு ஆட்சியாளர் சுவைட்சரை யும் மனைவியாரையும் பிரான்சுக்கே அழைத்துக் காவற் கூட த்தி லிட்டனர். ஆப்பிரிக்க மாந்தர் கண்ணீருடன் வழியனுப்பச் சிறைக்கு வந்த சுவைட்சர் அங்கும் வாளாவிருந்திலர். அங்கும் நோயாளர் நலத்தையே நாடினர். அனைவரோடும் பழகி அவர் தம் வாழ்வைப் பற்றிய பல செய்திகளை அறிந்தார் சில திங்க ளின் பின் விடுதலை நேர்ந்தது.

தம் சிற்றூரான கன்சுபாக்குக்கு வந்தார் சுவைட்சர். இனி என்ன செய்வது? தம் மருத்துவப் பணியால் அவர் பெரிதும் கடன்பட்டிருந்தார். அவற்றையெல்லாம் அடைத்து மேலும் பொருளீட்ட அவர்க்கு வாய்ப்பிருந்தது. ஆம், பேராசிரியரா யும், இசைஞராயும், மருத்துவராயும் அவரை வரவேற்றுக் கொள்ள ஐரோப்பா முழுவதுமே காத்திருந்தது. மனைவியின் உடல் நலமும் குன்றி இருந்தது. பெண் மகவு வேறு பிறந்தது. அதன் நலத்தையும் கருதவேண்டும். ஆனால் இத்தனைக்கும் மேலாக இலாம்பரீனின் அழைப்பொலியே அவர் காதில் ஒலித் தது. அடவியின் நடுவிலிருந்து மடல்கள் வந்து குவிந்தன. ''ஐயா, நீங்கள் மீண்டும் வரவேண்டும்; ''தாங்களில்லாமல் நாங்கள் செத்து மடிகிறோம்'' ''அருள் கூர்ந்து வருக ஐயா'' துன்பிலிழைந்த அன்புக் குரல்கள்! அவற்றை மறுக்க அவரால் முடியவில்லை.

ஐரோப்பா முழுவதும் அலைந்து திரிந்து பொருளீட்டினர். இசை மீட்டினர்; சொற்பொழிவாற்றினர். ஆப்பிரிக்க மக்களின் துன்பக் கதையை எங்கும் எடுத்துரைத்தார். அவர்தம் அருள் முகத்தைக் கண்ட மாந்தர் உள்ளம் உருகினர். மீண்டும் ஆப்

பிரிக்கக் காடுகளிடையே சுவைட்சரின் படகு ஆற்றில் ஊர்ந்து வந்தது. இம்முறை மனைவி அவருடன் வரவில்லை. ஓர் ஆங்கில மருத்துவ இளைஞர் அவருடன் தொண்டு புரிய வந்திருந்தார். காடு மருத்துவ மனையை விழுங்கி விட்டிருந்தது! மரமும் கொடியும், புல்லுஞ்செறிந்து கட்டிடத்தை அழித்துச் சிதைத்திருந்தன. தொண்டர் மனம் கலங்கினாரில்லை. மீட்புப் பணியைத் தொடங்கினார். ''வந்துவிட்டார்!'' ''திரும்பிவிட்டார்'' என்ற களிப்புக் குரல்கள் காட்டைத் துளைத்தன மீண்டும் நோயாளிகள் குவிந்தனர். காலையெலாம் மருத்துவப் பணி; பிற்பகலில் கட்டிடத்தை எழுப்பும் பணி; அப்பப்பா! எவ்வளவு வேலைகள்! எனினும், தளரா நெஞ்சம் வெற்றிகண்டது. மீண்டும் வழக்கம்போல் மருத்துவ மனை பணி புரியத் தொடங்கியது. சுவைட்சர் அதன் பின் பன்முறை ஐரோப்பாவுக்குச் சென்று திரும்பியிருக்கின்றார். தம் பணியை மக்கட்கு விளக்கிக் கூறியும், இசை மீட்டியும், மருத்துவ மனைக்குப் பணம் திரட்டுதற்கும், தம் நூற்களை எழுதுதற்குமே அச்செலவுகளை மேற்கொண்டார்.

விரைவில் மருத்துவ மனை பெரிதாகியது; 1947-இல் 357 படுக்கைகள் உடையதாயிற்று. அருகில் இனிய நீரூற்று கண்டு பிடிக்கப்பட்டது. அடவியை அழித்து அழகிய தோட்டம் அமைக்கப் பெற்றது. மலர்ச் செடிகளும் காய்கறிச் செடிகளும் சூழ நின்று மருத்துவ மனையை அழகு செய்தன. அம்மனையில் அன்புத் தொண்டு புரிந்த மருத்துவரும், செவிலியரும் பலராயினர். அவர்கள் நடுவிலே அன்புருவாய் உலவி வந்தார் ஆல்பர்ட் சுவைட்சர். பின்னாட்களில் தொழு நோயரின் துயர்நீக்குதலே அவர்தம் தலையாய பணியாக அமைந்தது தொழு நோயர்க்கென மருத்துவ மனையருகில் ஒரு சிற்றூரே உருவாக்கப் பெற்றது.

இன்று இலாம்பரீன் தொண்டர்தம் பாழியாகத் தலைநிமிர்ந்து நிற்கின்றது. அதனை உருவாக்கிய அப்பெருந்தகையாளர் என்றும்போல் எளியராக இனியராகத் தம் பணியில் எள்ளளவும் குறையாமற் பணி புரிகின்றார். எண்பதகவைகளைக் கடந்த அவர் இன்றும் ஓய்வு பெற்றிலர்; உலகப் பரிசாகிய நோபல் பரிசு அவரைச் சென்றடைந்தது. அவரது நூற்கள் உலகெங்கும் பரவியுள்ளன. உலகிலேயே சிறந்த வளியிசைக் கருவி (Organ) இசைஞருள் அவரும் ஒருவராக மதிக்கப் பெறுகின்றார். அவரின் அருணெஞ்சமும், இடைவிடாப் பணியும், எளிய வாழ்வும் எத்தனையோ மாந்தர்க்கு ஊக்கமும் நம்பிக்கையும் ஊட்டுவதாய் அமைந்துள்ளன. ஆம்; தம்மையே அவர் உலகுக் கீந்தார். தொடக்கத்தில் அவர் இழந்த எல்லாவற்றையும் காலம் அவர்க்குத் திரும்ப அளித்தது. வழிதவறிய உலகில் வழியறிந்தவர் அவர்... எழுதியோரும் அறிவுரை புகன்றோரும் பலர்.

கோவலன்

விலை உரூ 2.

கிடைக்குமிடம்:-

பாரிநிலையம், சென்னை 1.

பூம்புகார்ப் பொற்றொடி

விலை உரூ. 2.

இலக்கிய நிலையம், திருச்சி

ஆசிரியர்: புலவர் கு. திருமேனி, பி. ஓ. எல்.

தமிழ் விரிவுரையாளர், நாட்டியற் கல்லூரி,

திருச்சி.

நூல் எழுதுவதை வயிற்றுப் பிழைப்புக்கொரு தொழிலாகக் கொண்டு, தான் சொல்வதற்கென்று ஒரு பயனுடைக் கருத்துமில்லாமல் எதையாவது எப்படியாவது எழுதி, எழுதியதை அச்சேற்றி ஏமாந்த மக்களிடையே பரப்பி வரும் போலிகள் மலிந்துவிட்ட இக்காலத்தில் புலவர். திருமேனி போன்றோர் ஆங்காங்கிருந்து நமக்கு மகிழ்வூட்டுகின்றனர். சிலப்பதிகாரத்தினை ஆழ்ந்து நுணுகித் தோய்ந்து ஆய்ந்து, மேற்கண்ட இருநூற்களையும் அவர் எழுதியுள்ளார். இலக்கிய விளக்கம் புரிவதாய் இன்று வந்து குவியும் வெற்று நூற்களைப் போன்றவை அல்ல இவை. கோவலன் மாதவி இருவர்தம் பண்பு நலன்களையும் ஆயும் இந் நூற்கள் இலக்கிய ஆராய்ச்சி வரிசையில் நல்லிடம் பெறத் தக்கன. ஒன்றுக் கொன்று துணைபுரிந்து செல்லும் இவற்றை இரட்டை நூற்கள் என்று கூறலாம்.

கோவலன், மாதவி இருவர் பண்பு நலனும் தெள்ளத் தெளிந்த விளக்கம் பெறுகின்றன. இடைக்கால, இக்காலச்

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஆனால் நாற்பத்து ஐந்து ஆண்டுகட்கு மேலாக இடைவிடா உழைப்பால் தாம் சொல்லியவற்றை வாழ்ந்துகாட்டிய பெருந்தகை அவர். நினையும் நெஞ்சம் நெக்கு நெக்குருக, விழியிற் பனி மல்க, அப்பெருந் தொண்டர் நீடூழி வாழ்க என்று கூறி வரலாற்றை நிறுத்திக் கொள்கின்றோம்.

*

செல்வக்குடிக் காளையர் விலைமகளிர் உறவுகளையும், அவற்றின் இழிந்த தன்மையையுமே கண்டு பழகிப் போனமையால், கோவலன் மாதவி வரலாற்றையும் அத்தகையதொன்றாகவே கருதிச், 'சிலம்பை'யும் ஆழ்ந்து பயிலாமல் மாதவி கோவலன்பால் பொருள் பறித்தாள் என்றும், அவன் அவட்குக் கொடுத்தற்காகக் கண்ணகியின் அணிகலன்களை வந்து வந்து பெற்றுச் சென்றான் என்றும், சிலப்பதிகார வரிகட்கே பிறழப் பொருள் கொண்டு நூலின் நுண்மையினையும் மெய்ச் சிறப்பினையும் உணராமலேயே சிலப்பதிகாரத்தைப் போற்றுபவர் பலராயினர். தமிழிலக்கிய மரபினையும், கோவலன் மாதவி தொடர்பில் அடிகள் அமைத்துள்ள நுண்ணிய இலக்கியப் பண்பாட்டினையும் கண்டு கொள்வாரிலர். அவ்வாறின்றி இந்நூற்கள் சிலப்பதிகாரத்தினை நுணுகி ஆய்கின்றன. கானல் வரிக்கு உரைகண்ட புலவர் பலரும் கோவலன் மனநிலைக்கும் மாதவியின் மனநிலைக்கும் கூறியுள்ள விளக்கம், நுணுகிநோக்கின், அவ்விருவர்க்கும், அவர்களைப் படைத்த இளங்கோவடிகட்கும் பெருமை தருவதாக இல்லை; உயரிலக்கியப் பண்புக்கும் வழுவாக உள்ளது. மற்றும், அம் மனநிலைகளைத் தவறுகப் புரிந்து கொண்டமையே இதுகாறும் பலரும் கூறியுள்ள கானல்வரி விளக்கங்கள் தெளிவில்லா திருத்தற்கும் காரணமாம். அவ்விருவர்தம் மனநிலையை ஆசிரியர் உணர்ந்து கூறும் திறம் போற்றத்தக்கது. அப்பாடல்களில் ஊடுருவியிருக்கும் மனநிலையின் அடிப்படையில் கானல்வரி புதுவிளக்கம் பெறுகின்றது. அதன்வழி, கோவலன் மாதவி பிரிவுக்கு மனவியற்படி பொருத்தமாகியுள்ள உண்மைக் காரணம் புலப்பட்டு, இலக்கியச்சுவை பெருகுகின்றது. மாதவியின் பெருமையும் விளங்குகின்றது. இலக்கியப்பண்பும் வழுவாதமைகின்றது. தமிழிலக்கிய உலகம் கானல்வரி விளக்கத்துக்காகப் புலவர் திருமேனிக்குக் கடமைப் பட்டிருக்கின்றது.

அதுபோலவே மாதவிபாற் சினந்து சென்ற கோவலன் கண்ணகியிடம் குறிப்பிட்ட 'சலம்புணர் கொள்கைச் சலதி', ''இழந்தகலன்'' என்பன முறையே கடலையுங் கவிழ்ந்த கலத்தையுங் குறிக்குமென ஆசிரியர் கூறுவது மனவியற்கும், கோவலன் மாதவியின் பண்பு நலன்கட்கும் பொருத்தமாக அமைகின்றது. மாதவி கணிகைக் குலத்தினளே. இக்கால விலைமகள் போன்றாளல்லள். அவளிடம் இழிந்த தன்மைகள் தென்பட்டிருந்தால் இளங்கோ போன்ற பெருந்துறவியர் அவளைப் பாடியிரார். மாதவியின் பண்புநலனில் இதுகாறும் புலவர் கண்ட சில கறைகளை இவ்வாசிரியர் நீக்கி உண்மைப் பூம்புகார்ப் பொற்றொடியை நம் கண்முன் நிறுத்தியிருப்பது பாராட்டுக்குரியது.

கோவலனுக்குப் பிறமகளிரின் தொடர்பிருந்தது என ஆசிரியர் கூறுவதையும் சிலம்பிற்காணும் புற அகச்சான்றுகளின் படி ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

பெரும்புலவர் தம் படைப்புகளை அணுகும்போது அவர்தம் மனநிலைக்குச் சென்று படைப்பு மாந்தரைப் புரிந்து கொள்வது தான் நம் கடனேயன்றி நம் காலத்தினையும் பழக்கங்களையும் அளவு கோலாக்கி அவர்களை அளத்தல் கூடாது எனக் 'கோவலன்' நூலின் தொடக்கப் பகுதியில் ஆசிரியர் கூறுவது ஏற்புடைத்தாகும். அது போன்றே, கானல் வரியை விளக்குவார், இலக்கிய மரபினைப் புரிந்து கொள்வது எவ்வாறு இலக்கியச் சுவை நுகர்வுக்குத் துணையாகும் என்பதை எடுத்துக் காட்டுகளுடன் விளக்கியிருத்தலும் நன்றும்.

தெளிந்த எண்ணமும் செறிந்த நடையும் பயின்று கற்றோர்க்கின்பம் பயப்பவாய் இவ்விருநூற்களும் அமைகின்றன. எளிமை எனும் பெயரால் பழந்தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தாரின்றி அழியவிடாது அவற்றை ஆசிரியர் நூற்களிற் கையாண்டுள்ளமை வரவேற்றற்குரியது. மெய்த் தமிழ்ப் பற்றும் உறுதியும் வாய்ந்த ஆசிரியர் தனித் தமிழ்வேட்கையில் மேலுஞ் சிறந்து மேலும் பல நூற்களை எழுதித் தமிழ்த் தொண்டு புரிய வேண்டுகின்றோம்.

'கல்லாடன்'

விரைவில்...

தென்மொழி அன்பர்தம் உள்ளங்கள் மகிழ

விரைவில், 'தென்மொழி'யில்

'நெடுங்கதை'

ஒன்று இடம் பெறுகின்றது.

தென்மொழித் தொகுப்பு.

பொங்கல் மலர் இடையிணைந்த, ஒன்று முதல் பதினாறு இசைகளின், முந்தைய தென்மொழித் தொகுப்பு விலைக்குக் கிடைக்கும். விலை 5–50 உருபா.

உருபா ஆறு அனுப்பின் பதிவஞ்சலில் அனுப்பப்பெறும்.

— அமைச்சர்.

இங்கர்சால்.
1833–1899.

முன்னிதழ்த் தொடர்ச்சி.
வாழ்வியல்.

உரிமை.
(THE LIBERTY.)

குழந்தைகள் உரிமையும் முடிபும்:-

பெண்களே அடிமைகட்கு அடிமையாக வாழ்கின்றனர் என்று சொன்னால், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கின்றது? அறியாமை நிறைந்த வாழ்வென்னும் கடலில் தூக்கி வீசப்பெற்ற அவர்கட்கு என் உள்ளத்தையே தருகின்றேன்.

உங்கள் குழந்தைகளை மிகவும் அன்புடன் நடத்துங்கள்; அவர்பால் இனிமையாகப் பேசுங்கள்; குழந்தை பொய் கூறுமானால் அன்போடு அதனைக் களையுங்கள்; கடுமையான குரலொடும் கையில் கம்புடனும் அதனைக் கடியும்பொழுது, அவ்விளவுள்ளங்கள் பொய்கூறித் தப்பப் பார்க்காமல் என்ன செய்யும்?

'சிறிய குழந்தைகளை என்னிடம் வரச் செய்யுங்கள்; அவர்கள் நடுவில்தான் இன்பவுலகம் சூழ்ந்திருக்கின்றது' என்று ஏசுகிறித்து கூறினார்.

குழந்தைகளுக்குச் சிறிதாவது உரிமை கொடுங்கள். இளமையாயிருக்கும்பொழுது பெற்றோர்களின் கண்டிப்பும், பருவம்வந்த பின் சமயக்கட்டுப்பாடும் அவர்களைப் பாழ்படுத்தி விடுகின்றன.

அவர்கள் விளையாட விரும்பும்பொழுது விளையாடவிடுங்கள்; தூங்கவிரும்பும்பொழுது தூங்கட்டும்; தூக்கமில்லாதபொழுது விழித்துக் கொள்ளட்டும்.

அவர்களுக்கு எல்லாவற்றைப்பற்றியும் எண்ணிப்பார்க்க இடங்கொடுங்கள். நீங்கள் ஏற்படுத்தும் கட்டுப்பாடுகளினால்

அவர்களுக்குத் தரவிருக்கும் பட்டறிவை அவர்கள் தன்னுரிமை யாலேயே தாமாகப் பெற்றுவிடக்கூடும்.

ஆடவரை மரங்களென்றும், பெண்டிரை அம்மரங்களைச் சுற்றிய கொடிகளென்றும், குழந்தைகளை அக்கொடிகளில் மலரும் மலர்கள் என்றுமே நான் கருதுகின்றேன்.

மக்கள் கூட்டரவு நல்லவர்களைத் தோற்றுவித்துப் புரக்கக் கூடிய வகையில் அமையவில்லை. காலமும் நாடுங்கூட அறிஞர்களைத் தோற்றுவிக்கத் துணை நிற்கவில்லை. எல்லாரும் பிரிந்து படுக்கும் கோடை காலத்தைவிட, கணவன் கைக்குள் மனைவி மக்கள் ஒடுங்கிப் படுத்திருக்கும் குளிர் காலமே துறக்கவுலகத்தினும் உயர்ந்தது என்று நான் கருதுகின்றேன். மாந்தருக்குள் இணைப்பை ஏற்படுத்துங்கள்.

இந்த உலகம் இறந்து போனவர்களால் நடைபெறக்கூடாது உயிர் உள்ளவர்களாலேயே நடைபெறல் வேண்டும். கல்லறை, அரசு கட்டிலாகாது; பிணம் அரசனாகாது; மாந்தன் தன் முன்னோர்கள் சாம்பல்மேல் வாழ்வை அமைத்துக் கொள்ளக்கூடாது.

நான் முடிவாகச் சொல்வதெல்லாம் இதுதான்; இப்பொழுதுள்ள மெய்யறிவாளர்களைவிட, இறந்துபோன மெய்யறிவாளர்களுக்கு மிகுதியாகத் தெரிந்திருக்க முடியாது இந்த உலகத்தைப்பற்றி நாம் அறிந்துள்ளதே மிகவும் குறைவு. இனி அடுத்த உலகங்களைப்பற்றி என்ன தெரியும்?

நம் தந்தைமார் அறிவுள்ள அடிமைகளாகவே இருந்தனர். பாட்டன்மார்களோ வெறும் அடிமைகளாகவே இருந்திருக்கின்றனர். நாம் இப்பொழுது முடிவாகக்கொண்ட கொள்கைகளில் சாட்டையடியின் தழும்பிருக்கின்றது. அடிமை விலங்கின் துரு ஏறியிருக்கின்றது. ஆட்சியின் சாம்பல் படிந்திருக்கின்றது.

மூட நம்பிக்கை அடிமைத் தன்மையின் குழந்தை. ஒவ்வொருவரும் தாமாகவே எண்ணிப்பாருங்கள்; எல்லாரும் தாமாகவே எண்ணவும், எண்ணியதை எடுத்துக்கூறவும் உரிமை பெற்று விடுவார்களாயின், ஒவ்வொருவருடைய மூளையினின்றும் சிறந்த கருத்துகள், மன்பதைக்கு மிகவும் இன்றியமையாத கலையறிவுகள் தாமே முகிழ்த்துத் தோன்றும்.

ஆடவரும் பெண்டிரும் வெறும் கோயில் குளங்கட்கு அஞ்சுகின்றவரை, சமயத் தலைவன் அச்சத்தை யுண்டுபண்ணி மக்களைக் கட்டுப்படுத்துகின்றவரை, மக்களினம் வெறும் புத்த

கங்களைத் தொழுது கொண்டிருக்கின்றவரை இவ்வுலகில் பேதைகளும் அடிமைகளும் மூட நம்பிக்கை என்ற கந்தைத் துணியை உடுத்திக்கொண்டுதான் திரிவார்கள்.

ஆண்கள் சமயத்தின் அடிமைகளாக, தாமாக எண்ணிப் பார்க்கவும் இயலாத கருத்துக் கோழைகளாக, வெறும் மறை நூல்களைத் தூக்கித் திரிகின்ற வாய்ப்பறையாளர்களாக உள்ள வரை, பெண்களும் குழந்தைகளும் ஊமையர்களாகவே இருக்க வேண்டியிருக்கும்.

மறை நூல்களில் குடும்பத்தின் அமைதியையும், கணவனுடன் உரிமையோடு பேசி மகிழ்கின்ற மனைவியையும், பெற்றோர்களுடன் கலந்து உறவாடும் குழந்தையையும் காணமுடியாது.

உரிமைபெற்ற ஒருவன் இந்த உலகின் எந்த மூலையிலும் இதுவரையிருந்ததில்லை. ஒவ்வொரு மாந்தனும் தனித்தனி ஆற்றலுடையவனே. ஒவ்வொருவனுக்கும் உள்ள கொள்கையை அவனவனுகவே வரையறுக்கின்ற காலம் இன்னும் வரவில்லை. அறியாமையும் அடிமைத்தனமும் இறை வழிபாடு ஆகிவிடமுடியாது. பிணக் கட்டில்களைவிடத் தொட்டில்களுக்கு மிகுந்த இடங்கொடுங்கள்; உங்களை நீங்களே அளவிட்டுப் பாருங்கள். பின்பற்றுபவர்களெல்லாம் ஆசிரியர்களாக ஆகும் வரை இவ்வுலகம் முன்னேற்றம் அடைந்துள்ளது என்று கூற முடியாது.

இவற்றிற்கெல்லாம் ஒரே வழி உரிமை! தன்னுரிமை! எதிர்காலம் எத்தகையதாக இருக்குமோ நான் அறியேன். ஆனால் ஒன்றைமட்டும் திண்ணமாகக் கூறுவேன். அங்கு மக்கள் இனத்தின் உரிமையே ஆட்சி செய்யும். அந்தக் காலமே மிகவுயர்ந்த காலம். (முற்றும்)

தென்மொழி

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

கையொப்பம்.

	உள்நாடு.	கொழும்பு.	வெளிநாடு.
தனி இதழ்	50 காசு.	60 காசு.	75 காசு.
ஆண்டுக் கட்டணம்	6 உருபா.	7-25 உருபா.	9 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

இதழ் ஒன்றுக்கு உருபா 1-00 முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்கவும்.

மெய்யறிவியல்.
Philosophy.

விவேகானந்த அடிகள்.
தமிழில்: 'வழுதி'

கல்வி

மாந்தனிடம் அடங்கியிருக்கும் முழுமையை வெளிப்படுத்துவதே கல்வி. அறிவு புறத்திருந்து வருவதில்லை. நம் உள்ளேயே அமைந்திருக்கின்றது. நாம் அறிந்தோம் என்பதெல்லாம் அறிந்தனவே அல்ல நம் உள்ளத்தை மூடியிருந்த திரையை நீக்கிக் கண்டு கொண்டவைதாம். உளமே அறிவின் இருப்பிடம். திரையை நீக்கும் முயற்சியே கல்வி.

எவரும் எவராலும் கற்பிக்கப்பட்டதே இல்லை. தாமாகக் கற்பதே கல்வி. புற ஆசிரியரின் வேலை நம் உள்ளிருக்கும் அறிவைத் தூண்டிவிடுவதுதான். ஆக ஆசானின் வேலை உடனே தொடங்கும். அகன்றுயர்ந்த ஆலமரமனைத்தும் மீன் சினையினும் நுண்ணிய விதையில் அடங்கியிருப்பதுபோல், பேருள்ளந்தானும் சிறிய குருதி அணுவில் உளது. அதனின்று வளர்வதே நம் கடமை. அதற்கான ஆற்றலும் அதனுள்ளேயே இருக்கின்றது அதனை உணர்ந்து கொண்டாற்போதும்.

உள்ளத்தின் இறையொளி பெரும்பாலோரிடத்தில் மறைக்கப்பட்டுக்கிடக்கின்றது. இருப்புக் குப்பியுள் விளக்கினைப்போல் இருக்கின்றது. தூய்மையாலும் தன்னலமின்மையாலும் மறைப்பின் அழுத்தத்தை மெல்ல மெல்லக் குறைத்துக் கண்ணுடிபோல் ஆக்கிவிடலாம்.

குழந்தைக்குக் கல்வி புகட்டுவது செடியொன்றை வளர்ப்பது போன்றதே .... செடி தன்னியல்புக்கேற்பத் தானே வளர்வதுபோன்றே குழந்தையும் வளர்கின்றது தடைகளை நீக்கி வழியினை அமைப்பதொன்றே நம் வேலை. கற்பிப்போர் விழிப்புணர்வைத் தூண்டி மாணவர் தங்கள் புலன்களைத் தக்கபடி பயன்படுத்துமாறு செய்தாற்போதும். அதுவே கல்வி. தன்னறிவை மாணவர்க்குத் திணிப்பது அவர்களைக் கெடுப்பதாகும். பெற்றோரும் ஆசிரியரும் இதனை உணரல் வேண்டும்.

வளர்ச்சியின் முதல் தேவை உரிமையேயாகும். இக்குழந்தையை நான் வளர்த்துத் திருத்துவேன் என்று சொல்ல மற்ற

வர்கள் யாவர்? அவரவர் தம் சிக்கலைத் தாங்களே தீர்த்துக் கொள்ளட்டும்.

செய்திகளைத் திணிப்பது கல்வியாகாது. அது மூளையை முறுக்கி மனத்தை நெருக்கிக் கெடுதி செய்வதாகும். நம் கல்வி வாழ்க்கையை உருவாக்குவதாய், மாந்தத் தன்மையை வளர்ப்ப தாய், பண்பு நலனை மிகுப்பதாய் அமைவதாகும். சிறிதே கற்றவனாயினுங் கற்றபடி ஒழுகுவோன் வெற்று மனப்பாடமாய்ப் பலபடக் கற்றவனிலும் சிறந்தவனாவான்.

பிறர்தம் எண்ணங்களை வேற்று மொழியில் கற்று மனப் பாடஞ்செய்து பட்டம் பெறுவது கல்வி என்று நினைக்கின்றோம். இதுவா கல்வி? பிழைப்பதற்கு ஒரு வேலையில் அமர்வதுதானா கல்வியின் நோக்கம்? அதனால் நாட்டுக்கு என்ன நன்மை?

நாட்டில் கல்வியிலா மக்கட் பெருந் தொகுதியை வாழ்க் கைப் போராட்டத்துக்குத் தகுதியாக்காததாகி, உறுதியான பண்பு நலனையும், அருளுணர்வையும் நெஞ்சுரத்தையும் வளர்க் காத ஒன்று கல்வி என்ற பெயருக்கே தகுதியுடையதன்று.

கல்வியின் நோக்கமெல்லாம் மாந்தனை உருவாக்குவதே! அறிவு பெறுதற்குரிய ஒரே வழி மன ஒருமிப்பேயாம் (Concent-ration). எப்பணி புரிவோனும் அதில் ஒன்றி ஒருமிக்கானாயின் அப்பணியில் வெற்றி பெறுன். ஒருமிப்பு மிக மிக அறிவின் ஆழமும் மிகுகின்றது.

எண்ண—ஆற்றலை வீணாக்குவோரே தம்பணியில் தவறுகள் புரிகின்றனர். பயிற்சிபெற்ற மனம் தவறே செய்வதில்லை. விலங்குகட்கு மன ஒருமிப்பில்லை. மாந்தனை விலங்கினின்று வேறுபடுத்துவது இவ்வொருமிப்பேயாம். மாந்தனை மாந்தனிட மிருந்து வேறுபடுத்துவதும் இதுவே. உயர்நிலை மாந்தனையும், தாழ்நிலை மாந்தனையும் ஒப்பிட்டுக் காணின், மன ஒருமைப்பாட் டின் அளவுதான் அவ்வேறுபாட்டுக்கும் பொருட்டென்று புலப் படும்.

இம் மன ஒருமைப்பாட்டை வளர்க்கவே பழங் காலத்தில் மாணாக்கர்க்குக் கடைப்பிடி (பிரமசாரிய) நிலை வற்புறுத்தப்பட் டது. மன ஒருமிப்பு உயிர்ப்பு (ஆன்ம) ஆற்றலை மிகுக்கின்றது

தான் ஒன்றுமில்லை என்று நினைப்பவன் அவ்வாறே ஆகின் றான். தன்னாற்றலை உணர்ந்து நடப்பவனே முன்னினும் உயர் கின்றான்.

ஒருவன்தன் உள்ளத்தின் விருப்பு வெறுப்புகளும் இயக் கங்களுமே அவன்தன் பண்புநலன் (Character) ஆகும்.

அவன் நுகர்ந்த இன்ப துன்பங்களும், உள்ளத்தில் பாய்ந்தோடும் எண்ண இறைகளுமே அவனை உருவாக்குகின்றன.

நல்லதும் தீயதும் இணைந்தே பண்பை உருவாக்குகின்றன. சிலகால் துன்பமே, மகிழ்வினும் சிறந்த ஆசிரியனாகின்றது. ஏழ்மையே, பொருள்வளத்தினுஞ் சிறந்த கல்வி புகட்டுவோனாக இருந்து வருகின்றது. உள்ளத்தில் விழும் ஒவ்வோர் அடியும் உள்ளக்கனலை எழுப்புகின்றது. வளமான வாழ்வில் மலர்ப் படுக்கையில் அமர்ந்து ஒரு துளிக் கண்ணீர்தானுஞ் சிந்தியறியாமல் பெரியார் ஆனவர் எவர்? அன்பின் கிளர்ச்சியும் துன்ப நெருக்கடியும் உயிர்ப்புப் புயலைக் கிளப்பும்போதுதான் உள்ளொளி சுடர்விடுகின்றது.

உள்ளம் ஒரு பொய்கை போன்றது. அதில் ஏற்படும் ஒவ்வொரு குமிழியும் அலையும் மறையாத விளைவை ஏற்படுத்திச் செல்கின்றன. நாம் செய்யும் ஒவ்வொரு வேலையும், நினைக்கும் ஒவ்வோர் எண்ணமும் நம் உடலின் ஒவ்வோர் அசைவும் நம் மனத்தில் மறைவாகப் பல கீறல்களைப் (Impressions) பதித்துச் செல்கின்றன. இவ்வாறு பதிந்தனவே நம் பண்பை உருவாக்குகின்றன. நல்லெண்ணங்கள் நம்மிற் பதிந்தால் நாம் நல்லவராகின்றோம். தீய எண்ணங்கள் பதிந்தால் தீயவராகின்றோம். தீய நினைவுகளும், தீய சொற்களும் தீய செயல்களுமே நம்மைச் சுற்றி நிகழுமாயின் அவை நம் உள்ளத்தைச் சென்று தாக்கி நம்மை அறியாமலேயே நம்மைத் தீவழி உய்க்கின்றன. நல்லவர் நடுவிலிருந்தாலோ, நாமும் நம்மையறியாமலேயே நல்லவராகின்றோம். இவ்வெண்ணங்களே நாளடைவில் நம் பழக்கமாகிவிடுகின்றன. இப்பழக்கங்களே நம் இயல்போடு ஒன்றிவிடுகின்றன. ஆதலின் தீய பழக்கங்களை விலக்குதற்கு நற்பழக்கங்களை மேற்கொள்வது ஒன்றே வழியாகும். நல்லவற்றையே எண்ணி, நல்லவற்றையே பேசி நல்லவற்றையே ஆற்றுவோமாக.

தீமைக்குக் காரணம் அனைத்தும் நாமே. நம்மைக் கடந்த பேராற்றலைக் குறைகூற வேண்டா. யாரும் துணையில்லையே என்று நம்பிக்கையிழந்து தடுமாற வேண்டா. பட்டுப்பூச்சி புழுவாயிருக்கையில் தன்னைத்தானே நூலாற் சுற்றிக் கூடமைத்துக்கொள்வதுபோல, நாம் வினையெனும் வலையால் நம்மைநாமே சிறைப்படுத்திக்கொண்டு, யாரோ நம்மைக் கட்டிப்போட்டுவிட்டதாகப் புலம்புகின்றோம். உதவி எங்கிருந்து வரும்? அதுவும் நம் முன்னிருந்துதான் வரவேண்டும். கடவுளர்களை நோக்கிக் கதறினால் பயனில்லை. நான் அவ்வாறுதான் கதறினேன். பயனில்லை; பிறகு என்னையே நான் கண்டுகொண்டேன்.

நான் பல தவறுகள் (Mistakes) புரிந்திருக்கின்றேன். ஆனால் அத்தவறுகளே என்னை உருவாக்கியுள்ளன ..... தவறு

புரிந்துவிட்டோமே என்று வருந்தி மூலையிற் கிடப்பதில் பயனில்லை. அவற்றைப் பெறவேண்டிய அறிவையும் பெற்றே முன்னேற வேண்டும்.

வலிவின்மை தவற்றுக்குப் பொருட்டாகின்றது. அறியாமை வலிவின்மைக்கும் பொருட்டாகின்றது. நம்மை அறியாமையில் ஆழ்த்துவார் யார்? நாமேதாம். கைகளாற் கண்களைப் புதைத்துக்கொண்டு "அய்யோ இருள்!"என அலறுகின்றோம். கையை அகற்றுவோம். ஒளியைக் காணலாம்.

அழுது கதறுவதால் பயனில்லை. செய்த பிழைகளை எண்ணி எண்ணிப் புலம்புவதால் பயனில்லை இருட்டறையில் அமர்ந்து ஓவென்று அழுதால், ஆயிரம் ஆண்டானாலும் அவ்விருள் மறையுமா? ஒளியைக் கொண்டு வாருங்கள்! தீமை மாயும். பண்பை வளர்த்து உள்ளார்ந்த இயல்பைப் புலப்படுத்துங்கள்!

இவ்வுலகமே தாக்கியங்களால் ஆயது (influence). நம் உடலுக்குப்போக எஞ்சிய நம் ஆற்றலின் ஒவ்வோரணுவும் இரவும் பகலும் இயங்கி நம்மைச் சுற்றியுள்ளாரைத் தாக்குகின்றது. நம் உடலும், நற்பண்பும், நம் உள்ளமும், நம் உயிர்ப்பு உணர்வும் . எப்போதும் மற்றவரைச்சென்று தாக்கிக்கொண்டேயுள்ளன. அதுபோலவே நாமும் பிறர்தம் ஆற்றலால் தாக்குறுகின்றோம்.

சொற்களும் எண்ணங்களும் தாக்குவதினும் மாந்த ஆற்றலே மிகுதியாகத் தாக்குகின்றது. பிறரைக் கவர்ந்திழுக்கும் காந்தத்தன்மை அது.

பெரும் பெருந்தலைவர்களை எடுத்துக்கொண்டால், அவர்கள் தம் தன்னுண்மை (Personality)யே அவர்தம் பெருமைக்குக் காரணமாக இருந்திருப்பதைக் காணலாம். பெரும் இலக்கிய ஆசிரியர்கள்; அறிஞர்கள் அவர்தம் எண்ணங்களையும் எழுத்துகளையும் ஆய்ந்து பார்ப்போமாயின்..... அவற்றுக்கென்று தனிச் சிறப்பில்லை. அவை பலரும் கூறியவையே. சலித்துப்பார்த்தால்–மிஞ்சும் உண்மையான புதிய எண்ணங்கள் மிகக் குறைவே! இவ்வெண்ணங்களா அவர்களைப் பெரியார் ஆக்கின? அல்ல அல்ல; அவர்கள் தம் தன்னுண்மையே சிறப்புக்குக் காரணம். தன்னுண்மை இரு பகுதி. அவனது உள்ளமும் உரைகளும் ஒரு பகுதி நம்மில் வேண்டியது அத் தன்னுண்மையே. மாந்த ஆற்றலைவளர்ப்பதுதான் கல்வி.

இதனை விட்டு விட்டுப் புறப்புனைவுகளில் முயற்சியைச் செலுத்துகின்றோம். என்னபயன்? உள்மாந்தனையன்றோ வளரச் செய்யவேண்டும்? வளர்ந்து சிறந்து தன் கவர்ச்சியாற்றலை,

காந்தத் தன்மையைச் சுற்றிலும் படரச்செய்து பிறரைத்தன்பால் இழுத்து ஆற்றலின் உலைக்களமாக விளங்கும் மாந்தனே நமக்குத் தேவையானவன். அத்தகைய மாந்தன் எதனையும் ஆற்ற முடியும். அவன்தன் ஆற்றல் எதில் நுழைந்தாலும் அதனை இயக்கும்.

இந்த ஆற்றலை எந்த அறிவியல் சட்டத்தாலும் விளக்க முடியாது. அது எந்தச் சட்டத்துக்குள்ளும் அடங்குவதுமில்லை. உடலைக் கூறுகூறுகப் பிரித்து ஆய்ந்து பார்த்தாலும் அதனைக் காண முடியாது. எனினும் இத்தகைய ஆற்றலே உண்மை மாந்தனுகவிருக்கின்றது. அவ்வுண்மை மாந்தனே வாழ்ந்து பிறரை இயக்கி மறைகின்றுன். அவன் விட்டுச்சென்ற நூற்களும் எண்ணங்களும் அவனுடைய நிழல்களே!

பருமை உலகின் சட்டங்களின் அகத்தே நுண்ணிய சட்டங்கள் உள்ளன. உடல், உள்ளம், புலம்பன் (ஆன்மா) எனத் தனித்தனி உலகங்கள் இல்லை. அவ்வுலகம் ஒரு கூர்நுதி மாடம் போன்றது. பரியதிலிருந்து செல்லச் செல்ல நுண்ணிதாகிக் கொண்டேவருகின்றது. மிகநுண்ணியதைப் புலம்பன் (ஆன்மா) என்றும், பரியதை உடல் என்றும் சொல்கின்றேம்.

நம்முடலைப் போன்றதுதான் புடவியும். புறப்பருமை நுண்ணிதாகி ஆகி இறுதியில் இறைவனுகின்றது. பருமையினும் நுண்மையே வலிவு வாய்ந்தது. பருமையினை இயக்குவது நுண்மையே. நம் பருவுடலின் உறுப்புகள் அனைத்தையும் இயக்குவன நுண்ணிய மூளை நரம்புகள் அல்லவோ? நுண்ணிதாதலின் அதன் வலிவு நம் புலன்கட் கெட்டுவதில்லை . . . !

நாம் செய்வதனையும் எண்ணங்களையும் கட்டுப்படுத்தமுடியவில்லையே என்று வருந்துகின்றேம். நம் நுண்ணுளத்தைமட்டும் கட்டுப்படுத்திக்கொண்டால் பிறவெல்லாம் தாமாகவே கட்டுப்படுமே!

இந்த நுண்ணுற்றல்களையும் முதற்பொருட்களையும் அறிந்து அளந்து ஆய்ந்து பற்றிக்கொள்ள வழி யொன்றிருந்தால்தான் புலனடக்கம் இயல்வதாகும். தன்மனத்தைக் கட்டுப்படுத்தத் தெரிந்தவனே பிறர்மனத்தையும் கட்டுப்படுத்தமுடியும்; எனவே தான், சமயங்களெல்லாம் தூய்மையும் ஒழுக்கமும் பற்றிப் பேசுகின்றன. தூய, ஒழுக்கமுடைய மாந்தன் தன்னையே கட்டுப்படுத்திக் கொள்கின்றுன். ஒரு மனத்தை அறிந்தவன் அனைத்து மனத்தையும் அறிகின்றுன். அனைத்து மனமும் ஒரு பேருள்ளத்தின் கூறுபாடுகளேயாகலான். ஒரு பிடிக் களிமண்ணை அறிந்தவன் உலகனைத்துமுள்ள களிமண்ணின் இயல்பை அறிந்து கொள்கின்றுன். தன்னையுணர்ந்தவன் அனைத்தையும் உணர்கின்றுன்.

(தொடரும்)

சிறு கதை.

மறு மணம்

'அறிவடியான்'
சோரப்பட்டு.

வழக்கம்போல் மாலையில் கடற்கரையில் நீல அலைகள் என் கால்களில் வந்து மோதும்படி நான் நடந்துகொண்டிருந்தேன். ஆள் நடமாட்டமில்லாத ஓர் இடத்தில் ஒருவர் அமர்ந்திருந்தார் அவர் ஒரு பெரிய அலுவலில் உள்ளவர் என்பதும்; நல்ல செல்வம் படைத்தவர் என்பதும் அவரைப் பார்த்தவுடனேயே தெரிந்தது.

நடந்து கொண்டிருந்த நான் அவருக்கு மிகவும் அருகில் சென்றேன். இப்பொழுதுதான் நான் அவர் கண்களில் நீர் பெருகிக் கொண்டிருப்பதைக் கண்டேன். அவர் மனம் இங்கில்லாமல் எங்கேயோ சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தது என்பதையும் என்னால் உணர முடிந்தது.

தாம் கண்ணீர் விடுவதை ஓர் இளைஞன் பார்த்துவிட்டானே என்பதற்காக அவர் என்ன நினைத்துக் கொண்டாரோ தெரியவில்லை. ஒரு வறண்ட சிரிப்பை உதிர்த்துவிட்டு, ''நீங்கள் அந்தஇறைவனை நல்லவன் என்று எண்ணுகிறீர்களா? தென்றற் காற்றிலே தடையின்றிப் பறக்கலாம் என்ற பேராவலுடன் பறக்க முயலும் பச்சைக் கிளிகளைக் கல்லால் அடிப்பதில் அவனுக்கோர் இன்பம்'' என்றார்.

என்னால் நடக்கமுடியவில்லை; சிறிது தயங்கி நின்றேன்.

''விரைவாகப் போகவேண்டுமா? இல்லையெனில் சற்று அமருங்களேன் தம்பி; இருந்து பேசிவிட்டுப் போகலாம்''என்று மேலும் அவரே பேசினார். நான் விடையொன்றும் சொல்லாமல் அமைதியாக அவர் எதிரே அமர்ந்தேன்.

''பிறப்பவர்கள் இறக்காமலே வாழவேண்டுமென்று யாரும் நினைப்பதில்லை. ஆனால் இன்பமாக வாழலாம் என நம்பி இல்வாழ்க்கையில் புகுந்தவர்களை இரண்டே நாளில் அழித்துவிடுவது அருளற்ற இறைவனின் செயலல்லவா தம்பி?'' என்று அவர் என்னைக் கேட்டார்.

''ஆம்'' என்று தலையை ஆட்டினேன் நான்.

''கணவனை இழந்த இளம் பெண்கள் வாழ்வதைவிட இறந்துபோவதே மேல். நம் நாட்டின் நாகரிகம் அப்படிப்பட்டது. இல்லையா?'' என்று கேட்டுவிட்டு அவர் என்முகத்தைப் பார்த்தார்.

''நாகரிகங்கள் காலத்திற்கேற்றவாறு மாறிக்கொண்டே இருந்தாலும், நம் நாட்டின் பல அடிப்படைக் கொள்கைகளை—அவை நன்மை பயவாதவையானாலும்—மக்களின் மனத்தை விட்டு மாற்ற முடிவதில்லை. இந்நிலையில் புதுமை கண்டு மக்களமைப்பை எதிர்க்கத் திறன் இல்லாதவர்கள் அரசியலிலோ, கல்வித்துறையிலோ, அல்லது மக்கள் தொண்டிலோ, தங்களை ஈடுபடுத்திக் கொள்ளலாம்'' என்றேன் நான்.

''நீங்கள் சொல்கிறீர்கள்; அவர்களுக்கு அது ஒருவாறு ஆறுதலளிக்கலாம். ஆனால் அத்தகைய நிலை அடைந்தவர்களின் பெற்றோர்கள் என்ன ஆகிறார்கள் தெரியுமா? அனலின் முன் மெழுகுபோல் நாளுக்குநாள் உருகுகின்றனர்'' என்று சொன்ன அவரது கண்கள் கலங்கின.

''நீங்கள் அத்தகைய ஒருவருக்குத் தந்தை என்பதை என்னால் உணர முடிகிறது. முடிந்தால் குமுகத்தை எதிர்த்துப் போராட முன் வாருங்கள். இல்லையேல் நீங்கள் எப்படியாவது துன்பத்தைப் பொறுத்துக் கொண்டுதான் ஆகவேண்டும். நம் அமைப்புச் சட்டம் அப்படிப்பட்டது. அதை மாற்றியமைப்பதென்பது அத்துணை எளிதில் முடியக்கூடியது அன்று ஆனால் அத்தகைய காலம் வரலாம்''என்றேன் நான்.

''தம்பி......எனக்கிருப்பவள் ஒரே ஒரு மகள்தான். திருமணம் முடிந்த பத்தே நாட்களில் கணவனை இழந்த அவளின் பிஞ்சு நெஞ்சம் எவ்வளவு துன்பப்படும்! அவள் மிகவும் நல்லவள் தம்பி. இரக்க உள்ளம் படைத்தவள். எப்பொழுதும் எளிமையாய் இருப்பாள். துன்பப்படுபவர்களைக்கண்டால் கண்ணீர் வடிப்பாள். அப்படிப்பட்டவளுக்கு இந்த நிலை நேர்ந்ததே என்பதை நினைக்கும்பொழுதுதான் என் நெஞ்சம் வெடிக்கிறது'' என்று கூறிய அவரது கண்களிலிருந்து முத்து முத்தாக நீர்த்துளிகள் உதிர்ந்தன. மகள் மீதுள்ள அத்தந்தையின் அன்பு என்னையுங் கலங்க வைத்துவிட்டது.

''நல்லவர்களால் நல்வாழ்வு வாழ முடிவதில்லை. நல்லவர்களைத்தான் வருத்துவான் இறைவன். நல்லவர்களால் தாம் அதைப் பொறுத்துக் கொள்ள முடியும்! ஆறுதல் சொல்ல வேண்

டிய நீங்களே இவ்வாறு கலங்கினுல் உங்கள் பெண்ணுக்கு எத் தகைய துயரம் இருக்கும்!'' என்று கேட்டேன் நான்.

''ஆம் .....ஆம்......'' என்று தன் கண்களைத் துடைத்த வண்ணம் தலையை ஆட்டினுர் அவர். பின்பு, ''நான் வீட்டில் இப்படியெல்லாம் இருப்பது கிடையாது தம்பி. இதைப்போன்ற நேரம் வந்துவிட்டால் எங்கேயாவது கிளம்பி வந்துவிடுவேன். இப்பொழுதெல்லாம் அவளே எனக்கும் அவள் தாய்க்கும் ஆறு தல் சொல்லத் தலைப்பட்டுவிட்டாள். அவள் விரும்பியபடியே இவ்வாண்டு சட்டக்கல்லூரியில் சேர்ந்து படித்துக் கொண்டிருக் கிருள்'' என்ருர் அவர்.

'சட்டக்கல்லூரி' என்றதும் என் உள்ளத்தினுள் ஒரு மின் னல் மின்னியது. ஏன் எனில் நானும் ஒரு சட்டக் கல்லூரி மாணவன்தான். அக்கணமே 'அருள்விழி' என் மனத்தில் நிழலாடத் தலைப்பட்டாள். 'அருள்விழியின் தந்தையிடம்தான் நாம் இப்போது பேசிக்கொண்டிருக்கிரும்' என்பதை உணர்ந் தேன். அவர் சொன்னபடி அவள் அமைதியானவள்தான். என் வகுப்பில்தான் அவள் படிக்கிருள்!

''நேரமாகிவிட்டது, போகலாம் தம்பி'' என்று சொல்லிக் கொண்டே அவர் எழுந்தார். மணல் மேட்டிலிருந்து காந்தி படிமம் (சிலை) வரும் வரை இருவரும் பேசவேயில்லை.

காந்தியின் படிமத்தருகே சாலையிலே அந்த மகிழுந்து— நாளும் அருள்விழியைக் கல்லூரிக்குக் கொண்டுவந்து விட்டு விட்டுப்போகும் அதே உந்து-நின்று கொண்டிருந்தது.

அதில் ஏறிக்கொண்ட அவர் ''தம்பி நீங்கள் எங்குப்போக வேண்டும்? ஏறிக்கொள்ளுங்கள்; கொண்டுபோய் விட்டுவிட்டுப் போகிறேன்'' என்று கூறினுர்.

''இல்லை இல்லை; இங்கு அருகில் உள்ள திருவல்லிக்கேணி நெடுஞ்சாலைக்குத்தான் போகவேண்டும். நடந்தே போய்விடு வேன்'' என்றேன் நான்.

''நானும் அந்த வழியாகத்தான் போகவேண்டும். ஏறிக் கொள்ளுங்கள்'' என்று சொல்லிக்கொண்டே அவர் கதவைத் திறந்துவிட்ட பிறகும் என்னுல் மறுக்க முடியவில்லை.

○ ○ ○

மறுநாள் காலையில் நான் கல்லூரியில் அடி எடுத்து வைப்ப தற்கும், அருள்விழியின் மகிழுந்து வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது.

அதனுள் அமர்ந்திருந்த அருள்விழியின் தந்தை என்னை அடையாளம் கண்டுகொண்டு "தம்பி!" எனக் கூப்பிட்டார். நானும் திரும்பிப் பார்த்து அவரைக் கண்டதும் வணக்கம் சொல்லிக்கொண்டே அவர் அருகில் சென்றேன். அவரின் உடையைக் கண்டபிறகுதான் அவர் உயர் நெறி வழக்கு மன்றத்தில் வழக்குரைஞராக இருக்கிறார் என்பதை உணர முடிந்தது.

"நீங்களும் இங்குத்தான் படிக்கிறீர்களா தம்பி!" என்று என் கையிலுள்ள புத்தகங்களைப் பார்த்தவாறே கேட்டார் அவர். நான் புன்முறுவலுடன் 'ஆம்' எனத் தலையை ஆட்டினேன்.

"இவரை உங்களுக்குத் தெரியுமா அப்பா" என்று கேட்டுக்கொண்டே வண்டியிலிருந்து இறங்கினாள் அருள்விழி.

அவர் அவளுக்கும் விடை சொல்லிவிட்டு, என்னையே சிறிது நேரம் பார்த்துவிட்டுச் "சரி......மிகவும் மகிழ்ச்சி. நேரமாகிவிட்டது நான் வருகிறேன்" என்று சிரித்துக்கொண்டே போய்விட்டார்.

அதன்பின் கொஞ்சங் கொஞ்சமாக எண்ணங்களில் அலைவுண்ட என் மனம் 'ஏன் அருள்விழியை நாம் மறுமணம் செய்துகொள்ளக்கூடாது?' என்று கேட்கத் தலைப்பட்டது. என் மனம் குழம்பிப்போய் இருந்தது.

ஏழெட்டு நாட்கள் சென்றபின் ஒரு நாள் மாலை என்னை யாரோ தேடிக்கொண்டு வந்திருப்பதாகப் பணியாள் வந்து கூறினான். நான் என் அறையைப் பூட்டிக்கொண்டு வந்து பார்த்தேன். அருள்விழியின் தந்தைதான் வந்திருந்தார். "கடற்கரைக்குப் போகலாம் வருகிறீர்களா தம்பி" என்று என்னை அவர் அழைத்தார். நானும் புறப்பட்டுப் போனேன்

கடற்கரைக்குச் சென்று அமர்ந்த பிறகு சிறிது நேரம் வரை எதை எதையோ பேசிய அவர், என் குடும்பத்தைப்பற்றிக்கேட்டார். நானும் என் குடும்பத்தைப்பற்றிய செய்தி எல்லாம் அவரிடம் கூறினேன்.

பிறகு சிறிது நேரங் கழித்து "தம்பி" என்று அழைத்து என் கண்களையே ஊடுருவுவதுபோல் பார்த்தார். "நான் உங்களிடம் ஒன்று கேட்கலாம் என எண்ணுகிறேன். ஆனால் நீங்கள் என்ன நினைத்துக் கொள்வீர்களோ என்று அஞ்சுகிறேன்" என்றார் அவர்.

"நான் ஒன்றும் நினைத்துக் கொள்ளமாட்டேன் நீங்கள் சொல்லுங்கள்" என்றேன் நான்

''தம்பி! நன்ருக ஆராய்ந்த பின்புதான் இந்த முடிவுக்கு வந்தேன். எல்லாரும் நல்லபடியாக வாழவேண்டும் என்ற எண்ணமேதவிர, ஒருவருக்காக ஒருவர் கெட்டுப்போகவேண்டு மென்ற எண்ணமில்லை. உங்கள் பேச்சின் மூலம் உங்களைப் பற்றி நான் சிறிது அறிய முடிந்தது. அதனுல்தான் இதை உங்களிடம் கேட்கத் துணிந்தேன் தம்பி! உங்களுக்கு விருப்ப மிருந்தால் அருள்விழியை உங்களுக்கு மணமுடிக்க நான் விரும்புகிறேன். என் கண்மணியின் நல்வாழ்வுக்காக நான் எதையும் செய்ய அணியமாய் இருக்கிறேன்'' என்று கூறிய அவர் கண்களிலிருந்து நீர்த்துளிகள் விழுந்தன.

நான் ஒன்றும் விடை சொல்லாமல் அமர்ந்திருப்பதைக் கண்ட அவர் ''நன்ருக எண்ணிப் பார்த்து, இரண்டு நாட்கள் கழித்துக்கூடச் சொல்லுங்கள் தம்பி. நல்ல முடிவையே நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்ருர்.

''அருள்விழியை மணந்து கொள்வதைப்பற்றி எனக்கு ஒரு வகை மறுப்பும் இல்லை. அவளைப்பற்றிஎனக்கு நிறையத்தெரியும் அவளைப்போன்ற ஒரு பெண் மனைவியாய்க் கிடைக்கமாட்டாளா என்று நான் பல முறை எண்ணியதுண்டு. இப்பொழுது அவ ளையே மணந்து கொள்ளுமாறு நீங்கள் சொல்லுவதில் நான் மிகவும் மகிழ்கிறேன் .... ஆனுல்......''

நான் என் பேச்சை முடிப்பதற்குமுன் ''இந்த உலகத்தைப் பற்றிக் கவலைப்படுகிறீர்களா?'' என்று கேட்டார் அவர்

''இல்லை'' என்றேன் நான்.

''பின் ஏன் தயக்கம்? என்று கேட்ட அவரது உதடுகள் துடித்தன.

''என் தாயைப்பற்றிக் கவலைப்படுகிறேன். படித்து அறிவு பெருதவர்களிடம் நாம் இத்தகைய புதுமைச் சீர்திருத்தத்தைப் பற்றியெல்லாம் பேசினுல் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். மேலும் என் தாய்க்கு இத்தகைய சீர்திருத்தமெல்லாம் பிடிக்காது. அவ ரது வாழ்க்கை சிற்றூரிலேயே வளர்ந்துவிட்ட உலகறியா வாழ்க்கை. அவர் எதையும் ஏற்றுக்கொள்ளமாட்டார். அவரி டம், அவர் புரிந்துகொள்ளும்படியாக எதுவும் கூற முடியாது; பயன் விளையாது. என்னை ஆளாக்கிய என் தாயின் மனத்திற்கு மாருக நான் நடப்பதென்பது .. ..'' என்று நீட்டினேன். அவர் இடிந்து போயிருக்கவேண்டும்.

இருவரும், குதித்து ஆடிக்கொண்டிருந்த ஆழ்கடலையே சிறிது நேரம் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தோம். அதில் ஒன்றும் புதுமை இல்லை; வழக்கமான பழமைதான்.

சிறிது நேரங் கழித்துச் சட்டென என் மருங்கு திரும்பிய அவர் ''ஏன் தம்பி! கலப்பு மணத்தையாவது உங்கள் தாயார் ஏற்றுக்கொள்வாரா?'' என்று கேட்டார்.

''அதை ஒருவாறு எதிர்பார்க்கலாம். ஆனுல் கைம்பெண் மணத்தை மட்டும் ஒப்புக்கொள்ளவேமாட்டார் என்று கருது கின்றேன். மீறினுல் பிரிவு'' என்றேன் நான்.

''அப்படியென்ருல் நமக்கு வழியிருக்கிறது''என்று மகிழ்ச்சி யுடன் கூறினுர்.

''எப்படி?'' என்று ஆவலுடன் கேட்டேன் நான்.

''அருள்விழி ஒரு கைம்பெண் என்பதையே அடியோடு மறைபொருளாக்கிவிடலாம்'' என்ருர்.

''தற்பொழுதைக்கு மறைத்து விடலாம். ஆனுல் வாழ்நாள் முழுவதும் அவ்வாறே இருக்க முடியாது'' என்றேன் நான்.

''முயன்ருல் முடியும். அவள் வாழ்விற்காக நான் எதையும் செய்யக் காத்துக் கிடக்கிறேன். அருள்விழியைக் கன்னிப் பெண்ணுக்கி, என் எழும்பூர் வீட்டை விற்றுவிட்டு மயிலாப்பூரில் புது வீடு வாங்கிக் குடியேறி விடுகிறேன் நான். என் உறவினர் களிடமும், நண்பர்களிடமும் செய்தியைக் கூறி மறைத்துவிடு கிறேன். சென்னைபோன்ற நகரங்களில் நாம் எதையும் எளி தில் மாற்றிவிடலாம்'' என்ருர் அவர்.

என் உள்ளத்தில் புது ஒளி பிறந்தது. கை நழுவிப் போய்க் கொண்டிருந்த ஒன்றை விடாமல் மறுபடியும் கைப்பற்றிய உணர்வை அடைந்தேன்.

எனது நிலையைக் கண்ட அவருக்கு நம்பிக்கை ஒளி பிறந் தது. ''தம்பி! வாருங்கள் வீட்டிற்குப் போகலாம். எதற்கும் அருள்விழியின் எண்ணத்தையும் தெரிந்து கொண்டுவிட்டால் நல்லது'' என்ருர் அவர்.

எனக்கும் அது நல்லதாகவேபட்டது. இருவரும் அவர் வீட்டிற்குப் போனேும். உந்து உள்ளே நுழைந்தவுடனே ஓர் அம்மையார் வீட்டினுள்ளிருந்து வந்தார். அவர்தாம் அருள் விழியின் தாய் என்பதை என்னுல் உணர முடிந்தது

மூவரும் வரவேற்பு அறையில், இருக்கையில் அமர்ந்தோம். ''குழந்தை எங்கே? என்ன செய்கிருள்?'' என்ருர் அவர் அந்த அம்மாவிடம். ''மாடியில் படித்துக்கொண்டிருப்பாள்'' என்ருர் அந்த அம்மாள்.

பிறகு அவர் என்னைக்காட்டி: ''இவர் யார் தெரியுமா? நான் சொன்னேனே; இவர்தான்!'' என்ருர்.

உடனே அந்த அம்மையார் என்னை அன்புடன் பார்த்து ''வாருங்கள் தம்பி'' என்று வரவேற்ருர்.

பிறகு, ''எல்லாம் முடிந்துவிட்டது. அருள்விழியின் உள் ளத்தைத்தான் அறியவேண்டும். அவளை அழைத்து வருகிருயா'' என்று அந்த அம்மாளிடம் கூறினுர் அவர்.

அடுத்த சில நொடிகளில் மாடிப்படிகளில் அந்த அம்மையாரின் பின்னல் அழகே உருவாக அருள்விழி வந்து கொண்டிருந்தாள்.

என்னைக் கண்டதும் அருள்விழிக்கு வியப்பாக இருந்தது. ''வாருங்கள்'' என்று வணங்கியவாறே என்னை வரவேற்றுவிட்டுத் தன் தந்தையின் பக்கத்தில் அமர்ந்தாள். பின்பு ''என்ன அப்பா?'' என்று தன் தந்தையைப் பார்த்துக் கேட்டாள்.

அவர் தன் மகளை அன்புடன் பார்த்தார். தன் செல்வ மகளின் பால் வடியும் முகத்தைச் சிறிது நேரம் பார்த்தவாறே அவரது கண்கள் என்னை உற்று நோக்கின. தம் மகளின் எதிர்கால இன்ப வாழ்க்கையைப்பற்றி அந்தத் தந்தை மனம் கற்பனையில் எண்ணி மகிழ்ந்தது போலும்! அவர் கண்களிலே புது ஒளி மின்னுவதை நான் கண்டேன்.

பிறகு ''அம்மா ...... வாழ்க்கை வாழ்வதற்கே என்று நீ படித்திருக்கிருய் அல்லவா......'' என்று தொடங்கித் தம் கருத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக வெளியிட்டார் அவர். அதன்பின் ''உன் முடிவு என்னம்மா? நன்ருக எண்ணிப் பார்த்துவிட்டுப் பிறகு வேண்டுமென்ருலும் நல்ல முடிவாகச் சொல்'' என்ருர்.

யாவரும் ஒன்றும் பேசவில்லை. சிறிது நேரம் அமைதி நிலவியது. பின்பு அருள்விழி தலை குனிந்துகொண்டே பேசினுள்...

''வாழ்க்கை வாழ்வதற்குத்தான். ஆனுல் அந்த வாழ்க்கை அன்பிற்குக் கட்டுப்பட்டதாகும். கணவனை இளமையிலேயே இழந்ததனுல் வாழ்விழந்த குறை இருந்தாலும் அதுதான் தூய்மை நிலை இந்த நிலைதான் நம் நாட்டிலே தலை முறை தலை முறையாக எண்ணிப் போற்றப்பட்ட நிலை. அன்பை மதிப்பவர் சில பேர்; வாழ்வை மதிப்பவர் பலபேர். அன்பு என்ற சிறந்த பொருள் அழியாமல் சிறப்பதற்காகத்தான் கற்பு என்ற வேலியைப் படைத்தனர். ஆனுல் நாளடைவில் அன்பு என்ற சொல்லை மறந்து, கற்பு கற்பு என்று அலட்டிக் கொண்டனர். கற்புக்கே முதலிடங் கொடுத்தனர் அந்தக் கற்பைப் பாதுகாக்க வெறும் சடங்கு முறைகளையும் நடிப்பு முறைகளையும் ஏற்படுத்திஞர்கள். அன்பு என்றும் அழியாதது. ஆனுல் கற்பு அத்தகையதன்று. அன்பு உட்பொருள்; கற்பு வெளிப் பொருள். உயிரும் உடலும்போல் பிரிக்க முடியாத இவை இரண்டையும் பிரிப்பது எனக்கு உடன்பாடில்லை. கைம்பெண்களும் நல்வாழ்வு வாழமுடியும். எனக்கு அதைவிட மணம் பரப்பக்கூடிய சிறந்த வாழ்வு வேறெதுவும் இருக்கமுடியாது. அருள் கனிந்து என்னை மன்னித்து விடுங்களப்பா'' என்று கூறிவிட்டு, அருள்விழி புத்தகத்துடன் அமைதியாய் எழுந்து மாடிப்படிகளை நோக்கிப் போய்க்கொண்டிருந்தாள்!

இலக்கியம்

எண்சுவை எண்பது.

2. வியப்பு.

என்னை இகழ்வளிலள்; ஈண்டிகழ்வள் மற்றியான்
அன்னை எனும் நினைவும் ஆ!மறந்தாள்; அன்பிறந்தாள்;
பின்னையெவன் கண்டாள் பிணை? (1)

---

2. வியப்பு.

பெண் வளர்ந்து பருவம் எய்திய ஞான்று முன்னைக்கும், பின்னைக்கும் உள்ள ஏற்ற மாற்றங்கள் கண்டு, உருவும், உள்ளமும், செயலும் வியந்து விருப்பின்மேல் பெருமைபடக்கூறியது வியப்பு எனலாயிற்று.

1) **என்னை இகழ்வள் இலள்** என்றது முன்னை இருந்த நிலை. *தன் தாயின் கால்சுற்றும் மகவாயிருந்து, மடிபடுக்குங்* குறுநடைக் குழவியாய் வளர்ந்து, முப்போதும் பிரியாமலிருந்த ஞான்றை, அவள் தாயை இகழ்ந்தவளல்லள் என்பது கூறி, **ஈண்டிகழ்வள்**-என்றுள். ஈண்டு-பெண்மைப் பருவம் எய்திய பின்றை ஆண்துணை வேண்டல்பற்றிப் பெண்துணை இகழ்வள் என்று மொழிதலாயினள்.

அன்னை எனும் நினைவும் ஆ! மறந்தாள்-மறவா மகளை மறந்தாள் என்றல், முன்னில்லா நிலை ஈண்டுவந்த கவலை பற்றி.

துரை-மாணிக்கம்

உண்ணுவதில்; முன்போல் உறங்குவதில்; உற்றவரை
எண்ணுவதில்; கூன்பிறையொன் றேந்துநுதன் மாங்குவளைக்
கண்ணிலெவன் விட்டான் கணை? (2)

முனிவிலள்முன்; இற்றை முறுவலிலள்; முன்போற்
கனிவிலள்செங் காந்தளிளங் கைமேல் அடித்துத்
தனியிலெவன் சொன்னான் தடை? (3)

ஆ! *மறந்தாள்—வியப்பு. மறவாதவள் மறந்தாள் என்றலின்.*

துணையாயிருந்த பெண்மையை இகழ்வதும், அன்னையாயிருந்தவளை மறந்ததும், எல்லார்பாலும் காட்டற்குரிய அன்பையும் இறந்தாள் என்றதும், அவள் கொண்ட மாற்றங்கள்; அன்பைக் கொட்டி வளர்க்கும் அன்னையை நீக்கி அவள் வேறு யாரை அவளுக்குத் துணையாகக் கொண்டாள்? என்பது வியப்பு.

எவன் கண்டாள் பிணை? *வேறு ஒரு பெண்ணும் தனக்கீடு ஆகாள் பெண்ணொருத்தியை விரும்புவதானால் பெண்களுள் எல்லா வகையினும் அன்னையே அருந்துணையாயிருக்க, வேறுபெண்ணை அவள் விரும்புதல் இருக்காது என்றெண்ணிய தாய், அவள் விரும்பியது ஆண் துணையையே என்றும், அவ்வாறு அவள் உள்ளங்கவர்ந்தவன் தாய்க்கீடான அன்புடையவனாக இருத்தல் வேண்டும் என்றும் கொண்டே* **பிணைஎவன் கண்டாள்?** *என்றாள் என்க.*

2) *உண்ணல், உறங்கல் உற்றவரை எண்ணல் முதலியன புறச்செயல்களாதலின் அவற்றின்பாற்பட்ட மாற்றங்கள் எளிதில் உணர்தலாயின. இந்த மாற்றங்கட்குக் காரணமான அவள் பருவ நோய்க்கு அவள் கண்களே காரணமாதல் பற்றி,* **'கண்ணில் எவன் விட்டான் கணை?'** *என்று கூறினள். தான் காத்து வளர்க்கும் அவளை, அருகில் வந்து எவனும் விரும்பாமல், தொலைவிலிருந்தே பார்வையால் கவர்ந்திருக்க வேண்டும் என்பதை உய்த்துணர்ந்த தாய்* **'கணையைக் கண்ணில்விட்டான்'** *என்றாள் என்க.*

3) *தான் வேற்றான் மேல் நினைவாயிருத்தலால் அதற்குப் புறம்பான பொருள் செயல்மேல் முனிவு ஏற்படுதலும் உள்ளம் தெளிவுற்றும் பருவ எண்ணங்கள் மொய்க்குமாதலின் முறுவல் தோன்றுததும், தான் கொண்டான் பற்றிக் கருதி*

தாய் துடையிற் றுஞ்சும் தனிமயிலித் தண்தரையில்
பாய் துறந்து பூங்குழலே பாயாப் படுத்துறங்க
வாய்த்ததென்ன பால்நாறும் வாய்க்கு? (4)

தந்தை பிரிவிலள்; தானிற்க நாணுவளீண்
டெந்தைதாய் நன்சொற் கிணங்குவதில்; மற்றெவரால்
முந்தைநிலை மாறினளெம் முன்? (5)

துவர்கனிவாய்க் கோதை தனிபோகாள்; கங்குற்
சுவர்நாடி வல்கதவத் தாழ்திறந்து நாளும்
எவர்நாடிப் போவாள் இவள்? (6)

இன்புறற்குப் பிறர் பேச்சுத் தடைசெயல்பற்றி, அவர்பால் **கனிவிழப்பள்** என்றலும், அகச் செய்கைகளாம். முன்பு முனிவு செய்யாதவள் ஈண்டு முனிந்தாள். முன்பு நகைத் தவள் ஈண்டு முறுவலுங் காட்டாள். முன்பு கனிவுடைய ளாய் இருந்தவள் ஈண்டுக் கனிவிழந்தாள். 'இவ்வாறு முன்பு இருந்த அகநலன்களைச் செய்யவேண்டா என்று தடை செய்தவன் யாவன்?' என்று வியக்கின்றாள்.

தனியிலெவன் சொன்னான் தடை என்றது எல்லா மிருக்க எவனும் வந்து அவளிடம் பேசுதல் நடவாதாக வின், அவ்வாறு தடை கூறியிருந்தால் அவன் தனிமையி லேயே கூறியிருக்க வேண்டுமென்பதும் அறிவிப்பான் வேண்டி.

4) **தாய் துடையில் துஞ்சுவள்**–என்பது தாய் அவள்மேல் வைத்த அன்பும் மகள் இளமையானவள் என்பதும் புலப் படல் வேண்டி என்க.

தனி மயில்–வேறு மகள் இல்லையாதலால்.

பால் நாறும் வாய்க்கு: இளமை தோன்றக்கூறியது. 'எவரும் என்றும் இளையவர் அவர் தாய்க்கே'என்றவினால்

5) *தந்தையை முன் பிரிந்தறியாள்; ஈண்டோ அவர் முன் நிற்கவும் நாணுவள்; பெற்றோரின் நன் சொற்கும் இன்றை இணங்குவள் இலள்; முன்பிருந்ததுபோல் இல்லாமல் எம் முன்னிலையில் மட்டும் மாறுபடுகின்ற இவ்வேறுபாடு எவரால் நிகழ்த்தப் பெறுகின்றது என்று வியக்கின்றாள்.*

6) *துவர்–சிவப்பு.* **தனிபோகாள்**–எங்கும் தனித்துப்போகாள் இப்படிப்பட்டவள் இக்காலை கங்குலில் சுவர்வழிச்சென்று,

கோட்டுப்பூச் சூடிக் குழல்புனைந்து, முன்மாலை
கூட்டுப் புறவெனவே காத்தென்னே? யான்காலை
காட்டுப்பூக் கண்ட கருத்து! (7)

நெற்றிப் பிறையில் உகிர்ப்பிறைகள்; தாழ்ந்திருக்கும்
கற்றைக் குழல்நெளிவிற் கான்கொன்றை! செங்கண்ணள்
பெற்றதெவன்? யாண்டெவன்றன் பால்? (8)

மடியிருந்தாள் அன்றை; மணல்வீடு கட்டிக்
குடியிருந்தாள் நேற்று; குழலவிழ யார்பால்
துடியிடையாள் கண்டாள் துயர்? (9)

கண்டதெது கூர்ங்கண்? களித்ததெது வள்ளைக்கா
துண்டதெது செவ்வாய்? உணர்ந்ததெது தன்னெஞ்சம்
கொண்டதெதிம் முல்லைக் கொடி? (10)

வலிந்த கதவின் தாழ்திறந்து செல்லும் பழக்கமுடையளாய் இருக்கின்றாள்.

நாளும்-என்றது பழக்கம் தோன்ற நின்றது.

அங்ஙன் இவள் நாடிப்போவது எவரை என்று வியந்தபடி.

7) முன் மாலை தான் கோட்டுப்பூ வைத்திருக்க, மறுநாட் காலை வேறு காட்டுப் பூவைச் சூடியிருந்தாள்; இதன் கருத்து வியப்பு குறித்தது. தாய் மகளைப் பேணிய முறையைக் கூட்டுப் புறவெனக் காத்து என்பதாற் காட்டப் பெற்றது. என்னே என்றது அவ்வாறு காத்தும் பயனில்லை என்றவாறு. கோட்டுப்பூ—மகிழம் முதலிய மரத்தில் மலரும் பூ.

8) செங்கண்ணள்-இரவு கண்விழித்துச் செவ்வரி படர்ந்த கண்கண்டு கூறியது.

உகிர்-நகம். நெற்றியில் உகிர் அழுத்தமும், கற்றைக் குழலில் கான் கொன்றையும் இவள் பெற்றது எப்படி? எங்கு? எவன்பால்? என்றது.

9) பருவத்துயர் கொள்ளும்படி இவள் பெரியவளல்லள்; சிறியவளே! என்பதை மடியிருந்த நிகழ்வு வைத்துக் கூறியதால் காண்க.

10) ஒருவனைத் தொலைவிலிருந்தக்கால் முதலிற் கண்டது கண் ஆகலின் 'கண்டதெது கண்' என்றாள். இனி எல்லாரும்

இருக்கவும் கரவு கொண்டு நோக்கித் தன் கருத்தைக் கூறியிருத்தலால், வெறுங்கண் என்னாது 'கூர்ங் கண்' என்றாள்.

அவனைக் கண்ணுற்கண்டு கவர்ந்த பின்றை அருகு நெருங்கி, அவன் மொழி கேட்டிருப்பாளாகையால் அடுத்து **'என்ன கேட்டது அவள் கா'**தென்றாள். வெறு வாய்க் கேளாமல் கேட்டுக்களித்தலால் **'களித்த தெது வள்ளைக்காது'** என்றாள். கண்டு, கேட்டபின்றை உண் ணல் முறைமையாகலின் இளமை நலம் உண்ண வேட்ட அவள் 'செவ்வாய் எதனை உண்டது?' என்று வியந்தாள்.

இனிக், கண்டு, கேட்டு, உண்ட பின்னை உயிர்த்தல் எனும் மெய் நிகழ்வு பற்றியும், அழகுகண்டு, வாய் மொழி கேட்டு இளமை நலம் உண்ட பின்னர் அவனே அவள் நெஞ்சிற் குடியேறிய வல்லானுதல் வேண்டும் என்றும் கூறுவான் வேண்டியும், **'உணர்ந்தது எது தன் நெஞ்சம்'** என்றாள் எனக் கொள்க.

இனி, இந்நலங்களெல்லாம் பெற்ற பின்னை இன்னொரு வனைச் சுற்றிப் படரத்தக்க இக்கொடி போன்றவள், அவ னையே கொழு கொம்பாகக் கொண்டு விட்டாளோ என்று ஐயமும் வியப்பும் தோன்ற **'கொண்ட தெதிம் முல்லைக் கொடி?'** என்றாள் வெறுங்கொடி என்னாது 'முல்லைக் கொடி' என்றதால் கற்புணர்த்தப்பெற்றது. முல்லை-கற்பு.

(தொடரும்)

தென்மொழி அன்பர்கட்கு!

'தென்மொழி'க்கு அனுப்பும் பணவிடைகளையோ (M. O.) மடல்களையோ அல்லது வேறு செய்தி களையோ,

ஆசிரியர்,
தென்மொழி, திருப்பாதிரிப்புலியூர்,
தெ. ஆ. மாவட்டம்

என்னும் முகவரியிட்டே அனுப்ப வேண்டுகிறோம். தென்மொழியில் பொறுப்பாகவும் உறுப்பாகவும் இயங் கும் எவரின் தனிப் பெயரிலும் பண விடை, மடல், செய்தி ஆகிய இவற்றை அனுப்ப வேண்டா என்று கேட்டுக் கொள்கிறோம். — அமைச்சர்.

மணிமொழி மாலை

அன்பு என்பது ஒரு மொழி. அதைக் குருடர்கள் படிக்கலாம்; ஊமைகள் பேசலாம்; செவிடர்கள் கேட்கலாம்.

— மேற்கத்தியப் பழமொழி.

○ ○ ○

நாம் செல்வர்களாக இருக்கவேண்டும் என்ற கடமை ஒன்றுமில்லை; ஆனால் ஒழுக்கமுள்ளவராக இருக்க வேண்டுவது ஒவ்வொருவருடைய கடமையுமாகும். — பெர்னார்டு சா.

○ ○ ○

உயர்வான மக்கள் கருத்துகளைப்பற்றி பேசுகின்றனர். நடுத்தர மக்கள் நிகழ்ச்சிகளைப்பற்றிப் பேசுகின்றனர்; தாழ்வான மக்கள் தனியான ஆட்களைப்பற்றியே பேசித் தீர்க்கின்றனர்.

— சீனப் பழமொழி.

○ ○ ○

மூடன் தனக்கு எவ்வளவுக் கெவ்வளவு குறைவாகத் தெரிகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு மிகுதியாகத் தெரிந்திருப்பதாக நினைத்துவிடுகின்றான். அறிஞனோ தனக்கு எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகத் தெரிந்திருக்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு குறைவாகத் தெரிந்திருப்பதாக எண்ணி மேலும் கற்க விழைகின்றான். — ரூசோ.

○ ○ ○

பணப்பை காலியாகும்பொழுது மனப்பை நிறைகின்றது.

— மகாவீரர்.

○ ○ ○

உங்கள் திறமையைப் புலப்படுத்த நீங்கள் செய்யும் நூறு சொற்பொழிவுகளைவிட உங்கள் நடத்தை ஒன்றே போதுமானது

— காந்தியடிகள்.

○ ○ ○

ஒரு கொலை செய்தவன் கொலைகாரன்; கோடிக் கொலை செய்தவன் மறவன். — பிசப்போர்டுசு.

உங்கள் தொல்லைகளைப் பிறர்க்குச் சொல்ல வேண்டா. பெரும்பாலார் அவற்றைப் பற்றித் துளியும் கவலைப்படவோ இரக்கப்படவோ மாட்டார்கள்; மற்றவரோ அவற்றில் மகிழ்ச்சி கூட அடைவார்கள். — பிலாசாபர்.

○ ○ ○

அரசினர் செய்ய வேண்டியவற்றுள் இரண்டு செயல்கள் தலைமையானவை. முதலாவது ஏழை எப்படி வாழ்ந்து கொண்டிருக்கின்றான் என்பதைப் பணக்காரனுக்கு அறிவிக்கவேண்டும் இரண்டாவது பணக்காரன் எப்படி உழைக்கின்றான் என்பதை ஏழைக்கு அறிவிக்கவேண்டும். — அட்கின்சன்.

○ ○ ○

உயர்ந்த உள்ளம்கொண்ட ஒருவனுடன் உயர்ந்த உள்ளம் கொண்ட ஒருபெண் பேசிக் கொண்டிருக்கும்போது உதிரும் கருத்துகளே மிகவும் சிறந்ததாக அமைய முடியும். —ரசுக்கின்

○ ○ ○

போலிச் செய்கைகளால் புகழ் பெற்றவர் இவ்வுலகில் ஒருவருமிலர். — சான்சன்.

○ ○ ○

உலக வரலாற்றில் மிகவும் பெரியவன் ஓர் ஏழையாகவே இருப்பான். — எமர்சன்.

○ ○ ○

மெதுவாக உறுதியளிப்பவனே அதை நாணயத்தோடு நிறைவேற்ற முயற்சி செய்வான். — ரூசோ.

○ ○ ○

தண்டனை என்பது குற்றவாளிகளைத் திருத்துவதற்காகப் பயன்படவேண்டும்; ஆனால் ஒருவனைத் தூக்கிலிடுவதால் அவன் ஒன்றுக்கும் பயனற்றவனாகப் போகின்றானே!

-- வால்டையர்.

○ ○ ○

அறிவுரைகளைப் பலரும் கேட்கின்றனர்; ஆனால் அறிவாளிகளே அவற்றால் பயனடைகின்றனர். — சிரூசு.

○ ○ ○

நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்; உலகில் மிகுந்த அழகுடைய பொருள்கள் எல்லாம் சிறிதும் பயனற்றவையே; மயில், அல்லி இவை எடுத்துக்காட்டுகள். — ரசுக்கின்.

○ ○ ○

குருடர்களே வாழும் நாட்டில் ஒரு கண் பார்வையை உடையவனே அரசன். — எரேசுமசு.

○ ○ ○

வாணிகர் உள்ளம் எண்ணெய் போன்றது. மற்றொரு வாணிகர்தம் உள்ளந்தவிர வேறொன்றுடன் அது கலக்காது.

— கிரஃகாம்.

மு. ஆனந்தராசன், பெல்காம்.

● கற்பின் தெய்வம் நம் கண்ணகி நகரறிய நகிலைத் திருகி வட்டித்தெறிந்தமை, அவட்கும் அவளொத்த நாணுடை நங்கையர்க்கும் நற்செயலாகுமோ? 'இந்நகர் தீயுண்க!' என நவிலத்தகும் நாச்சொல் ஒன்றே கற்பின் நல்லாளாகிய கண்ணகிக்குச் சாலாதோ?

○ கற்புடை மகளிர் பெருஞ் சினத்தில் நகிலைத் திருகி யெறிவதென்பது சிலப்பதிகாரம் தவிர வேறெத் தமிழ் நூலிலும் சொல்லப்படவில்லை.

> ''நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
> முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
> படையழிந்து மாறின னென்றுபலர் கூற
> மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டவென்
> முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
> கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
> செங்களந் துழவுவோள்..............''

என்னும் புறச் செய்யுள் (278) போன்றவற்றில், போர்க்களத்திற் புறங்கொடுத்தோடியவன் உண்ட நகிலைத் தாய் வாளால் அறுத்தெறியும் செய்தியே சொல்லப்படுகின்றது. மேலும், நகிலைக் கையால் திருகிப் பிடுங்க வியலுமோ வென்பது ஆராய்ச்சிக்குரிய செய்தி. கண்ணகி தன் நகிலைக் கையாற் பறித்தெறிவது போற் சைகை மட்டுங் காட்டித் தன் பெருஞ்சினத்தைக் குறிப்பித்திருக்கலாம். ஊரை யெரியுண்ணச் சாவித்தற்குச் சொல்லே போதும். அவள் மெய்யாய்த் தன் நகிலைத் திருகியெறிந்திருப்பின், அதனால் ஏற்பட்டிருக்கும் புண்ணைப் பதினான்கு நாள் எங்ஙனம் தாங்கியிருக்கவும், அதன் நோவொடு சேரநாட்டு நெடுவேள் குன்றம் சென்றேறியிருக்கவும், முடியும்? அவள் கற்பும் சினமும் மருத்துவத்திற்கு இடந்தந்திருக்காதென்பது தேற்றம்.

இனி, அவள் நெடுவேள் குன்றம் ஏறிவிழுந்திறந்தபோது ஒரு முலை சேதப்பட்டுப் போயிற்றென்று கொள்ளலுமொன்று.

சு. ஆறுமுகம், அருப்புக்கோட்டை.

● The more popular word in Tamil derived from Acarya in Asiriyer'' என்று பர். எஸ். கே. நாயர் என்பவர் 'பேராசிரியர் இரா. பி. சேது' மலரில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், எம் ஆசிரியர், ஆசிரியர் எனுஞ் சொல்லை ஆசு + இரியர் என்று பிரித்துக் காட்டிக் கற்பித்துள்ளார். எந்த முடிவு ஏற்புடைத்து?

○ ஆசிரியன் என்னும் சொல்லை ஆசு + இரியன் என்று பிரிப்பதே ஏற்புடைத்து. சேதுப் பிள்ளை நினைவு மலர்க் கட்டுரையாசிரியரெல்லாரும் மொழிநூற் பேரறிஞரல்லர்.

அறிவன், பறம்புக்குடி.

● தமிழிற் புலமைபெற முறையாகப் பயிலவேண்டிய நூற்கள் யாவை?

○ மறைமலையடிகளின் உரை நடை நூல்கள், தனிப் பாடற்றிரட்டு, நாலடியார், திருக்குறள், திருக்கோவை, சிலப் பதிகாரம், சீவக சிந்தாமணி, பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, நன்னூல், யாப்பருங்கலக்காரிகை, தொல்காப்பியம் ஆகிய நூல் களை மறைமலையடிகள் வழித் தமிழாசிரியர்பாற் கற்க.

இரா. பாலகிருட்டிணன், மதுரை.

● தமிழ் மொழியில் எழுத்துச் சீர்திருத்தம் தேவையா? ஆம் எனில் அது எவ்வாறு ஆக்கவேண்டும்?

○ ஈ என்னும் எழுத்தை முன்போல் 'இ' என்னுங் குறி யாற் குறிக்கலாம். ஒள, கௌ முதலிய ஒளகார எழுத்துகளின் 'ள' என்னும் துணைவரியை, ளகர வடிவினின்றும் பிரித்தறிதற் பொருட்டுச் சற்றுச் சிறிதாக்கல் வேண்டும். இவை தவிர வேறு திருத்தம் வேண்டியதில்லை.

நை. கு. குப்புசாமி, சேலம்.

● இன்று சிறந்ததாகக் கருதப்பட்டுவரும் பண்டைக் காலத் தமிழ்ச் சுவடிகளைத் தேடினால் இன்னும் அவற்றில் சிலவேனும் கிடைக்கப் பெறுவோமா? தற்போது (உ. வே. சா. விற்குப் பிறகு) பழைய நூல்களைத் தேடுவதில் ஈடுபட் டுள்ள தமிழறிஞர்கள் யாவர்?

○ இன்றைத் தமிழ்நாட்டில் மட்டுமன்றி மலையாள நாட்டி லும் யாழ்ப்பாணத்திலும் தேடினால், ஏதேனும் யாங்கேனும்பழந் தமிழ்ச் சுவடி கிடைக்கலாம். மேனாடுகளிலும் தேடிற் கிடைக் கும். எனக்குத் தெரிந்தவரை, பழந்தமிழ் ஏட்டுச் சுவடிகளைத் தேடுவதில் ஈடுபட்டுள்ளவர் இன்று ஒருவருமில்லை.

பெ. கிருட்டிணசாமி, சென்னப்பநாயக்கன்பாளையம்.

● தென்னாற்காடு, தென்னார்க்காடு இவற்றில் எது சரி? ஏன்?

○ 'தென்னார்க்காடு' என்பதே சரி. இங்ஙனமே 'வடார்க் காடு' அல்லது 'வடவார்க்காடு' என்பதும், ஆர்க்காடு என்னும் ஊராற் பெயர் பெற்றிருந்த ஒரு பெருமாவட்டம் பின்பு வடக்கும் தெற்குமாக இரு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது.

ஆர்க்காடு என்னும் ஊர் வேலூர் வட்டத்தைச் சேர்ந்தது; மிகப் பழமையானது. ''அழிசி யார்க்காடு'' என்று குறுந்தொகை யிலும் (258), ''அரியலங் கழனி யார்க்காடு'' என்று நற்றிணை யிலும் (190), வந்துள்ளது. ஆர் = ஆத்தி. ஆர்க்காடு = ஆத் திக்காடு. இச் சொல்லைப் புராணிகர் ஆறுகாடு என்று பிறழக் கொண்டு, வடமொழியிலும் சடாரணியம் என்று மொழிபெயர்த்து விட்டனர். ஷட் = ஆறு. ஆரணியம் = காடு.

*

பொருளடக்கம்

சுவடி-1 ஓலை-7

ஆவணி-தி.பி.1994

மொழியுரிமை காப்பது மொழிவெறி ஆகுமா?	(ஆசிரியவுரை)	3
வடமொழி வரலாற்றுச் சுருக்கம்—பாவாணர்		11
தமிழ்மொழி வழி அரசியல்		19
அவள் பெருமை!	(பாட்டு)	23
அணங்குகொல்! ஆய்மயில் கொல்லோ!		24
காதற் கிளர்ச்சி!	(பாட்டு)	27
இழப்பீடு	(சட்டவியல்)	28
ஆங்கில மொழியாக்கம்		31
வாழ்வியற் போலிகள்	(கற்பனை ஊற்று)	33
ஆல்பர்ட் சுவைட்சர்	(வரலாறு)	39
கல்வி-விவேகானந்தர்		54
மறுமணம்	(சிறுகதை)	59
எண்சுவை என்பது	(இலக்கியம்)	66
வறுமையின் பெருமை		73

மற்றும்

கேள்விச் செல்வம், நூல் நிறை, வேறென்ன சொல்வது?

விலை 50 காசு